
ஏப்ரல் 2016
OLIARAZI
மகளிர் மாத சஞ்சிகை
ஒளி அரசி
இல்லத்தரசிகளின் தோழி
நல்லதொரு குடும்பம்
இதழ் 05
ஒளி 03
பக்கங்கள் : 84 (68 + VIII + VIII)
ரூபா 75
அன்பு + அறிவு + அழகு + திறன் + முயற்சி + வெற்றி + பொழுதுபோக்கு
திருத்தற் சேவையுடன் தரம் 5 வினாத்தாள்
இலங்கையிலிருந்து ஓர் அற்புதப்படைப்பு
கலைப்பிரிவின் பொக்கிஷம்
அரங்கமே அதிர்ந்த குட்டிக்கதை
நாயகிக்கு அகவை 54
சமுதாய வலையில் பெண்கள்
வரலாற்றில் தடம்பதித்த அரங்கேற்றம்
புதுவருட சிறப்பிதழ்


TASTER'S
வறுத்த சிவப்பு, வெள்ளை அரிசிமா
அம்மாவின் கைகளால்
செய்தது போல...
வாடிக்கையாளர்களுக்கு
இனிய புதுவருட
நல் வாழ்த்துக்கள்
பிட்டு, இடியப்ப மா
TASTER'S
Roasted White Rice Flour
1Kg
TASTER'S
Roasted Red Rice Flour
1Kg
வறுத்த சிகப்பு அரிசிமா
බැදපු රතු හාල් පිටි
A PRODUCT OF NORTHERN FARM PVT LTD.,
100% PURE
VEG
டேஸ்ரர்
அரிசிமா
எந்தவிதமான இரசாயன
சேர்வையும் அற்றது
உயர்தரமான சுகாதார
முறைப்படி தயாரிக்கப்பட்டது
முற்றிலும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களைக்
கொண்டு தயாரிக்கப்படுகின்றது.
தயாரித்து விநியோகிப்போர்
நொதேன் பாம் தனியார் நிறுவனம்
மருக்காரம்பளை, வவுனியா. தொ.பேசி: 024 205 2141


# சித்திரை மாத கொன்றைப் பூக்கள்



தமிழரும் சித்திரைப் புத்தாண்டும் 06



எப்போதும் தோல்வி! என்ன செய்யலாம்? 07


தந்தையின் முகநூல் மகளுக்கு ஆப்பு! 10


**பை - இயக்குனர் சிவராஜ் சொல்லும் கதை** 13


உணர்வுகளே உள்ளத்தின் திறவுகோல் 14


விண்ணிலிருந்து பேசுகிறோம் 17


**Shrilanka** நன்மைதரும் ஜோதிடர் சிவராசா 24


26 நடத்தைப்பிறள்வுகளும் ஆசிரியர்களும்


31 கழுகுப்பார்வையும் திண்ணைச்சங்கதியும்


37 அழகன் - பேரழகன்


40 ஆத்திரத்தில் பெற்ற அறிவு


42 நம்ம குடும்பம் நல்ல குடும்பம்


44 அந்த ட்ரிங் மாதிரி வருமா?


52 மலையக அவலம்; உண்மை நிலை என்ன?


மேலதிக உள்ளடக்கங்கள் 67 ஆம் பக்கத்தில்





ஒளிஅரசியின்தாயான(நிர்வாகஇயக்குநர்) திருமதி யசோதை சரவணபவனின் வழிகாட்டலுடனும் நிதிப்பங்களிப்புடனும் இடம் பெற்றுவரும் உதயவாழ்வு செயற்றிட்டத்தின் ஒரு பிரிவான வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவன 8ஆவது அணி - வட்டுக்கோட்டை பயிலுநர்களின் ஆக்கக் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் 26.03.2016 அன்று வட்டுக்கோட்டையில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் நிர்வாக இயக்குநர் யசோதை சரவணபவனின் 54ஆவது பிறந்த தினத்தை பயிலுநர்கள் கேக் வெட்டிக் கொண்டாடினார்கள். இந்த நிகழ்வில் பங்குபற்றிய பிரமுகர்களைப் படங்களில் காணலாம்.

மேலும்.... → 65

ஒளிஅரசி

மாதம் ஒரு முறை

ஏப்ரல் 01 - 30, 2016

நியூ விஷன் மீடியா சின்டி கேற் பிறைவேட் லிமிடட் - ஆசிரியர் குழுவால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

**வடிவமைப்பு :**

என்.ஜெகாதரன்

**ஆசிரிய பீடம் :**

தொலைபேசி :

0114320695, 0114321111

துரித அழைப்பு : 0718628369

தொலைநகல் : 0114322614

E-mail : oliarazi33@gmail.com

**விளம்பரப் பிரிவு**

0714273035, 0714114997

**பிரதிகளைப் பெற்றுக்கொள்ள :**

தலைமை அலுவலகம்

கொழும்பு : 0115737592

இதர மாவட்டங்கள்

வடக்கு : 0776569617

: 0718628379

வவுனியா : 0772772726

கிழக்கு : 0718724057

மலையகம் : 0718724056

**வருட சந்தா விபரம்**

ரூபா 780 (தபால் செலவு நீங்கலாக)

வெளிநாடு

U.S.A - 30 $

U.K - 20 £

**கடிதம், போட்டித் தொடர்புகளுக்கு :**

ஆசிரியர், 'ஒளிஅரசி'

இல. 85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.

**வட மாகாணத் தொடர்புக்கு:**

ஆசிரியர், 'ஒளிஅரசி'

உதயன் பணிமனை

இல. 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

**ஒளி அரசியின் வாசக நெஞ்சங்கள் அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.**

# ஒன்றரைக்கோடி ரூபா

இன்றைய சமூகப் பிரச்சினைகள் பலவற்றை வாசகர்களுடன் அலசி ஆராய்வதில் நிறைவடையும் ஒளிஅரசி இம்மாதத்திலும் பாரிய தொரு பிரச்சினையை உங்களுக்காகத் தருகின்றாள். இன்றைய உலகம் உயரிய முன்னேற்றங்களையும் பல்வேறு வகையான அபி விருத்திகளையும் அடைந்துவிட்டபோதும் கடுமையான செயற்கை அழிவுகளையும் எதிர்நோக்கிக்கொண்டு தான் உள்ளது. பார்வைக்கு சாதாரணம் போல தோன்றினாலும் இவ் அழிவுகள் காலப்போக்கில் சமூக அழிவிற்கே வித்திடுபவையாக உள்ளன. அந்த வகையில் நாம் அறியவேண்டிய ஒரு தீவிர பிரச்சினைதான் மதுப்பாவனையும் அதன் கோர வடிவங்களும். அண்மையில் கெல்த் லங்கா நிறுவனப் பணிப் பாளரும் பொதுச்செயலாளருமான சட்டத்தரணி சத்தியநாணயக்கார கூறிய ஒரு அதிர்ச்சிக் தகவலை நாம் இங்கு பதிவிடுகின்றோம்.



**இலங்கையிலுள்ள கிராமம் ஒன்று ஆண்டொன்றுக்கு ஒன்றரைக்கோடி ரூபாவுக்கு மேலாக சிகரட் மற்றும் மதுசாரங்களுக்குச் செலவிடுகின்றது என்பதே அத்தகவலாகும்.** எமது நாட்டில் 300 தொடக்கம் 350 வரையான கிராமங்கள் உள்ளன எனின், அழியும் பணத்தொகையின் அளவைக் கணக்கிட்டால் நாட்டின் வீழ்ச்சி எங்கே சென்றுமுடியும் என்பது புரியும். அனைவருக்கும் குடி ஒரு தற்காலிக இன்பமாக விளங்குகின்றது. அதுமட்டுமன்றி இன்றைய இளைஞர்கள் பலரும் குடிப்பதை ஒருவித நாகரீகமாகவே கருதுகின்றனர். இன்றைய சமூக வன்முறைகளின் அதிகரிப்பிற்குப் போதைப்பாவனையே பிரதான காரணமாக உள்ளது. குடும்பத்தலைவன் ஒருவன் குடிப்பதற்கு பல காரணங்களைச் சொல்லலாம். ஆனால் எந்தக் காரணத்திற்கும் குடியினால் தீர்வு கிடைக்காதென்பது யாருக்கும் புரிவதில்லை இக் கொடுமையான செயலால் பாதிக்கப்பட்டு பரிதாபமாக நிற்பது அவர்களின் தாய், மனைவி, பிள்ளைகளே. ஒவ்வொரு வீட்டிலும் குடும்ப பாரத்தைச் சுமப்பவர்கள் இல்லத்தரசிகளாகவே உள்ளனர். **இல்லத்தரசியின் இணையற்ற பொறுமையும் அன்பும் கனிவும் எந்த வன்மத்தையும் கரைத்துவிடும் வல்லமைகொண்டது.** ஒவ்வொரு இல்லத்தரசியும் இவ்விடயத்தை மென்மையாக, முறையாக அணுகினால் எமது சமூக தேச அழிவை முற்றுமுழுதாக தடுக்காவிட்டாலும் ஓரளவேனும் குறைக்க முடியும் என்பது திண்ணம். பிறக்கப்போகும் புத்தாண்டில் ஆணுக்குப் பெண் சரி நிகர் என்று அறைகூவிக்கொள்வதைக் காட்டிலும் வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கு வீட்டிலும் அயலிலும் முற்றுமுழுதாய் போராடும் போதே நல்லதொரு குடும்பம் எனும் இலக்கு நிறைவாகும். பெண்களாகிய ஒவ்வொருவரும் சிந்திப்போம், சீரமைப்போம் வசந்த காலத்தின் திறவுகோல்களாய் தடம் பதிப்போம் என உறுதிகொள்வோமாக.

- ஆசிரியர் குழு-

# திட்டமிடுவோம் வெற்றிபெறுவோம் (ஏப்ரல் 6 - மே 5)2016

வாசகர்களே! உங்கள் பிள்ளைகளின் கல்வி, பரீட்சை, பொதுப்பிரயாணம், ஏனைய முக்கிய நிகழ்வுகள், உரிய திகதிகளில் செய்ய வேண்டிய விடயங்கள் தொடர்பாக சுருக்கமாக இங்கு குறித்து வைத்து மறக்காது செயற்படுத்தி நல்லதொரு குடும்ப இலக்கை நோக்கிப் பயணிப்பீர்களாக. (பேனாவால் எழுதினால் வலிமை அதிகம்)

★ சுபநேரம் X எமகண்டம் ○ பொது விடுமுறை

| | | |
|---|---|---|
| 06. புதன் (★ 4.38-6.08) (X 7.38- 9.08) | 07. வியாழ (★7.37-9.07) (X 6.07 - 7.37)<br>சுகாதார தினம் | 08. வெள் (★ 6.07 - 7.37) (X 3.07 - 4.37) |
| 09. சனி (★ 3.06- 4.36) (X 1.36 - 3.06) | 10. ஞாயி (★ 9.06- 10.36) (X 12.06 - 1.36) | 11. திங் (★ 12.06- 1.36) (X 10.36 - 12.06) |
| 12. செவ் (★ 10.36- 12.06) (X 9.06 - 10.36)<br>விண்வெளிதினம் | 13. புதன் (★ 4.36- 6.06) (X 7.36 - 9.06) ○<br>தமிழ் சிங்கள புத்தாண்டு | 14. வியா (★ 7.35 - 9.05) (X 6.05 - 7.35) ○<br>தமிழ் சிங்கள புத்தாண்டு |
| 15. வெள் (★ 6.04 - 7.34) (X 3.04 - 4.34) | 16. சனி (★ 3.04 - 4.34) (X 1.34 - 3.04) | 17. ஞாயி (★ 9.04-10.34) (X 12.4 - 1.34) |
| 18. திங் (★ 12.03 -1.33) (X 10.33 - 12.03) | 19. செவ் (★ 10.32 - 12.02) (X 9.02 - 10.32)<br>மரவுரிமை தினம் | 20. புதன் (★ 4.32 - 6.02) (X 7.32 - 9.02) |
| 21. விய (★7.31- 9.01) (X 6.01 - 7.31) ○ | 22. வெள் (★ 6.01-7.31) (X 3.01 - 4.31)<br>புவி தினம் | 23. சனி (★ 3.00 - 4.30) (X 1.30 - 3.00) |
| 24. ஞாயி(★ 9.00 - 10.30) (X 12.00 - 10.30) | 25. திங்(★ 12.00 - 1.30) (X 10.30 - 12.00) | 26. செவ் (★ 10.29 -11.59) (X 8.59 - 10.29) |
| 27. புதன் (★ 4.29 - 5.59) (X 7.29 - 8.59) | 28. வியா (★ 7.28 - 8.58) (X 5.58 - 7.28) | 29.வெள்(★ 5.58 - 7.28) (X 2.58 -4.28) |
| 30. சனி (★ 2.58 -4.28) (X 1.28 - 2.58) | 01. ஞாயி (★ 8.57 - 10.7) (X 11.57 - 1.27) ○<br>தொழிலாளர் தினம் | 02. திங் (★ 11.57 - 1.27) (X 10.27 - 11.57) |
| 03. செவ் (★ 10.26 - 11.56) (X 8.56 - 10.26)<br>பத்திரிகை சுதந்திர தினம் | 04. புதன் (★ 4.26 - 5.56) (X 7.26 - 8.56) | 05. வியா (★ 7.26 - 8.56) (X 5.56 - 7.26) |

# தமிழர் வாழ்வில் சித்திரைப் புத்தாண்டு

இந்துக்களின் தமிழ் புதுவருடம் சித்திரை மாதத்தில் ஆரம்பமாகிறது. அதாவது, மேஷ ராசியில் இருந்து மீன ராசி வரை 12 ராசிகள் சூரியன் செல்லும் கதியை நிர்ணயிக்கின்றன. ஒவ்வொரு ராசியிலும் சூரியன் வரும்போது தமிழ் மாதம் பிறக்கின்றது. சூரியன் சஞ்சரிக்கும் மாதங்களே ஒவ்வொரு சூரிய மாதமாகக் கணக்கிடப்படுகிறது. சித்திரை முதல் பங்குனி வரை 12 மாதங்களைக் கொண்டதே ஒரு தமிழ் வருடமெனக் கொள்வது எம்முடைய மரபாகும்.

தமிழ் வருடம் சூரியனை முதலாவதாகக் கொண்ட காரணத்தால் சௌரமானம் எனப்படுகிறது. அதாவது சூரிய தேவனை முழுமுதலாகக் கொண்டு புது வருடத்தைக் கணிப்பதாகும்.

அதுபோல சந்திரனைக் கொண்டு கணக்கிடும் முறை சாந்தரமானம். இம்முறை மூலம் புது வருடத்தைக் கணிப்பவர்கள் ஆந்திர தேசத்தைச் சேர்ந்த தெலுங்கர்கள் ஆவர். கேரள தேசத்தவர் தமது ஆண்டு முறைமையை கொல்ரம் என்று கூறுகிறார்கள். ஆண்டுகளை கணிக்கும் முறையில் இனத்திற்கு இனம் வேறுபாடு காணப்படுகின்றது.

சர்வதேச ரீதியில் ஜனவரி முதல் டிசம்பர் வரையான 12 மாத காலப் பகுதியை ஆங்கில ஆண்டாக கணிக்கிறார்கள். ஏப்ரல் மாத நடுப்பகுதியில் வருகின்ற சித்திரை மாதப் பிறப்புடன் தமிழ் புதுவருடம் ஆரம்பமாகிறது. இதையே சிங்கள பௌத்த மக்களும் தமது வருடப் பிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். இது இரு இன மக்களிடையே காணப்படும் மிக முக்கியமான ஒற்றுமையாகும். பண்டிகைகள் யாவும் எமது இனத்தின் பண்பாடு, கலாசாரம் இவற்றின் அடையாளமாய் உருவானவை. இதன் காரணமாக தமது மனதிலுள்ள துன்பங்கள், துயரங்கள், கோபம், பழைய பகைமை உணர்வுகள் ஆகியவற்றை மறந்து மன்னித்து ஒரு புதிய உணர்வுடன் புதுவருடத்தை வரவேற்கும் பொருட்டு நம் பெரியவர்கள் கொண்டாட்டங்களை அமைத்துள்ளார்கள்.

சித்திரைப் புத்தாண்டு எப்போது கொண்டாடப்படுகிறது? இதற்கு எழுத்து மூலமான சரியான ஆவணம் நம்மிடம் இல்லை. வேங்கை மரம் பூக்கும் இளவேனில் கால சித்திரையில் புதுவருடத்தை கொண்டாடும் வழக்கம் நம் முன்னோர்களிடம் இருந்துள்ளது. அதிகாலையில் எழுந்து மருத்து நீர் தேய்த்து நீராடுவது பழங்காலம் தொட்டு செய்துவரும் மரபாகும். புதுவருடத்தன்று புண்ணிய காலத்தில் தலையில் விளா இலையும் காலில் கடப்ப இலையும் வைத்து மருத்து நீர் கொண்டு நீராடி பொன்னிறப் பட்டாடை அல்லது வெள்ளை, சிவப்புக் கரை அமைந்த பட்டாடை அணிந்து சந்தனம் பூசி நறுமலர்கள் சூடி மகிழவேண்டும். அத்துடன் குலதெய்வங்களை வணங்கி சூரியனுக்குப் பொங்கலிட்டு புதுவருடத்தைக் கொண்டாட வேண்டும். தற்போது மன்மத வருடத்தைக் கடந்து துர்முகி வருடத்தில் அடியெடுத்து வைத்துள்ளோம். மன்மத வருடம் என்றதனால் தானோ என்னவோ மன்மத லீலைகளும் பிஞ்சுக்களைக் காவுகொள்ள வைத்திருக்கின்றது. ஓயாத போராட்டங்களும் கூட யாரையும் எதனையும் மாற்றவில்லை. மலரும் துர்முகி வருடமாவது இன்னல்கள் களைந்த இனியதொரு ஆண்டாய் மலரட்டும். உறவுகள் கூடி விருந்துண்டு மகிழ்ந்து இனிமை துலங்கும் அந்நாள் இப்போது பெயரளவுப் பெருநாளாகவே விளங்குகின்றது. புதுவருடப் பிறப்பென்றால் மருத்து நீரும் கைவிசேடமும் சட்டென ஞாபகம் வரும். இப்போது அவையெல்லாம் மாறிவிட்டன. முகநூலில் வாழ்த்துவதுடன் தொலைபேசியிலும் வாழ்த்து தெரிவித்துவிட்டு அடுத்த வேலைக்காய் புறப்பட்டு விடுகின்றோம். இன்றைய அவசர உலகில் பண்டிகைகள் இயந்திரமயமானதாக மாறிவிட்டது என்பது உண்மைதான். ஆனாலும் நாம் ஒரு விடயத்தைச் சிந்திக்க வேண்டும். இன்று அவசரமாய் உணரப்படும் இவ்விடயம் காலப்போக்கில் பாரிய பின்விளைவை உண்டுபண்ணி எமது இனத்தின் அடையாளத்தை அழித்துவிடும் என்பது திண்ணம். உறவுகள் என்ற பாரிய சக்தியின் வலிமையையும் எமது பிள்ளைகள் அறியாது விட்டுவிடுவார். மாமன், மச்சான், சகலன், சித்தப்பன் என்ற உறவுக் கட்டமைப்பே தமிழரின் பலமாக விளங்கியது எனலாம். ஆனால், இன்றைய சந்ததி அதனை அறியாது தனித்தவர்களாகவே வாழ முற்படுகின்றனர். இந்நிலையை மாற்ற அனைத்து உறவுகளும் ஒன்றிணைவோம்.



நன்றி - (பெட்டகம் மலர்) தமிழ்நிலா






ஒளி அரசி

# எப்போதும் தோல்வி,எல்லாமே நஷ்டம். என்ன செய்யலாம்?




தூண்டிலோடு கரையில் நிற்பவன் கண்களில் 100 மீன்கள் தென்படும். எல்லாவற்றுக்கும் ஆசைப் பட்டு தூண்டிலை இப்படியும் அப்படியும் நகர்த்திக் கொண்டே இருந்தால் ஒன்றுகூடச் சிக்காது. எதிலும் நிலைத்திருக்காமல் இதுவா அதுவா என்று மாறிமா றித் தேடினால் எதிலும் திருப்தி கிடைக்காது.

உங்கள் திறமை எது என்று புரிந்துகொள்ளாமல் அதை முழுமையாகப் பயன்படுத்தாமல் இருப்பது உங்கள் வாழ்க்கையில் நேரும் மிகப்பெரும் துக்க மாகும்.

ஒருவருக்கு கிரிக்கெட் வெறும் விளையாட்டு. இன்னும் சிலருக்கு அது வெறும் கேளிக்கை. விளை யாடுபவருக்கோ அதுதான் வாழ்க்கை. எதையும் அணுகும் கோணத்தில் ஒருவருக்கொருவர் வித்தி யாசப்படுவதில்தான் வாழ்க்கையின் சுவாரஸ்யமே இருக்கிறது. உங்களுக்கான தொழிலோ பணியோ எது என்பதில் தெளிவு வேண்டும்.

சங்கரன் ஒரு தெர்மாஸ் ஃபிளாஸ்க் வாங்க கடைக்குப் போயிருந்தார்.



இது சூடான பொருட்களை ஆறு மணி நேரங் களுக்குச் சூடு குறையாமலேயே வைத்திருக்கும் என்றார் விற்பனையாளர். குளிரான பொருட்களை குறைந்தது ஆறு மணி நேரங்களுக்கு அதே குளிர்ச் சியுடன் வைத்திருக்கும். சங்கரன் ஃபிளாஸ்க்கை வாங்கிக்கொண்டு வீட்டிற்குப் போனார். உங்க ளைக் கடைக்காரன் ஏமாற்றி இருப்பான் என்றாள் அவருடைய மனைவி. அதைக் கண்டுபிடிக்கத்தான் வரும் வழியிலேயே சுடச்சுட காபியும் ஜில் என்று குல்ஃபியும் வாங்கி வந்து இருக்கிறேன் என்றார். சங்கரன் இப்படி ஒரே சமயத்தில் இதுவாகவும் இருக்க வேண்டும் அதுவாகவும் இருக்க வேண்டும் என்று நினைத்தால் என்னாவகும் யோசியுங்கள். மாடு மாதிரி உழைத்தேன் பலன் இல்லை என்று புலம்புவதிலும் அர்த்தம் இல்லை. எவ்வளவு நேரம் உழைக்கிறீர்கள் என்பதைவிட ஒவ்வொரு கட்டத்திலும் உங்கள் திறமையை முழுமையாகப் பயன்படுத்துகிறீர்களா என்பதுதான் உங்கள் வெற் றிகளை நிர்ணயிக்கிறது.

மூன்று மாதங்களுக்கு முன்பு வகுப்புக்கு வந் திருந்த ஓர் அம்மா வாழ்க்கையை வெறுத்து ஐந் துமுறை தற்கொலைக்கு முயற்சி செய்தவள் நான் என்று ஆரம்பித்தார். நான் உடனே, நிறுத்துங்கள் அம்மா போதும்! என்றேன். வாழ்வதுதான் கஷ்ட மான வேலை. சாவது கூடவா? தற்கொலை செய் துகொள்ளவே ஐந்துமுறை முயற்சித்துத் தோற்றார் என்றால் வாழ்க்கையைக் கையாள்வதில் அவரு டைய திறன் எப்பேர்ப்பட்டதாக இருக்க வேண்டும், நீங்கள் திட்டமிட்டபடி எதுவும் நடக்கவில்லை எல் லாமே இயற்கையின் விருப்பப்படிதான் நடக்கிறது என்கிறீர்கள். அப்படி இருந்தும் இன்னும் இந்த உலகில் வாழ்கிறீர்கள் என்றால் உங்களைச் சுற்றி உள்ளவர்கள் உங்களிடம் மிக நல்லவர்களாக நடந் துகொண்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. உங் களை நீங்களே அதிர்ஷ்டம் கெட்டவராக நினைத்துக் கொள்வது எனக்கு ஒரு கதையை நினைவுபடுத்துகி றது. அரசன் ஒருமுறை வேட்டைக்குப் புறப்பட்ட போது முதலில் நாவிதன் ஒருவன் எதிர்ப்பட்டான்.

எவ்வளவு அலைந்து திரிந்தும் வேட்டையில்

→ 09

ஒளிஅரசி

# 1  2  ?

# கைகளைக் குவித்து... கண்களை மூடி...

குறைவாகப் பேச வேண்டும், அதிகமாகக் கேட்க வேண்டும், என்பதற்காகத்தான் ஆண்டவன் நமக்கு ஒரு வாயையும் இரண்டு காதுகளையும் கொடுத்திருக்கிறான், ஆனால், நம்மில் பலருக்கு உலகிலேயே இனிமையான ஓசை நம் சொந்தக் குரல்தான். அதனால்தான் பலர், தாங்கள் பேசும் வார்த்தையில் அர்த்தம் இருக்கிறதோ இல்லையோ... ஓயாமல் பேசிக் கொண்டே இருப்பார்கள்.

மேலைநாட்டுச் சித்தாந்தத்திலும் சரி, நமது முன்னோர்கள் சொன்ன முக்கிய தத்துவத்துவங்களிலும் சரி... கேட்பது என்பதற்காக நிறைய முக்கியத்துவம் கொடுக்கின்றவர்கள் மற்றவர் பேசுவதை நாம் கேட்க வேண்டும் என்றால், முதலில் நாம் பேசுவதை நிறுத்த வேண்டும், ஆனால், நமக்குத் தான் அது பிடிக்காதே. பெண்மணி ஒருத்தி கைகளைக் குவித்து கண்களை மூடி மேரி மாதாவை நோக்கிப் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தார், அதைப் பிரார்த்தனை என்று கூடச் சொல்ல முடியாது, எனக்கு அது வேண்டும்... எனக்கு இது வேண்டும்... கடவுளிடம் விண்ணப்பப் பட்டியல் படிப்பது மாதிரி இருந்தது அவளின் நீண்ட பிரார்த்தனை.

புகழ் பெற்ற ஓவியர் மைக்கேல் ஏஞ்செலோ, அவளைக் கேலி செய்வதற்காக மறைவிலே நின்று கொண்டு, பிதாகுமாரனான யேசு பேசுகிறேன்... பக்தையே, உனது பக்தியை மெச்சினோம் உனக்கு என்ன வேண்டும்...? என்று

கேட்க - அந்தப் பெண்மணி, ''சும்மா இருங்கள் ஜீசஸ் நான் உங்கள் தாயிடம் பேசிக் கொண்டிருக்கிறேன், தொந்தரவு செய்யாதீர்கள்'' என்றாளாம்

அதாவது, பேசுவதில் ஒருவருக்கு ஆர்வம் வந்துவிட்டால் எதற்குப் பேசுகிறோம் என்ற நோக்கம் கூடப் பின்னால் தள்ளப் பட்டுவிடுகிறது, பேசுவதால் கிடைக்கக் கூடிய மகிழ்ச்சிக்காகவே பலர் முடிவில்லாமல் பேசுகிறார்கள் பேசுவதைநிறுத்திக் கொண்டு, அடுத்தவர் பேசும் பேச்சைக் கேட்டாலும், அதைச் சரியான அர்த்தத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியது, அதைவிட முக்கியமானதாக இருக்கிறது,

புத்தர் ஒரு சமயம் தன் சீடர் ஒருவருக்கு, ''தினமும் தூங்குவதற்கு முன் உன் கடமையைச் செய்ய மறக்காதே...'' என்று அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தார். பக்கத்திலே புதரிலே மறைந்திருந்த ஒரு திருடனும் இதைக் கேட்கிறான். அவன் பரம்பரைத் திருடன். புத்தர் சொன்னதைக் கேட்டுவிட்டு, என் கடமை திருடுவது. தினமும் திருடிவிட்டுத்தான் தூங்க வேண்டும் என்று அந்தத் திருடன் அர்த்தம் எடுத்துக்கொண்டானாம். பைபிளில் SillyChrist' என்று ஒரு சொற்றொடர் உண்டு, 'Silly' என்பதற்கு இன்றைய காலக்கட்டத்தில் அர்த்தம் வேறு, ஆனால் பைபிள் காலத்தில் 'Silly' என்றால், சூதுவாது தெரியாத Innocent என்று அர்த்தம், அந்தக் காலத்து அர்த்தத்தில் புனையப்பட்ட இந்தச் சொற்றொடரை இந்தக் காலத்து அர்த்தத்தில் புரிந்து கொண்டால் எந்த அளவுக்கு மனவருத்தம் உண்டாகும் பாருங்கள்,

அர்த்தம் புரியாமல் தப்பாக எடுத்துக் கொள்வது ஒருவகை என்றால், பல சமயம் நாம் திறந்த மனதுடன் பிறர் சொல்லும் கருத்துக்களை கவனிப்பதில்லை, பேசுகிறவர் யார்...? அவர் இப்படிப் பேசுவதன் உள் நோக்கம் என்ன...? இந்தச் சந்தர்ப்பத்தில் ஏன் அவர் இந்தக் கருத்துக்களைச் சொல்ல வேண்டும்...? என்பதைத் தீர யோசித்து, அது நமது நன்மைக்காகத்தான் சொல்லப்படுகிறது என்று புரிந்து கொண்டு ஏற்றுக் கொள்ளும் பக்குவம் கூடப் பலருக்கு இருப்பதில்லை, காது கொடுத்துக் கேட்பதன் முக்கியத்துவம் பற்றி மேலைநாட்டு அறிஞர்கள் சமீப காலமாகத்தான் அதிகம் வலியுறுத்தத் துவங்கியிருக்கிறார்கள், ஆனால், இந்த விஷயம் இந்து மதத்தில் பல

ஆயிரம் வருடங்களுக்கு முன்பே சொல்லப்பட்டிருக்கிறது.

விநாயகக் கடவுளின் காதுகளை அகலமாகக் காட்டியிருப்பதற்கான காரணம், மற்றவர் பேசுகிற வார்த்தைகளை உன்னிப்பாக கவனமாகக் கேட்க வேண்டும் என்பதுதான்

சரி இதற்கு என்ன அத்தாட்சி என்று கேட்கலாம் மனிதன் எப்படி இருக்க வேண்டும்...? என்ன குணநலன்களோடு இருக்க வேண்டும்...? என்பதை விநாயகரின் ஒவ்வொரு அங்கமும் சொல்லுவதை வைத்துப் புரிந்து கொள்ளலாம்...

விநாயகரின் பெரிய வயிற்றுக்கும் அர்த்தம் உண்டு உலகில் எத்தனையோ கஷ்ட நஷ்டங்களை மனிதன் சந்திக்க வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் அவன் ஏற்று ஜீரணிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்க்குத்தான் விநாயகரின் பெரிய வயிறு ஒரு குறியீடு,

மனிதன் தனது திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான குறியீடுதான் விநாயகரின் துதிக்கை. பிரம்மாண்டமான பருத்த துதிக்கையால், தரையில் இருக்கிற சின்னஞ்சிறு ஊசியையும் எடுத்து விட முடியும் அதேசமயம், ஒரு பெரிய மரத்தையும் வேரோடு பிடுங்கி விட முடியும். மனிதன் தன் விருப்பு வெறுப்புகளை உடைத்தெறிந்தால்தான், அவன் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதைச் சொல்வதுதான் விநாயகரின் உடைந்த தந்தம் ஆசைகளை வெட்டியெறியச் சொல்வதற்குத்தான் விநாயகாரின் கையில் சின்னக் கோடாரி - இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்,

இந்தக் கருத்துக்களையெல்லாம் ஒரு காதில் வாங்கி, இன்னொரு காது வழியாக விடாமல் மூளைக்கு அனுப்பி வையுங்கள்,

எது சாரியான கருத்து? எது தவறான கருத்து? என்பதை உங்கள் அறிவே முடிவு செய்யட்டும், நான், விநாயகரிலிருந்துமைக்கேல் ஏஞ்செலோ, புத்தா என்று எல்லோரையும் துணைக்கு அழைத்துக் கூறிய கருத்துக்களை, வள்ளுவன் ஒன்றே முக்கால் வரிகளில் சொல்லிவிட்டார்,

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் - அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"



சுவாமி - சுகபோதானந்தா

## எப்போதும் தோல்வி...

அரசனுக்கு எந்த மிருகமும் சிக்கவில்லை. அந்த நாவிதனை இழுத்து வந்து தூக்கில் போடுங்கள். அவன் முகத்தில் விழித்ததுதான் எனக்குத் துரதிர்ஷ்டமாகிவிட்டது என்று அரசன் ஆணையிட்டான். நாவிதன் கதறக் கதற அரண்மனைக்கு இழுத்துவரப்பட்டான்.

தெனாலிராமன் இதைக் கேள்விப்பட்டான். அரசவைக்கு வந்தான். மன்னா எனக்குத் தெரிந்த இன்னொருவரின் முகம் இதைவிட துரதிர்ஷ்டமானது. அவருக்கும் இதே தண்டனை விதிக்கப்படுமா?

நிச்சயமாக, யார் அந்த இன்னொருவர்? நீங்கள்தான் மன்னா என்ன திமிர் உனக்கு! என்று அரசன்சீறினான். பொய் இல்லை மன்னா நாவிதன் முகத்தைப் பார்த்தீர்களா. உங்களுக்கு வேட்டையில்தான் வெற்றி இல்லை. ஆனால், காலையில் உங்கள் முகத்தைப் பார்த்த நாவிதனுக்கு உயிரேபோகப்போகிறது. எந்த முகம் அதிகத் துரதிர்ஷ்டவசமானது நீங்களே சொல்லுங்கள்! இப்போது சொல்லுங்கள்.

நீங்கள் அதிர்ஷ்டம் அற்றவரா? மேலே இருந்து உங்களைவிடச் சக்தி வாய்ந்த வேறு எவரோ உங்களை இயக்கிக்கொண்டு இருப்பதாக நினைப்பது எல்லாம் படுமுட்டாள்தனம். உங்களுக்கு நேர்வது ஒவ்வொன்றும் உங்களால் வரவழைக்கப்பட்டது. பிரச்சினை என்னவென்றால் பலசமயம் அதை நீங்கள் உணர்வதுகூட இல்லை. உண்மையில் எல்லாவற்றையும்விட மிகச் சக்தி வாய்ந்தது எதுவோ படைத்தலுக்கே மூல சக்தி எதுவோ அதுவே உங்களிடம்தான் இருக்கிறது. விழிப்புணர்வைவிட மிக்க சக்தி வாய்ந்த எதுவும் இங்கே இல்லை.

உங்கள் திறமை எது என்று புரிந்துகொள்ளாமல் அதை முழுமையாகப் பயன்படுத்தாமல் இருப்பது உங்கள் வாழ்க்கையில் நேரும் மிகப்பெரும் துக்கமாகும். இது உயர்ந்தது இது தாழ்ந்தது என்று மனதில் எதையும் நிர்ணயித்துக்கொள்ளாதீர்கள். எந்தத் தொழில் செய்ய விருப்பம் வந்தாலும் அதன் அடிப்படை நுணுக்கங்களை முழுமையாக முதலில் அறிந்து கொள்ளுங்கள்.

முழுத் திறமையைப் பயன்படுத்தாமல் செலவு செய்கிற ஒவ்வொரு நிமிடமும் வாழ்க்கையில் வீணடிக்கப்பட்ட நிமிடம். இதைக் கவனத்தில் கொள்ளுங்கள். 100 சதவிகிதத் திறமையைப் பயன்படுத்துங்கள். சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு கவனமாகச் செயலாற்றுங்கள். இயற்கை உங்களுக்குச் சாதகமாக வேலை செய்யத் துவங்கிவிடும்.

சத்குரு - இந்தியா- நன்றி இணையம்

# தந்தையின் முகநூல், மகளுக்கு ஆப்பு!

## பெற்றோர்களே அவதானம்!

வளர்ந்துவிட்ட தொழில்நுட்பமானது மனித வளர்ச்சியை, தொலைதூரம் கொண்டுசென்றுவிட்ட அதேவேளை அதனோடு மனிதனுடைய கலாசாரமும்தான் தொலைதூரம் சென்றுவிட்டது. விரல் விட்டு எண்ணமுடியாத அளவிற்கு சமூக வலைத்தளங்கள் அதிகரித்துவிட்டன.

சொந்தத் தேவைக்கு, குடும்பத் தேவைக்கு, காரியாலயத் தேவைக்கு என்று அவற்றை பயன்படுத்துவதற்கான காரணங்கள் அதிகமாகவே உள்ளன. வெளிநாடுகளிலே உள்ளவர்களோடு உரையாடுதல், நண்பர்களோடு தொடர்புகொள்ளல், உறவினர்களோடு உறவாடல் என்று பல்வேறுபட்ட நல்ல தொடர்பாடல்களையும் ஊக்குவித்தாலும் அதைவிட அதிகமாக பல பிழையான தொடர்புகளையும் அவை ஏற்படுத்தத் தவறவில்லை. அதன் பின்னணியிலேதான் இன்று சிறுவர்கள் முதற்கொண்டு வயோதிபர்கள் வரை மோகங்கொண்டுவிட்ட ஒன்றாக முகநூல் (FACE BOOK) காணப்படுகிறது. புதியவர்களோடு உறவாடி பிரிந்து செல்லும்போது தொலைபேசி இலக்கங்களைப் பதிவுசெய்த காலம் மருவி இன்று முகநூல் முகவரியை தாருங்கள் என்று கேட்கும் அளவிற்கு அது சமூகத்தை ஆட்கொண்டுவிட்டது. இவ்வளவு ஏன், ஒரு வீட்டில் ஐந்து பேரென்றால் ஐந்து பேருக்குமே முகநூல் முகவரி இருக்கின்றதாம் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

ஒரு நாள் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்றிற்காய் சென்றிருந்தேன். கருத்தரங்கு முடிந்தவுடன் அனைவரும் கலைந்து செல்லும் வரை காத்திருந்து, உங்களைக் கொஞ்சம் சந்திக்க வேண்டும் என்றார் ஒரு பெற்றார். தான் ஒரு அரச அதிகாரி என்ற அறிமுகத்தோடு தொடர்ந்தது உரையாடல். உயர் தரத்தில் வர்த்தகப்பிரிவில் கல்வி பயிலும் அவரது ஒரேயொரு செல்ல மகளின் தற்போதைய நிலைபற்றியதுதான் அந்த உரையாடல். மிகவும் பாசத்தோடு வளர்த்த தனது மகளின் தற்போதைய நடத்தைகள் சற்று வித்தியாசமாய் இருப்பதாகவும் யாரையோ காதலிப்பது போல் தனக்கு சந்தேகம் இருப்பதாகவும், அதனால் மகளுடன் முன்பு போன்று பாசமாகப் பழக முடியாதுள்ளதாகவும் முறையிட்டார். முடிந்தால் எனது மகளுக்கு சில அறிவுரைகள் கூறுங்கள் என்றும் கூறினார். அதிஷ்டவசம், அவ்வேளை தந்தையுடன் செல்வதற்காக தந்தை பேசிமுடியும்வரை அருகிலே காத்துக்கொண்டிருந்தார் அப்பெண் பிள்ளை. உடனே தந்தையின் அனுமதியோடு அம்மாணவியோடு



சிறிதுநேரம் பேசினேன்.

தனது பேச்சுகளில் எவ்வித தயக்கமுமின்றி வினாக்களுக்கு விடையளித்தார் அந்த மாணவி. மாணவியின் துணிச்சலறிந்த நானும் நேரடியாகவே விடயத்துக்கு வந்தேன். பிரச்சினையைக் கூறினேன். அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு மீண்டும் பேசத்தொடங்கியபோது தனது சிறுவயது நண்பர் ஒருவர் தன்னைக் காதலிப்பதாகவும், நீண்டநாட்களாக அவர் தனது காதலைக் கூறியபோதும் தான் எதற்கும் காதுகொடுக்காமல் படிப்பிலே கவனம் செலுத்தியதாகவும், பின்பு ஒரு நாள் அவர் தந்த கடிதத்துடன் இருந்த தனது புகைப் படங்களைப் பார்த்துவிட்டு தனது மனமும் சற்று மாறியதாகவும், தற்போது இருவரும் காதலிப்பதாகவும், இது வீட்டிலே யாருக்கும் தெரியாததாகவும் கூறினார். அந்தளவிற்கு அந்த புகைப்படங்களில் என்ன இருந்தது என வினவினேன் ஆவலுடன்.

தனது குழந்தைப் பருவம் முதல் பத்து வயதாகும் வரையான முப்பத்தைந்து புகைப்படங்களும் அந்தப்புகைப்படங்களிலெல்லாம் உன் மீது கொண்ட அன்பினால் சிறுவயதிலிருந்தே சேமித்தேன் என்று குறிப்பிட்டு அதனோடு பெரிய கடிதமொன்றும் இருந்ததாகவும் கூறினார். எனது சிறுவயதுப்புகைப்படங்களையும் அந்தக்கடிதத்தையும் பார்த்தவுடன் அவர் மீதிருந்த கோபம் போய் காதல் வந்துவிட்டதாகவும் அந்தப் புகைப்படங்கள் யாவுமே இன்னும் தன் மனதில் சுவாரஸ்யமாய் நிலைத்திருக்கின்றதென்றும் தன்னையறியாது சந்தோசமாகக் கூறினார். என்னால் முடிந்தளவு சில ஆலோசனைகள் கூறி இருவரிடமும் இருந்து விடைபெற்றேன் இதற்கு ஒரு விடை காணவேண்டும் என்ற ஆதங்கத்துடன்.

தான் புகைப்படங்களை ரசித்த கதையின் சந்தோசத்தில் தன் காதலனின் பெயரையும் சொல்ல மறக்கவில்லை மாணவி. ஏதோ சுவாரஸ்யமொன்று இருக்கின்றது என்ற ஆர்வம் அந்த காதலனையும் தேட வைத்துவிட்டது. எப்படியோ குறிப்பிட்ட காதலனையும் ஒருநாள் இனங்கண்டுவிட்டேன். அவரிடமும் அனுமதியைப் பெற்றுக் கொண்டு வினாக்களைத் தொடுத்தேன். பல வருடங்களாக அந்தப்பெண்ணை காதலிப்பதாகவும் அவளின் மனதை மாற்றுவதற்காக பல சிரமங்கள்பட்டதாகவும் தற்போதுதான் ஒருவாறாக அது கைகூடியிருப்பதாகவும் கூறினார். ஏற்கனவே விடயங்கள் தெரிந்ததால் உண்மையிலேயே அந்தப் புகைப்படங்கள் நீங்கள் சேமித்தவைதானா, என்று கேட்டேன். சிறிது நேரம் தனக்குள்ளே சிரித்துவிட்டு விடயத்துக்கு வந்தார்.

ஒரு நாள் எனது முகநூலுக்கு அவளுடைய தந்தையிடமிருந்து ஒரு நட்பு கோரிக்கை (FRIEND REQUEST) வந்திருந்தது. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போன்று உடனே அதை நானும் ஏற்றுக்கொண்டுவிட்டேன். பின்பு இருவரும் முகநூல் நண்பர்களானோம். இவர் முகநூலுக்கு புதியவரென்பது எனக்குத் தெரியும். தலைப்பே இல்லாமல் அடிக்கடி புகைப்படங்களை பதிவேற்றம் செய்வார். இவ்வாறு ஒரு தடவை இவரின் மகளின் குழந்தைப்பருவத்துப் புகைப் படங்கள் சிலவற்றைப் பதிவேற்றம் செய்திருந்தார். அதை அதிகமானவர்கள் விரும்பியும் இருந்தார்கள். அதனால் அவர் அடிக்கடி மகளின் சிறுவயதுப் புகைப்படங்களை அதிகமாகப் பதிவேற்றம் செய்யத்தொடங்கிவிட்டர். இதைப்பயன்படுத்தி அந்தப் புகைப்படங்களை ஒவ்வொன்றாக சேமித்து அவளிடம் ஆவணமாக்க் கொடுத்தேன். அதைப்பார்த்த ஓரிரு தினங்களில் அவளாகவே எனக்கு சம்மதம் தெரிவித்தாள் என்றார். வியப்போடு விடைபெற்றேன் உண்மையைக்கூறியமைக்கு நன்றி கூறிக்கொண்டு.


இங்கு காதல் என்ற விடயத்தை விடுங்கள். சமூக வலைத்தளம் ஒரு பிள்ளையின் வாழ்வை எங்கு கொண்டு விட்டிருக்கிறது என்று பாருங்கள். பெண் பிள்ளைகளை முகநூல் பாவிப்பதற்கு ஒரு போதும் அனுமதிக்க வேண்டாம் என விழிப்புணர்வை நடத்திவிட்டு வந்த எனக்கு, ஒன்றுமே புரியவில்லை. பெண்பிள்ளைகளை ஒழுக்கமாக வளர்க்கிறோம் என்று பறைசாற்றிக் கொள்பவர்கள் எங்கோ தவறு விடுகிறார்கள். சமூக வலைத்தளங்களை நன்மைக்காக மட்டும் பயன்படுத்துவதென்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல அதனால்தான் அவற்றைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பல்வேறுபட்ட பிரசாரங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

நாம் அவற்றைத் தவிர்த்தாலும் அவை எம்மை விட்டுவைக்காது. அதுதான் இந்தப் பிள்ளையினுடைய வாழ்விலும் நடந்திருக்கிறது. தந்தைமார் மட்டுமல்ல இன்று எத்தனையோ அம்மாக்கள்கூட முகநூலிலே தொங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் இவ்வாறான நிலை ஏற்பட்டுவிடாமல் இறைவன் பாதுகாக்க வேண்டும்.

ஸஹீட். எச். சப்ரீன், சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் மருதமுனை.



# சகோதர மொழியின் முக்கியத்துவம்




மொழி என்பது ஒரு ஊடகமாகும். மனிதனின் எண்ணங்களையும், உணர்வுகளையும் இன்னொருவர் புரிந்துகொள்ள மொழி ஒரு ஊடகமாக உதவி செய்கிறது. தமது தாய்மொழிக்கு மேலதிகமாக இன்னொரு மொழியை அறிந்து வைத்திருத்தல் மிகவும் சிறந்தது. ஒவ்வொரு மொழியையும் அறிந்து வைத்திருத்தல் மனிதனுடைய பெருமையை மேம்படுத்தும். அதனால் தான் ஒரு மொழி தெரிந்தவன் ஒரு மனிதன் என்றால் மூன்று மொழி தெரிந்தவன் மூன்று மனிதனுக்குச் சமனானவன் என்று கருதப்படுகிறான்.

சிங்கள மொழி இனிமையான எளிமையான மொழியாகும். இலங்கையில் வாழுகின்ற பெரும்பாலான மக்கள் சிங்களவர் ஆகையால், சிங்கள மொழி அரச மொழியாகவும் அதிக மக்களால் பேசப்படுகின்ற மொழியாகவும் இருக்கிறது.

நாம் சிங்கள மக்களின் கருத்துக்களையும் அபிலாசைகளையும் பிரச்சினைகளையும் புரிந்து கொள்ள வேண்டுமாயின் சிங்கள மொழியை அறிந்து வைத்திருத்தல் அவசியம். இனங்களுக்கிடையிலான சமாதானத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்கு சகோதர மொழியைப் பேசுதல் அவசியமாகிறது.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை தேவைகளைப் புரிந்து கொள்வதற்கு சிங்கள மொழி தெரிந்திருந்தால் மட்டுமே விளங்கப்படுத்தவும் பேசவும் முடியும்.

இதனால் பரஸ்பர அன்பும் ஆதரவும் ஏற்படுகிறது. பிரச்சினைகளை விளங்கப்படுத்தவும் பிணைப்பினை ஏற்படுத்தவும் முடிகிறது.

அடுத்து இலங்கையில் அரசகரும மொழியாகச் சிங்களம் இருப்பதனால் அரச உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியை 2ஆம் மொழியாகக் கற்றுச் சித்திபெறுதல் அவசியமாகும்.

அப்போதுதான் அவர்களுக்குரிய வேதன ஏற்றங்கள், பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அரச பதவிகளில் கடமையாற்றும்போது சிங்கள மொழியைக் கற்று அந்த மொழியில் உரையாடுதல் ஒரு தகுதியாகக் கொள்ளப்படுகிறது. கொழும்பிலுள்ள காரியாலயங்களுக்குச் சென்று எமது கருமங்களை நிறைவேற்றுவதற்கு சிங்கள மொழி அறிவு மிகவும் பயன்பாடு உள்ளதாகக் கொள்ளப்படுகின்றது. ஆகவே, சிங்கள மொழிக் கற்றல் மிக மிக இன்றியமையாதது.


சிங்கள மொழியை நாம் வாசிக்கத் தெரிந்திருந்தால் சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ள நூல்களை வாசிக்க முடியும். அதனால் மொழியின் வரலாற்றையும் சிங்கள மக்களின் கலாச்சாரத்தையும் அறிந்து கொள்ள முடியும்.

ஆகவே இனங்களுக்கிடையே புரிந்துணர்வு, கலாசார இணைப்பு ஏற்பட வழியுண்டு.

தற்போது சிங்கள மொழியைக் கற்கின்ற மாணவர் தொகை அதிகம். சிங்கள மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர் என்ற வகையில் சிங்கள மொழியின் முக்கியத்துவம் பற்றி விளக்கியுள்ளேன். ஆகவே, நாம் எல்லோரும் சிங்கள மொழியைப் பேசவும் எழுதவும் கற்போமாக!

அடுத்து வரும் இதழ்களில் இல்லத்தரசிகள் தமது பிள்ளைகளுக்கு அறிமுகம் செய்யக் கூடிய சில சிங்களச் சொற்றொடர்களை சிங்களம் - தமிழ் மொழிமூலம் அறிமுகம் செய்யவுள்ளோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

திருமதி.சரஸ்வதி.தியாகராசா



# 'பை' சொல்லும் கதை



போருக்குப் பின்னான காலத்தில் வட பகுதியை ஆட்டிப்படைக்கும் போதைப்பாவனை தான் கதையின் கரு. மதுப்பாவனையால் நாட்டின் பல பகுதியிலும் நடைபெறும் துன்பியல் நிகழ்வுகளை பத்திரிகைச் செய்தியாக படத்தின் முன்பகுதியிலேயே காட்டியிருக்கின்றார் அதன் இயக்குநர் சிவராஜ்.

எமது மக்கள் பின்னல் பைகளைப் பல பயன்பான்பாட்டிற்குப் பயன்படுத்தினர் எனவும் இன்று போதை போன்ற பொருட்பாவனைக்கு அதே பைகள் பயன்படுத்தப்படுவதை மையமாகக் கொண்டே சமூக மாற்றத்தை எமது கலாசார பிறள்வை உணர்த்தும் விதமாக இப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. இரண்டு இளைஞர்கள் பொலிஸ் சாவடியைத் தாண்டிச் சென்று ஒரு பாழடைந்த வீட்டில் மறைத்து வைத்திருந்த போதைப்பவுடர் மற்றும் மதுபானத்தை அருந்துவதே கதை பொலிஸ் சாவடிச் சந்தியில் நடைபெறும் நிகழ்வுகள் என்பவை சொல்லப்பட்ட விதம் பாராட்டிற்குரியது என்றாலும் கதைக்காட்சிகளை இன்னும் மெருகூட்டியிருக்கலாம். இவ்வாறான கலைஞர்கள் இன்னும் ஊக்குவிக்கப்பட்டால் இத்துறை மேலும் வளரும்.

இது, நோர்வே படக்காட்சியில் திரையிடப்பட்டது, யாழ்ப்பாணம் படக்காட்சியில் மக்கள் தெரிவுக்கான விருதைப்பெற்றது, நல்லூர் பிரதேசசபை படக்காட்சியில் சிறந்த படம் மற்றும் சிறந்த நடிகர் போன்ற விருதுகளைப் பெற்றது. பத்திற்கும் அதிகமான குறுந்திரைப் படங்களைத் தயாரித்து பல விருதுகளையும் பெற்ற சிவலிங்கம் சிவராஜ் ஒளிஅரசி வாசகர்களுக்காக தனது அனுபவப் பகிர்வுகளைத் தந்துள்ளார்.




அப்பா சிவலிங்கம். அம்மா தவமணிதேவி . இவர் இந்தியாவின் எஸ் ஆர் எம் யுனிவசிற்றியில் விசுவல் கொமினிகேசன் முடித்துள்ளார். சென்ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவனான இவர் தனது முதல் குறுந்திரைப்படம் ஏன்ஜல் டோட்டர் ஒவ் விமல் எனவும் (இந்தியாவில் தயாரிக்கப்பட்டது) பின்னர் பல குறுந்திரைப்படங்களைத் தயாரித்து ஒரு முழுநீளத்திரைப்படத்திலும் கால்பதித்துள்ளதாகவும் கூறுகின்றார். 2010 இன் இறுதியில் ஊனம் என்ற குறும் படத்தினை தயாரித்து யாழில் இடம்பெற்ற போட்டியில் பங்குபற்றினார். இதுவே எமது நாட்டில் இவர் தயாரித்த முதல் திரைப்படம். இப்படம் சிறந்த படமாகத் தெரிவுசெய்யப்பட்டது. அதன் பின்னர் இந்த வெற்றியின் வேகமே மாற்றம், கான்சர் போன்ற பல படங்களை அடுத்தடுத்து தயாரிக்க உதவியது என்றும் தனது இறுதிக் குறும்படமாகச் செருக்களம் அமைந்துள்ளது எனவும் கூறுகின்றார். எல்லாத் திரைப்படங்களும் ஏதோ ஒரு விருதினைப் பெற்றதுடன் பாராட்டையும் பெற்றுக்கொண்டன. சிறந்த தயாரிப்பாளர், சிறந்த இசையமைப்பாளர் போன்ற பட்டங்களுக்குச் சொந்தக்காரராகவும் ஆகிய சிவராஜ் ஒரு சிறந்த தயாரிப்பாளர் மட்டுமன்றி சிறந்த விளையாட்டு வீரராகவும் விளங்குகின்றார். இவர் பல குறும்படங்களைத் தயாரித்தாலும் அதிக படங்களுக்கு ஒளிப்பதிவு போன்ற இதர பணிகளையும் செய்து வருகின்றார். அந்த வகையில் வன்மம், காவு, எழுத்துப்பிழை, வடு, கெடு, போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

உங்கள் படங்களிற்கான கதையை எவ்வாறு தேர்வு செய்வீர்கள்?

என வினவியபோது, நான் அன்றாடம் காண்கின்ற சமூக அவலங்களே என்னால் படமாக்கப்பட்டன எனவும் எனது படங்கள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு சமூகக் கருத்தைச் சொல்லிச் செல்வதாகவே உள்ளது எனவும் இப்படத்தைப் பார்த்து எங்கோ ஒரு மூலையில் வாழும் ஒரு மனிதனாவது தன் தவறுணர்ந்தால் அதுவே என் படத்தின் வெற்றி என்றவர் தனது இத்துறைக்கான அத்திவாரத்தை தனது அண்ணனே இட்டார் எனவும் தான் தயாரித்த அத்தனை படத்திலும் தனது நண்பாகளே நடித்து வருகின்றனர் எனவும் கால ஓட்டம் அவர்களைச் சிறந்த நடிகர்களாக மெருகூட்டுகின்றது எனவும் கூறியுள்ளார்.

கோபிகை

# உணர்வகளே உள்ளத்தின் திறவுகோல்

ஊடலும் கூடலுமான குடும்ப வாழ்வில் பல்வேறுபட்ட பிரச்சினைகள்தோன்றி மறையும். காலையில் தோன்றும் சிக்கல் மாலைக்குள் முடிந்துவிடும். அப்படி இல்லாவிட்டால் மறுநாளோ அதற்கு மறுநாளோ இனிமையாய் நிறைவடைவது அன்றைய கால வழமை. காலம் இவ்வாறு தான் இருந்தது. ஆனால், தற்போது பெருகிவிட்ட விஞ்ஞான வளர்ச்சியில் சிறிதாய் வாய்த்தர்க்கம் ஆரம்பிக்குமுன்னரே தொலைபேசிச் செவிவழியாய் பெற்றோருக்குத் தகவல் சென்றுவிட ஆத்திரத்தில் அறிவை இழக்கும் அவர்கள் மீண்டும் தொலைபேசி வழியாய் வார்த்தைகளை விட மெல்ல மெல்ல உண்டாகும் சின்னச் சின்ன விரிசல்கள் பெரிய பிளவை உண்டுபண்ணிவிடும். அவ்வாறானதொரு பிரச்சினையில் மூழ்கி முத்தெடுத்தவர்கள் தான் ஆதித்தன், இயலிசை இருவரும்.

திருமணம் முடிந்த கையோடு வெளியூரில், தான் தங்கியிருந்த குவாட்டஸிற்கே மனைவியையும் அழைத்து வந்துவிட்டான் ஆதித்தன் என்கிற ஆதி. சில மாதங்கள் இறக்கை கட்டிப் பறந்தது இருவருக்கும். எல்லாமே அழகு மயம்தான். காலையில் பளிச்செனச் சிரிக்கும் ரோஜாவில் புல்லின் மீது படுக்கை விரிக்கும் பனித்துளியில் காய்ந்துபோன மாமரத்தின் உச்சிக்கிளையில் அமர்ந்திருந்த ஒற்றை மைனாவில் என அனைத்திலுமே பேரழகு தெரிந்தது இயலிசைக்கு. ஆதிக்கு மட்டுமென்ன, சுவையில்லாது மனைவி கலந்து கொடுத்த தேநீரோ அவனுக்கு மிகவும் பிடித்த சிக்கன் மசாலா குழம்பை உப்பு அதிகமாகப் போட்டு அவள் சமைத்ததோ எதுவுமே பிடிக்காமல் போகவில்லை.

கண் இமைக்காது மனைவியைப் பார்த்து இரசிப்பதே சொர்க்கமாய் இருந்தது அவனுக்கு, ஏன்தான் விடிகிறதோ என அவன் சலித்துக்கொள்ளும்போது கலகலவெனச் சிரிக்கும் மனைவியை கண்வெட்டாது பார்த்துக்கொண்டிருப்பான். நாட்கள் ஆனந்த ஜாலம் காட்டி ஓடி மறைந்தன.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் காலைத் தேநீரை இயலிசை சற்றுத் தாமதமாகக் கொடுத்ததோ அல்லது அலுவலக வேலையில் ஏற்பட்ட சிறிய தவறுக்காக மேலாளர் காலையிலேயே அழைப்பெடுத்து காச்மூச்சென்று கத்தியதோ ஏதோ ஒன்று ஆதியின் புத்தியை சிறிதாய் குழப்பிவிட அந்தக் கோபத்தின் விளைவு மனைவி இயலிசை மீது சற்று கடினமான வார்த்தைகளாய் விழுந்தன.

ஒரே பெண்ணாய் வளர்ந்த இயலிசை கடினமான வார்த்தைகளை அதிகமாக கேட்டறியாதவள் என்பதை விட கணவனின் திடீர்க் கோபம் அவளுக்குள்ளும் சினத்தைக் கிளப்பிவிட வார்த்தைகள் எதுவுமில்லாது முறைத்தபடி நின்றாள். அவ்வேளை அவளது செவிகளில் விழுந்தது அந்த றிங்ரோன். ஓடிச்சென்று எடுத்தபோது அவளிடமிருந்து அழுகை மட்டுமே வெளிப்பட்டது. அம்மா-------- -அம்மா------- என்ற வாத்தைகளைத்தவிர வேறு வார்த்தைகள் எதுவும் அவளிடமிருந்து வரவில்லை.

எதிர்முனையில் கேட்டுக் கொண்டிருந்த தாயாருக்கு முதலில் அதிர்ச்சியாகவும் பின்னர் அந்த அதிர்ச்சி



ஆதி மீதான கோபமாகவும் மாறியது. பலஅம்மாக்கள் செய்யும் மிகப்பெரிய தவறு இதுதான், என்ன நடந்தது என்பதையோ அன்றி குடும்பம் என்றால் இவ்வாறான சின்னச்சின்னப் பிரச்சினைகள் இருக்கும் என்பதையோ மறந்து அவசரமாய் வார்த்தைகளை விட்டுவிடுவர். இயலிசை வீட்டிலும் அது தான் நடந்தது. அம்மாவின் கூச்சல் வீட்டிலிருந்த அனைவரையும் ஆத்திரம் கொள்ளவைத்தது. அந்தச் சம்பவமே இயலிசை வீட்டினர் ஆதியின் மீது தவறான எண்ணப்போக்கை வளர்க்க காரணமானது.

மறுநாள் ஆதியும் இசையும் சமாதானமாகிவிட்டதென்னவோ உண்மைதான். ஆனாலும் இயலிசையின் அம்மா நாளுக்கு நாள் கூறிய வார்த்தை தூபம் சின்னச் சின்னப் பிரச்சினைகளையே பூதாகரமாக்க வைத்தது இயலிசையை, அதுமட்டுமன்றி வீட்டுச்சண்டை உடனுக்குடன் தாயிடம் ஒப்புவிக்கப்பட்டதும் ஆதியை அதிகமாகச் சினம்கொள்ள வைத்தது. அதுவே ஆதி இசையின் இனிய இல்லற வாழ்வின் கரும்புள்ளியாகவும் மாறியது. பெற்றோரை இணைக்கும் மிகப்பெரும் பாலமாக பிள்ளைகளே இருப்பர். அந்த வரத்தையே இயலிசை தள்ளிப்போட நினைத்ததும் ஆதியின் கோபத்தை உச்சப்படுத்த அதுவே அவர்களின் சின்னப்பிரிவின் அத்திவாரமானது.

மனைவி தன்னை மதிப்பதில்லை என ஆதியும், கணவன் தன்னை அடிமைப்படுத்துவதாக இசையும் காரணம் கூறி திருமணமான மறு வருடமே பிரிந்து கொண்டனர். உறவுகளின் பேச்சுவார்த்தை இருவராலும் நிராகரிக்கப்பட ஆதி தனது வீட்டிலும் இசை தனது வீட்டிலும் நிரந்தர விருந்தாளிகளாகினர். பிரிந்த பின்னர் தான் சில உண்மைகள் புரிந்தன இருவருக்கும். வேதனை உள்ளத்தை நிறைத்து கண்களைக் கண்ணீர் முட்டியபோதெல்லாம் தான் சாய்ந்துகொள்ள ஒரு தோள் வேண்டும் என்ற உண்மை புத்தியில் உறைத்தது இயலிசைக்கு, அவ்வப்போது தந்தை கூறிய வாத்தைகளைப்பற்றி சிந்திக்கத்தொடங்கிய இயலிசையின் நினைவுகள் கடந்த கால சம்பவங்களை அசைபோட்டது. ஒருநாள் இருவருக்கும் சண்டை வலுத்து கணவனோடு பேசாமல் இருந்துவிட்டாள் இயலிசை.

அவள் மீது இருந்த கோபத்தில் கணவன் தானே தேநீர் போடச்சென்றதும் இதனைப் பொறுக்காத இயலிசை அவனைத் தடுக்கச்சென்றபோது வெந்நீர் அவளது கையில்பட்டுவிட வலியில் அவள் துடித்தபோது கோபத்தில் அருகில் வராதபோதும் அவன் கண்ணில் தெரிந்த அந்த வலி அவளது வலிக்குச் சற்றும் குறைவில்லாதது என்பது இப்போது புரிந்தது இயலிசைக்கு. அன்று அதற்காகவே அவனிடம்



# ரொமான்ஸ் இரகசியங்கள்

சண்டைபோட்டிருக்கிறாள். அவள் மருந்து போடுவதற்காய் திண்டாடியதும் தனது மொத்த கோபத்தையும் விட்டுவிட்டு வலுக்கட்டாயமாக அவளது கையை இழுத்து கணவன் மருந்து போட்டதும் அவனது ஸ்பரிசத்தில் தான் நெகிழ்ந்து நின்றதும் அன்றே அந்தச்சண்டை முடிந்துபோனதும் இப்போதும் இனித்தது அவளுக்கு. அன்று புரியாத கணவனின் பாசம் இன்று புரிந்தது அதிகமாய்.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் புரண்டுபடுத்த ஆதித்யாவின் எண்ண ஓட்டங்கள் இயலிசையையே சுற்றிச்சுற்றி நின்றன. அவள் மீது தேவையற்று அதிக கோபம் கொண்டுவிட்டதற்காய் தன்னையே திட்டிக்கொண்டான். வேண்டா வெறுப்பாய் எழுந்து வெளியே வந்தவன் ஆச்சரியத்தில் விழிவிரித்துப் போனான்.

அழகாய் சேலை கட்டி நாணக்குடை பிடித்து கண்களில் மன்னிப்பை யாசித்து புதுப்பெண்ணாய் நின்ற மனைவியைப் பார்த்ததும் அசந்து தான் போனான். என்ன செய்வதெனப் புரியாது தவித்து நின்ற இயலிசை, கடைக்கண் பார்வையுடன் பாடலொன்றை முணுமுணுத்தபடி உள்ளே சென்ற கணவனை நாணத்துடன் பின்தொடர்ந்தாள்.


திருமதி. சந்தியா சந்தோஸ்

# விலை மாது



கல்லூரிச் சாரலில் எனை பின் தொடர்ந்து
காதல் வலையில் வீழ்த்திவிட்டீர்!
ஆசை வார்த்தைகள் கூறியென் மனதை
அலை பாயவிட்டீர்!
உன்னையே மணப்பேன் என்றுரைத்து
உள்ளுணர்வை தூண்டிவிட்டீர்!
இறுகப்பற்றி நீ இதழ்களைச் சுவைத்து
இங்கிதமாய் முத்தமிட்டீர்!

குடும்பத்தை துறந்திடினும் - என்
காதலை இழவேன் என்ற போது
என்னையே இழந்தேன் உன்னிடம்
எனக்குள் உயிர் கொடுத்தீர்!
இல்லறம் கொடுக்க மறுத்து
இதயத்தை துன்பத்தில் மூழ்கடித்து
சிட்டாய் பறந்த கன்னி என் கனவுகளை
சில நொடியில் சிதைத்தீர்!

பிதாவற்ற பிள்ளையினை பெற்றெடுக்க
பூவுலகம் வேஷி என்றழைக்க
பெற்றவளும் எனை விட்டொதுக்க
பிள்ளையுடன் தனிமைப்பட வேண்டியதாயிடுச்சு!
கஞ்சிக்கும் வழியின்றி
பஞ்சத்தில் பரிதவிக்கும் - எம்
பசி போக்கிட யாருமின்றி
பட்டினியால் வாட வேண்டியதாயிடுச்சு!

உணவுக்காய் நாடின் சிலர்
உறவுக்காய் அழைக்கின்றனர்
வேளைச் சோற்றுக்கும் வழியின்றி
வேஷியாய் மாற வேண்டியதாயிடுச்சு!
மேனியை வருடும் எவரும்
மனதை வருடிச் செல்லார்
காசுக்காய் தினமும் - சேலையினை
களைய வேண்டியதாயிடுச்சு!

உன்னால் உருக்குலைந்தின்று நானும்
உடம்பு விற்றுப் பிழைக்கிறேன்
விலை கொடுத்து நீயும்
விலைமாது எனைத்தேடி வருவதேனோ?
இனியும் உனக்கு
இவ்வுடம்பை தருவதாயில்லை
என் மனம் உறுத்துகின்றது
எண்ணங்கள் சிதைகின்றதேனோ?

என் பிள்ளை
என்ன பாவம் செய்ததோ?
யான் செய்த தவறுக்கு
விபச்சாரி மகன்(ள்) என்றழைப்பதேனோ?
விலைகொடுத்து எனை விளையாடி
நிலை குலைத்தவரே
விபச்சாரி என்றழைக்கும்
அபச்சாரம் ஏனோ?

விபச்சாரிகள் பிறப்பதில்லை
விபச்சாரிகள் உருவாக்கப்படுகிறார்கள்!!!

- பாஸித் மருதான் -

# தாய்மொழி



அன்னைத்தமிழ் அது
அமுதத் தமிழ் என்றும்
ஆழும் தமிழ் பேச
இனிக்கும் தமிழ் நெஞ்சை
ஈர்க்கும் தமிழ் நம்
உணர்வில் கலந்த தமிழ்
ஊற்றாய் பொங்கும் தமிழ்
என்றும் மங்காத தமிழ்
ஏற்றமடையும் தமிழ்
ஐங்காப்பியம் கண்ட தமிழ்
ஒலியழகு கொண்ட தமிழ்
ஓங்கு புகழடைந்த தமிழ்
ஔவை உரைத்த கன்னித் தமிழ்
அஃதே எமது உயிர் மூச்சுத்தமிழ்
எம்மொழியானாலும்
தாய் மொழி போல் வருமா
சுகம் தருமா?

# வருக வருக புத்தாண்டே----



வருக வருக புத்தாண்டே
காலங்கள் நேரங்கள்
அனைத்தும்
மன்மத வருடத்தோடு விடைபெற
துர்முகி வருடத்தில்
புதுமைகள் மலர
தீமைகள் அகல
ஏக்கங்கள் கலைய
துக்கங்கள் மறைய
புதுமைகள் மலர
ஏற்றமுடன் எழுந்து வா
துர்முகியே-----
சூரிய பகவானோடு
தரணிக்கு நல்ல சேதிசொல்ல
வருக வருக புத்தாண்டே
விடிவு எமக்கு கிடைக்க
விளைநிலங்கள் துளிர்விட
பட்டினிச் சாவு மறைய
பஞ்சம் யாவும் பறந்திட
இலஞ்சம் இல்லாது ஒழிய
அமைதி வாழ்வு மலர
அடிமை வாழ்வு அகல
அன்னை பூமி செழிக்க
வருக வருக புத்தாண்டே
புலர்ந்து வரும் துர்முகியே
பூரிப்பு எம் வாழ்வில் புலர
புது ராகம் இதயத்தில் இசைக்க
இடரான வாழ்வு ஒழிய
கலையும் கவியும் மலர
சுகமாய் சுகந்தங்கள் வீச
வருக வருக புத்தாண்டே----------

செல்வி மதனரூபி பாரதிதாசன் (மதன் பாரதி)
பொலிகண்டி இ.த.க வித்தியாலயம்
வல்வெட்டித்துறை.



# அன்பான உறவுகளுக்கு, விண்ணிலிருந்து எழுதுகிறோம்; கசக்கப்பட்ட காரிகைகள் நாங்கள்!

கிருசாந்தியும் வித்தியாவும் சேயாவும் கரிஸ்ணவியுமாய் சேர்ந்திருக்கிறோம் இங்கு. அவச்சாவாய் இறந்ததாலோ என்னவோ உடல் தகிக்கும் வெய் தணலில் தான் எங்கள் வாழ்விடம் இருக்கிறது. விரல் நுனியில் சின்னதாய் பட்ட காயத்திற்காகவே துடித்துப் போய் வீட்டை ரணகளப்படுத்திய நாங்கள் இன்று தணலை வாழ்விடமாகக்கொண்டு வாழ்கிறோம். நாங்கள் செய்த எந்தக் குற்றத்திற்காக இந்தத் தண்டனை? பெண்ணாகப் பிறந்தது நாங்கள் செய்த பாவமா அல்லது அழகான பூக்களாய் மலர்ந்ததுதான் பாவமா?

இங்கே துடிக்கும்போது ஒன்றை நினைக்கிறோம், எங்களைச் சீரழித்தவர்கள் அத்தோடு விட்டிருக்கலாம். உயிரையும் ஏன் பறித்தார்கள்?

**காமம் தலைக்கேற எங்களை வல்லுறவு செய்துவிட்டு பயம் தலைக்கேற கொலையும் செய்துவிடுகின்றனர்.**

கதறி அழுது கெஞ்சி மன்றாடியபோதும் இவர்களின் புத்தியில் எதுவும் ஏறவில்லை. எங்கள் இறப்பிற்குப்பின் கொடிபிடிக்கிறீர்கள், கோசம் போடுகின்றீர்கள். ஆனாலும் என்ன பிரயோசனம்?

வேண்டாம், வேண்டாம் எனக்கதறியபோது ஆசையின் அடிமைகளாய் மாறி எங்ளைக் காவுகொண்டுவிட்டார்கள். சில நொடி ஆசை வாழ்வின் உயர்வுகளை எத்தனை கொடூரமாய் அழித்துவிடும் என்பதை இப்போது எங்களைக் கொன்றவர்கள் உணர்வார்கள். ஆனாலும் தொடரும் இக்கொடுமைக்கு எப்போது முற்றுப்புள்ளி வைக்கப்போகின்றீர்கள்?

குடும்பங்கள் பல இணைந்தது தான் சமூகம் என்கிறார்களே, அப்படியானால் சமூகத்தின் அங்கம் தானே குடும்பம், அவ்வாறான குடும்பத்தில் தானே நாங்களும் பிறந்தோம். எல்லோரும் ஒருவருக்கொருவர் உறவு தானே, பிள்ளைகளாய் எங்களைப் பாதுகாக்கவேண்டியவர்கள் ஏன் இப்படி எங்களைப் பலி எடுத்தார்கள். எங்களை என்ன செய்யப்போகின்றார்கள் என்பது கூட எங்களுக்குப் புரியாத நிலையில் தான் அவர்கள் காமுகம் அரங்கேறியது.

கலாசாரத்தின் எடுத்துக்காட்டாய் இருந்த எம் தமிழினத்தில் இவ்வாறான கொடூரங்கள் நிகழ்வது மிகக் கொடுமையானது. உறவுகளே, எழுத்து என்னும் தீப்பொறிகொண்டு வன்மங்களை முடிவுக்குக்கொண்டு வாருங்கள். எங்கள் நிலையில் இனியொரு வித்தியாவோ கரிஸ்ணவியோ வேண்டாம். குற்றங்களை வலுவாக்கி தண்டனைகளை இறுக்கப் போராடுங்கள். வாழ்வில் நடுக்கத்தோடு பயணிக்கும் பெண்ணினத்திற்கு விடுதலை கொடுங்கள். சமூகத்தின் நச்சு சக்திகளான மனித மிருகங்களுக்கு மரண தண்டனை வழங்கவேண்டும் என்பதை வலிமையாய் கூறுங்கள். எங்கள் மரணக் கொடூர நிமிடம் தொட்டு இப்போது வரை அழுதுகொண்டு தான் இருக்கிறோம். எங்கள் ஆத்துமா எப்போதும் அழுதுகொண்டுதான் இருக்கும். என்றைக்கு பெண்கள் அச்சமின்றி வாழ்கிறார்கள் என்ற சேதி கேட்கிறோமோ அன்றுதான் எங்கள் ஆத்மாவின் விடுதலையும். சேயாவின் கொலைக்கு மரணதண்டனை கொடுத்துவிட்டதை அறிந்து எங்கள் உள்ளம் ஆனந்தம் அடைகின்றது. ஏனைய கொலைகளுக்கும் விரைவில் தீர்ப்பெழுதுங்கள். எங்கள் ஆத்துமாவுக்கு விடுதலை தாருங்கள்.

உண்மை ஒருபோதும் நீண்டகாலம் உறங்காது எனும் நிதர்சனத்தை மண்ணுலக இளைஞர்களுக்கு தெளிவுபடுத்தி, குற்றவாளி ஒரு நாளைக்கு அகப்பட்டு தண்டனை அனுபவிப்பான் என்பதை நிறுவி, யுவதிகளை பாதுகாக்க முன்வருவீர்களாக.

எங்கள் மடலை இத்துடன் நிறைவுசெய்து கொள்கின்றோம்.

இப்படிக்கு
கிருசாந்தி, வித்யா, சேயா, கரிஸ்ணவி

# அரசியின் உளவியல் ஆலோசனை



மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் தத்தமது பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மனதைரியம் அவரவரிடமே உண்டு. திடீரெனத் தோன்றும் பிரச்சினைகளை பெரிதாகக் கருதி மனம் சோர்ந்துபோகும் வேளைகளில் தட்டிக்கொடுக்கவும் தைரியப்படுத்தவும் யாரோ ஒருவருடைய ஆலோசனை தேவையாகவே உள்ளது. அவ்வாறான வேளைகளில் உங்கள் உள்ளம் தேற்றும் நல்ல தோழியாக இருந்து உளவியல் ஆலோசனைகளை வழங்குகின்றாள் ஒளி அரசி. மனம் கனக்கும் கணங்களை ஒளிஅரசியுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

**?** என்னுடைய மகனுக்கு தற்போது வயது 7 ஆகிறது. வீட்டில் அமைதியாக இருப்பான்.

ஆனால் நண்பர்கள் உறவினர் வீட்டிற்கு செல்லும் போதோ அல்லது போது இடங்களுக்கு செல்லும் போதோ அங்குள்ள பொருட்களை எடுத்து விளையாடுவான்.

தான் நினைப்பதை உடனே வாங்கித் தரும்படி கேட்கிறான். அவன் செயலைத் தடுக்க முற்பட்டால் அடம் பிடிப்பான். இதனால் நான் பெரும் மன வேதனை அடைகிறேன் அவனை எப்படிக் கட்டுப்படுத்துவது?

**பதில்** இந்தப் பிரச்சனைக்காக நீங்கள் அதிக கவலைப்பட வேண்டியதில்லை. வீட்டில் பொருட்களை உடைத்தால் அடி கிடைக்கும் என்று தண்டனைக்குப் பயந்து அடக்கமாக இருக்கிறான். வெளியே சென்றால் வீட்டில் செய்ய முடியாததைச் செய்யலாம் என நினைக்கிறான். அங்கே நாகரீகம் கருதி நீங்கள் அவனைத் தண்டிக்க முடியாது எனக்கருதுகின்றான். உங்கள் மகனிடம், அடக்கமாக இருப்பது நல்ல பண்பு, வீட்டில் போலவே, வெளி இடங்களுக்குச் சென்றாலும் அடக்கமாக இருக்க வேண்டும் என்று பக்குவமாக எடுத்துக்கூறுங்கள். அவனை மிரட்டாமல், ஏன் பக்குவமாக இருக்க வேண்டும், என்பதை அமைதியாக விளக்கி மற்றவர் வீட்டில் பொருட்களை உடைப்பதாலோ , அடம்பிடிப்பதாலோ அவர்களுக்கும் நமக்கும் ஏற்படும் சிரமங்களையும் உணர்த்துங்கள்.

பிள்ளைகளுக்கு பிரச்சனைகளை நாம் எடுத்து கூறும் விதத்தில்தான் அவர்கள் புரிந்து கொள்ளும் தன்மையும் அமைந்திருக்கும். உங்கள் மகனின் இந்த மனப்பாங்கை வளர விடாமல் இப்போதே சரி செய்து விடுங்கள்.

**?** எனது தோழி மிகவும் கலகலப்பாக இருப்பாள். எல்லோரிடமும் நன்றாகப் பழகுவாள். நாம் விடுதியில் இருந்து கல்வி கற்கின்றோம். சில மாதங்களாக வெளியே செல்வதை விரும்பாது விடுதி அறையிலே தங்கி விடுகின்றாள் வகுப்புகளில் எல்லாம் நன்றாகத்தான் இருப்பாள் ஆனால் வெளி இடங்களுக்குச் செல்வதையோ நிகழ்வுகளில் பங்கெடுப்பதையோ தவிர்த்துக் கொள்கின்றாள். நாம் காரணம் கேட்டால் அந்தக் கேள்வியைத் தவிர்த்து வேறு விடயங்களைக் கதைக்கின்றாள். இதனால் எனக்கு மிகவும் கவலையாகவும் சங்கடமாகவும் இருக்கின்றது. அதற்கு நான் என்ன செய்யலாம்? தங்களிடம் இருந்து நல்ல ஒரு தீர்வை எதிர் பார்க்கின்றேன்.

**பதில்** உங்கள் தோழி சில மாதங்களாகத்தான் இவ்வாறு இருக்கிறார் என்றால் அவர் இந்த குறிப்பிட்ட மாதங்களில் ஏதோ ஒரு மனஅழுத்தத்திற்கு ஆளாகியுள்ளார். அதனைக் கண்டறிய முற்பட வேண்டும் நீங்கள் நெருங்கிய தோழியாக இருக்கிறீர்கள் எனின் அவரிடம் மனம்விட்டுக் கதையுங்கள. அவர் வெளி இடங்களுக்குச் செல்வதையோ நிகழ்வுகளில் பங்கெடுப்பதையோ தவிர்த்துக் கொள்கிறார் எனின் அவர் வெளிமனிதர்களை சந்திப்பதையோ, நிகழ்வுகளை ரசிக்கவோ விரும்பவில்லை, அதில் ஏதோ ஒரு சங்கடத்தை உணருகிறார்.

நீங்கள் விடுதியில் தங்கியிருப்பதனால் அவரது பிரச்சனையைச் சக தோழிகளாகிய நீங்கள் தான் இனங்காண வேண்டும். அவர் அவ்வாறு தோழிகளிடம் கூற விரும்பவில்லை எனின் உங்கள் தோழியின் சம்மதத்துடனேயே உளவள ஆலோசகரை அணுகவேண்டும். இதே மன அழுத்தம் தொடர்ந்து நீடிக்குமெனின் அவர் மனவியாதிக்கு ஆளாவர்.

**?** **நான் ஒளிஅரசியின் நீண்ட நாள் வாசகி. தற்போது உயர்தரம் முடித்துவிட்டு தனியார் கல்வி நிலையம் ஒன்றில் ஆசிரியையாக இணைய உள்ளேன். மாணவர்களை எவ்வாறு வழிநடத்துவது எனக் குழப்பமாக உள்ளது. யாரிடமாவது கேட்கவும் வெட்கமாக உள்ளது ஆசிரியராக நான் எப்படி இருக்கவேண்டும். ஆசிரிய மாணவருக்கிடையிலான உறவு பற்றிய தெளிவான விளக்கம் ஒன்றைத் தரமுடியுமா?**

**பதில்** இன்றைய கற்றல் சமூகம் ஆசிரியர் மாணவர் பெற்றோரை உள்ளடக்கிய ஒரு கூட்டுக் குடும்பமாகும். வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் வெற்றியானது ஆசிரியர் மாணவர் உறவிலேயே தங்கியுள்ளது. 'கற்றல்' என்பது வெறுமனே புத்தகப்படிப்பு மனனமிடல் என்பதில் முடங்கிவிடாது நடத்தையின் நிரந்தர மாற்றத்திலேயே தங்கியுள்ளது. 'குறௌன் பக்' எனும் உளவியலாளரின் கூற்றுப்படி 'அனுபவத்தின் பயனால் ஏற்படும் நடத்தை மாற்றமே கற்றலாகும்' இந்த அனுபவம் பெறப்படுவதும் ஆசிரியர் மாணவர் சுமூகமான உறவிலேயேயாகும்.

ஆசிரியர் தொழிலில் உடற் சிரமத்திலும் பார்க்க உள்ளத்தையும் நுண்ணறிவையும் பயன்படுத்த வேண்டிய கட்டாய சூழ்நிலையில் ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளனர். தொழில் செய்யும் தகைமையால் அதாவது வகுப்பறை நிருவாக ஒழுங்கமைப்பு மாணவரைப்புரிந்து கொள்ளல் கற்பித்தல் தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி, சம ஆளுமை என்பவற்றால் தேவையானவற்றை மாணவருக்கு வழங்குதல் அத்துடன் பாட அறிவோடு மாணவர்களை அறிந்து தமது தொழிலையும் திறமையோடு செயற்படுத்தி செய்யவேண்டியது ஆசிரியரின் வெற்றிக்கு வழிவகுக்கக்கூடியதாக அமைகின்றது.

**?** **எனது மகனுக்கு 15 வயது. அவன் படிப்பில் மிகவும் கெட்டிக்காரனாக இருக்கின்றான். ஆனால் மிகவும் ஒல்லியாக இருக்கின்றான். சாப்பாட்டில் எந்தப் பிரச்சினைகளும் இல்லை. வயதுக்கேற்ற உணவுகளை உண்ணுகின்றான். எல்லோரும் என்னிடம் கேட்கிறார்கள் சரியாக உணவு கொடுப்பதில்லையா, சத்தான உணவாக கொடுப்பதில்லையா, என. பாடசாலையிலும் ஆசிரியர்கள் மாணவர்கள் எனது மகனிடம் அதிகமாக அவனது மெலிவைச் சுட்டிக்காட்டிக் கதைப்பதால் மகன் அதனை அவமானமாகக் கருதுகிறான். இதற்கு நான் என்ன செய்ய வேண்டும். ?**

**பதில்** உங்கள் மகன் போசாக்கான உணவு உண்கிறார் எனின் ஊட்டச்சத்துக் குறைபாடு இருப்பதற்கான வாய்ப்பு இருக்காது.. அவருக்கு உடல் ரீதியான ஏதாவது பிரச்சனைகள் இருக்கலாம் அதற்கு நீங்கள் மருத்துவரை அணுகுவது நல்லதெனக் கருதுகின்றேன்.

**குறிப்பு: அன்பு வாசகர்களே உங்கள் பிரச்சினைகளை எமக்கு எழுதி அனுப்பினால் உங்கள் விபரங்கள் வெளியிடப்படாது இரகசியம் பேணப்பட்டு உங்கள் கேள்விகளுக்கான ஆலோசனைகள் இப்பகுதியில் பிரசுரிக்கப்படும்.**

திருமதி.தனுஷா சிதம்பரபிள்ளை (உளவியலாளர் (கண்டி))

# கை கொடுத்த தெய்வம்



அது ஒரு பழமைவாய்ந்த கிராமம். நவீன தொழிநுட்பம் நாகரீகம் இல்லாத பத்தொன்பதாம் நூற்றாண்டு என்ற அந்தகாலப் பகுதி என்றால் கேட்கவும் முடியுமா? எங்கு பார்த்தாலும் மண் குடிசைகளும், மாமரத் தோப்புகளும் நிறைந்து காணப்பட்ட சிறப்பான காலம் என்றும் கூறலாம். அப்படியானால் அறுபது, எழுபது வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த நிகழ்வுகளை அதன் சுவையை தற்காலத்தில் வாழும் வயது முதிர்ந்தவர்கள் நினைவு கூருவதில்லை.

அவ்வாறுதான, இன்றைக்கு அறுபது வருடங்களுக்கு முன் கீழ்க்கரை கிராமம் ஒன்றில் பிறந்தவன்தான் அப்துல் கபூர். அவனுடன் அந்தக் குடும்பத்தில் ஒன்பது சகோரரர்கள்; இருந்தனர். கபூர் தனது சிறுவயதிலேயே தந்தையை இழந்தான். தாயின் அரவணைப்பில் வாழ்ந்தபோதும், அந்தக் குடும்ப்ம் போதிய வருமானமின்றித் துன்பப்பட்டது. காலப்போக்கில் வறுமைவாட்டத் தொடங்கியது. தனது பாடசாலைப் படிப்பை எட்டாம் தரத்தோடு நிறுத்திக்கொண்ட கபூர், தனது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டி கூலி வேலையில் ஈடுபடலானான். ஆனால் கபூர் மிகவும் சுறுசுறுப்பானவன். எதையும் தைரியமாக எதிர்கொள்ளக்கூடிய ஆற்றல் அவனிடம் இருந்தது. சற்று முன்கோபம் கொண்டவனாக விளங்கியபோதும், கஷ்டப்படுபவர்கள், ஏழை எளியோர் மீது மிகவும் இரக்கம் காட்டுபவனாக விளங்கினான். உண்மையாகவே இந்த உலகில் அவதரிக்கும் அத்தனை மனிதரும், தனது மரணம் வரும்வரை இறைவனால் தீர்மானிக்கப்படும் வாழ்க்கை என்ற பயணத்தில் கரடுமுரடான பாதைகளைக் கடக்க நேரிடுவதுடன் இறைவனின் சொல்லலொணா துன்பம், துயரம், சோதனைகள், வேதனைகள், தண்டனை போன்றவற்றுக்கும் ஆளாகின்றனர். ஒவ்வொரு மனிதனும் தாயின் கருவறையில் இருக்கும்போது இறைவன் அந்த மனிதனுக்கான உயர்வு தாழ்வு, நல்லவன் கெட்டவன், அவனது ஆயுள் போன்றவற்றைத் தீர்மானித்ததன் பின்னரே தாயின் கருவறையிலிருந்து இவ்வுலகுக்கு வருகின்றனர். அவ்வாறான ஒரு கொடூரமான சோதனையில் மிதந்தவன்தான் கபூர். அவனைப் பொறுத்தமட்டில் பகல், இரவு, வெயில், மழை எல்லாமே ஒன்றாகத்தான் இருந்தது. .

தனது 13ஆவது வயதில் தனது கூலி வேலையில் ஈடுபட்ட கபூர் மாடாய் உழைத்து தனது குடும்பத்தைக் காப்பாற்றினான். ஆனால் தனக்கொரு எதிர்காலம் வருமா என்ற எதிர்பார்ப்பு அவனிடத்தில் எள்ளளவும் இருந்ததில்லை ஆனால், ஆரம்பத்தில் கஷ்ரப்பட்டு பின்னர் வாழ்க்கையில்

நிம்மதியாய் இருந்தவர்கள் பலரைக் கண்டுள்ளான். ஆனாலும் தனக்கு ஒரு நல்ல நிலை வருமா, என்ற சந்தேகம் கபூரின் உள்ளத்தை வாட்டியது. அந்தள வுக்கு அவனின் வாழ்க்கையின் நிலைமை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

அவன் தனது சிறுபிராயத்திலேயே ஒரு கைத் தொழிலைக் கற்றுக்கொண்டான். பின்னர் பேக்கரி ஒன்றில் சேர்ந்து வேலை செய்யலானான். அதில் அவன் எதிர்கொண்ட சவால்கள், சோதனைகள் சொல்லிலடங்காதவைகளாகும். கபூர் பலருக்கு நல்லவற்றை செய்தபோதும், பலரின் பழிச் செ ால்லுக்கும் ஆளானான். சிலரின் வீண் பழியும் அபாண்டமும் அவன்மீது சுமத்தினர். இருந்தும் கபூர் அவைகள் அனைத்தையும் எதிர்கொணடவ னாகப் போராடினான். சில நேரங்களில் இப்படியும் ஒரு வாழ்க்கை தேவைதானா, என்று மனதுக்குள் நினைத்துச் சலித்துக்கொள்வான்.

காலம் வேகமாக நகர்ந்தது. கபூரின் தாய் அவன் துன்புறும் போதெல்லாம் ஆறுதல் கூறுவாள். 'இங்கப் பாருங்க மகன் எம்மைப்படைத்தவன் ஒரு காலமும் கழிக்கமாட்டான். கஷ்டம் வரும் போது நாம் பொறுமையா இருக்க வேண்டும். நான் மவுத்தா போனாலும் நீ நினைச்சு கதைப் பாய,; மகன் நீ என்றைக்காவது ஒருநாள் செல்வ சீமானாக இருப்பாய்'' என்று அடிக்கடி கூறுவாள். இப்போது கபூர் 29 வயதை எட்டியிருந்தான். அந்த நிலையில்தான் அவனைத் தேடிவந்தது. தனது தாய் மாமாவான ஆப்தீன் புலவர் என்பவரின் சிரேஷ்ட புத்திரியான உம்முல் ஹகுலா என்பவளை கபூர் கரம் பிடித்தான். இருந்தும் தான் தனது மண வாழ்க் கையிலும் பாரிய சோதனைக்கு முகம் கொடுக்கப் போகின்றமீட்ம் என்பதனை எதிர்பார்க்கவில்லை.

திருமணம் முடிந்து இரண்டு வருடங்களாக மகிழ்வான வாழ்வில் பயணித்தவனின் இல்லற வாழ்க்கையில் அவனது முதலாவது குழந்தையான நாஸர் கிடைத்த கையோடு பூகம்பம் வெடிக்க ஆரம்பித்தது. தனது பிரதான தொழிலாக பேக்கரி யில் வேலைசெய்து வந்தான். கணவன் மனைவிக் கிடையே எந்தக் கருத்து முரண்பாடுகளும் ஏற்ப டாத போதும் மனைவியின் குடும்பத்தவர்களினால் பாரிய பிரச்சினையை எதிர்கொள்ள நேரிட்டது. கபூர் சொந்தமாக ஒரு தொழில் செய்யலாமென நினைத்து சிறு பேக்கரிக் கடையொன்றைச் செய் யலானான். இறைவனின் தண்டனையோ , சோத னையோ தெரியவில்லை. தொழிலால் ஏற்பட்ட பாரிய நட்டம் காரணமாக கடனாளியாக மாறிய துடன் ஊரைவிட்டுத் தலைமறைவாக வேண்டிய நிலை ஏற்பட்டது. இருபிள்ளைகளோடும் வேறு ஊருக்கு சென்ற கபூரும் அவனது மனைவியும் சிலகாலம் கழித்து வந்தனர்.

ஆனாலும் கடன்காரர்களின் தொல்லை தாங் கமுடியாமல் அவதியுற்றனர். இதனைச் சகித்துக் கொள்ள முடியாமல் இருந்த கபூரின் மாமனார் மகளின் இல்லத்தை விற்றத்துடன் கடனையும் கொடுத்தார். ஆனால் தனது மகளைக் கணவரோடு இணைந்து வாழக்கூடாது எனத்தடைபோட்டனர். உம்மு ஹம்ஸா கணவரோடு இணைந்து வாழ விரும்பிய போதும் குடும்பத்தினரின் கடும் எதிர்ப் புக் காரணமாக மூன்று வருடகாலமாக இருவரும் பிரிந்து வாழ வேண்டியிருந்தது.

அந்தக்கால எல்லைக்குள் கபூர் பட்ட வேத னைகளும், சோதனைகளும் சொல்லிலடங்காத வைகளாகும். தனது முழு நிம்மதியையும் இழந்த நிலையில் அன்றாடம் கிடைக்கும் தொழிலைச் செய்து கொண்டு பித்துப்; பிடித்தவனைப்போல் தனது தாயின் வீட்டில் தஞ்சமடைந்தான்.அன்று ஒரு நாள, வீட்டில் எவரும் இல்லாத நேரம் பார்த்து எவருக்கும் தெரியாமல் தனது இரு பிள்ளைக ளையும் கூட்டிக்கொண்டு தனது கணவரிடம் வந்து தஞ்சமடைந்தாள் கபூரின் மனைவி உம்மு ஹம் ஸா. கபூரும் அவளையும் பிள்ளைகளையும் ஏற் றுக் கொண்டான். இருந்தும் குடியிருக்க வீடு ஒன்று இல்லாததன் காரணமாகத் திண்டாடினார். தனது மகள் வீட்டை விட்டுப் போன செய்தியை கேட்ட கபூரின் மாமனார் ஆத்திரமடைந்தார். மீண்டும் இங்கு வரக்கூடாது என்று எச்ரிக்கையும் செய்தார். கபூரும் அவனது மனைவியும் இரண்டு வருடங் களாக வாடகை வீடுகளில் வலம் வந்து கொண்டி ருந்தனர். அவர்களின் வாழ்க்கையில் எந்தவொரு சந்தோசமும் காணப்படவில்லை. இருந்தபோதும் தனது மனைவி மக்களைக் காப்பற்றவென கபூர் மாடாய் உழைத்தான்.

சமூகமும் அவனது குடும்பத்தினரும் மிகவும் இழிவாக நோக்கியதுடன் கழித்தும் வைக்கலா யினர். இருந்த போதும் விடாமுயற்சியும், கடின உழைப்பும், தன்னம்பிக்கையும் அவனிடம் காணப் பட்டதன் காரணமாக கபூர் தொடர்ந்தும் வாழ்க்கை யோடு போராடலானான். இவ்வாறு பல நாட்கள் கடந்தன. கபூரின் மாமனாரும் அவரின் குடும்பத்த வர்களும் ஒரு முடிவுக்கு வந்தனர்.

இதன் அடிப்படையில் தான் குடியிருந்த காணி யில் ஒரு இடத்தைக் கொடுத்ததுடன் ஒரு சிறு குடிசையை அமைத்து கபூரையும் மனைவியையும் இருக்கச் செய்தார் ஆப்தீன் புலவர். இதன் பின்னர் சற்று நிம்மதியடைந்த கபூரின் உள்ளம் மேலும் விவேகத்துடன் செயற்பட்டது. தனது பக்கத்தில்

உள்ள கிராமம் ஒன்றில் பேக்கரி ஒன்றில் சேர்ந்து நாள் ஒன்றுக்கு 80.00 ரூபாய் சம்பளத்திற்கு வேலை செய்தான.

அவனது வாழ்க்கை சுமுகமாகக் கழிந்து கொண்டிருந்தது. இருந்த போதும் கபூர் ஒரு சமயத்தில் தனக்கு வழங்கப்படும் சம்பளம் போதாதென்றும் ஐந்து ரூபாவைக் கூட்டடித் தருமாறும் கேட்ட போது கபூரின் முதலாளி அப்படித் தரமுடியாதென மறுத்து விட்டார். இதனை ஒரு வைராககியமாக மனதில் வைத்துக் கொண்ட கபூர் தனது மாமனாரின் உதவியுடன் தான்சேமித்து வைத்திருந்த சிறு தொகைப் பணத்தில் வாடகைக்கு ஒரு பேக்கரிக் கடையை நடாத்தலானான்.

தொழிலில் நல்ல முன்னேற்றம் கண்டுவந்த நிலையில் கடைச் சொந்தக்காரனுக்கு ஏற்பட்ட பொறாமை காரணமாக கடையை விட்டு எழும்புமாறு கூறிவிட்டான். இதுவும் கபூருக்கு பெருந்தலையிடியாக இருந்தது. சில நாட்கள் கழிந்த நிலையில் கபூர் ஒரு முடிவுக்கு வந்தான். தான் குடியிருந்த வீட்டின் ஒரு பகுதியில் பேக்கரி ஒன்றை நிறுவினான். அதன்வாயிலாக தானே எல்லா வேலைகளையும் செய்ததுடன் கடுமையாகப் போராடினான். அவனின் போராட்டத்தில் கபூரின் மனைவியின் குடும்பத்தினர்களும் பங்கு கொண்டதுடன், தேவையான அனைத்து உதவிகளையும் செய்தனர். நாட்கள் பல கடந்து இப்போது சிறு தொழிலாக விளங்கிய கபூரின் தொழிற்சாலையானது அந்தப் பிரதேசத்தில் பிரபல்யம் பெற்றதுடன், பத்துப் பேருக்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கும் நிறுவனமாகவும் மாறியது. கபூரின் வாழ்க்கையை ஆட்டிப் படைத்த வறுமையெனும் கொடிய பிசாசு விலகிச்சென்றுவிட்டது.

தற்பொழுது பதினான்கு பிள்ளைகளோடு மிகவும் சந்தோசமாக வலம்வருவதுடன் ஒரு தொழிற்; பேட்டையின் முதலாளியாகவும் பிரகாசிக்கின்றான். அவனை ஏளனமாகப் பார்த்தவர்கள், அவன்மீது வசை பாடியவர்கள் அவனை ஓரம்கட்டியவர்கள் தற்போது அவனை நாடிச் செல்வதுடன், அவனை வாயாரப் புகழ் பாடியும் வருகின்றனர். உண்மையாகவே இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்துப் பாதுகாக்கும் வல்ல இறைவன் ஒரு மனிதனுக்கு நன்மையைக் கொடுக்க நினைத்தால் அதனை யாராலும் தடுக்க முடியாது.

அவனால் தடுப்பதை எவராலும் கொடுக்கவும் முடியாது என்பதற்கு கபூர் ஒரு உதாரணமாக விளங்கினான். விடாமுயற்சியும் ஒருவித தெய்வசக்தியாகும். இதைத்தான் நாம் கைகொடுக்கும் தெய்வமெனக் கூறுகின்றோம்.

யூ.எல்.ஏ. மஜீட் (சாய்ந்தமருது)

# ஒளிஅரசியின் ஆலோசனைக்குழு

01. திரு எஸ். அருள்ராமலிங்கம் - பொது வைத்தியர் (கொழும்பு)
02. திருமதி செல்வமலர் சுந்தரேசன் - ஓய்வுபெற்ற அதிபர் (பருத்தித்துறை)
03. திருமதி மைமூனா அஹமட் - முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் (சாய்ந்தமருது)
04. திரு செ.செல்வராஜா - ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் (யாழ்ப்பாணம்)
05. திருமதி தேவராணி நவரட்ணம் - அதிபர் (துன்னாலை)
06. திருமதி கோகிலா மகேந்திரன் - பிரபல எழுத்தாளர் (தெல்லிப்பளை)
07. திருமதி செல்வநாயகி கோணேஸ்வரலிங்கம் - மேல்நிலைத் தாதி (வவுனியா)
08. திரு ச.லலீசன் - பிரதி அதிபர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை (கோப்பாய்)
09. திருமதி மைதிலி தயாபரன் - பொறியியலாளர் (வவுனியா)
10. திரு செ. மகேஸ் - ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் (யாழ்ப்பாணம்)
11. திருமதி றொதற்மெலாணி தவநாயகம் - வங்கி முகாமையாளர் (அச்சுவேலி)
12. திருமதி புஸ்பமலர் சிவலிங்கம் - ஓய்வுபெற்ற பிரதேசசபை செயலாளர் (வலிகாமம்)
13. திரு கு. சரவணபவானந்தன் - ஓய்வு நிலை கோட்டக்கல்விப்பணிப்பாளர் (யாழ்ப்பாணம்)
14. திரு கலாநிதி வி.எஸ். சிவராசா - ஜோதிடர் (வேலணை)
15. திரு. ஏ.ஜெயக்குமார் - ஓய்வுபெற்ற அதிபர் (நவாலி)



# இளையதளபதி விஜய் சொன்ன குட்டிக்கதை

## தெறி இசை வெளியீட்டில் அரங்கமே அதிர்ந்தது.

எங்கு திரும்பினாலும் விஜய் ரசிகர்களின் ஆரவாரத்துடன் தெறி திரைப்படம் தொடர்பாகவே பேச்சு. கடந்த மாதம் இதற்கு முடி சூடுவதுபோல் இப் படத்தின் இசை வெளியீட்டு விழா நடந்து முடிந்திருக்கிறது. தற்போது திரை உலகில் அதிகளவு எதிர்பார்ப்பு மிக்க படமாக தெறி திரைப்படம் உள்ளது. புதுவருடத்தை முன்னிட்டு வெளிவரவுள்ள இத்திரைப்படம் ‘தளபதி’ ரசிகர்களுக்கு கொண்டாட்டமாக இருந்தாலும் ‘தல’ ரசிகர்களுக்கு திண்டாட்டம்தான். தெறி ரசிகர்களின் மனங்களை தெறிக்க விடுமா என பொறுத்திருந்து பார்ப் போம்.

இவ் விழாவில் விஜய் பேசிய சில குறிப்புகள் உங்களுக்காக... சீன முன்னாள் அதிபர் மாவோ சாலையில் போய்க்கொண்டிருக்கும்போது, ஒரு சின்னப் பையன் தலைவர்கள் படத்தை வைத்து விற்றுக் கொண்டிருக்கிறான். அந்தப் பையன் வச்சிருந்த எல்லாப் படமும் மாவோ படமாகவே இருந்துச்சி, உடனே மாவோ, கர்வத்தோட அந்த சின்னப் பையனைக் கூப்பிட்டு, என்ன தான் என் மேல பாசம் இருந்தாலும், மற்ற தலைவர்களோட படத்தையும் சேர்த்து விக்கணும்னு சொல்லிருக்காரு, உடனே அந்தப் பையன் சொல்லிருக்கான், மற்ற தலைவர்கள் படமெல்லாம் வித்துப்போயிடுச்சி, உங்க படம் தான் இன்னும் விக்கலை என்று மாவோ அதிர்ந்து போனார். நீங்களும் கர்வமில்லாம இருந்தா மட்டும் தான் பெரிய உயரத்தை அடையமுடியும். அடுத்தவங்க தொட்ட உயரத்தை உங்க இலக்கா வச்சிக்காம, நீங்க தொட்ட உயரத்தை அடுத்தவங்களுக்கு இலக்கா வைக்கணும். உங்களைச் சந்திக்கிற வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் சில விஷயங்களை பகிர்ந்துக்கணும் ஒரு ஆசை தான். போரடிச்சா விட்டுருங்க, ஸ்பார்க் அடிச்சா ஏத்துக்குங்க.

**நீங்க இருட்டுல படம் பார்க்குறதுனால தான் நாங்க இப்போ வெளிச்சத்துல இருக்குறோம்.**

**தோல்விக்கு ஆயிரம் காரணங்கள் இருக்கலாம், ஆனால் வெற்றிக்கு ஆயிரம் தோல்விகள்தான் காரணம்.**

கடைசியா, போலீஸுக்கு அக்யூஸ்ட கண்டா ரொம்பப் பிடிக்கும், இந்த தெறி போலீஸ அந்த அக்யூஸ் டுக்கு கூட பிடிக்கும். இவ்வாறு விஜய் பேசி முடிக்க, விஜய் ரசிகர்களால் அரங்கமே அதிர்ந்தது.




(ஜன[ா]ரஞ்சகன், கொழும்பு)

# Shrilanka என எழுவதே நாட்டுக்கு அமைதி தரும்



எண்சோதிடம் என்பது எண்களுக்கும் வாழ்வின் நிகழ்வுகளுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறி அதன் அடிப்படையில் வருங்காலத்தைக் கணிக்கும் சோதிடம் ஆகும். எடுத்துக் காட்டாக ஒருவருடைய பிறந்த தேதி வீட்டின் இலக்கம் பெயர் எழுத்துக்களின் கூட்டுத்தொகை போன்ற எண்களுக்கும் அவருக்கு நிகழக்கூடிய இன்ப துன்பங்களுக்கும் தொடர்பு இருப்பதாக நம்பப்படுகிறது.

ஒருவருக்கு அவர் பெயரை மாற்றி அவருக்கு சாதகமான எண் உடைய பெயர் வைத்தால் அவருக்கு நன்மைகள் விளையும் என்று நம்பப்படுகிறது. நம்பிக்கையே வாழ்க்கை என்ற தத்துவக்கருத்தின் அடிப்படையில் உலக மக்களில் பெரும்பாலானோர் சோதிடக் கலையை மிக உச்சமாக நம்பிவருகின்றனர். அந்த வகையில் இந்துப் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு யாழ் மாவட்டத்தின் பிரபல சோதிடர்களில் ஒருவரான வேலணை சிவராசாவுடன் சிறப்பு நேர்காணல் ஒளிஅரசி வாசகர்களுக்காக...

**ஒளிஅரசியின் வாசகர்களுக்காக உங்களை நேர்காண்பதில் மிக்க மகிழ்ச்சி. உங்களைப்பற்றி சிறிய அறிமுகம் ஒன்றைத்தர முடியுமா?**

ஆம், நான் மீசாலையைச் சொந்த இடமாகக் கொண்டிருந்தாலும் எனது புகுந்த ஊர் வேலணை என்பதால் எனது பெயரை வேலணை சிவராசா எனக்கொண்டுள்ளேன். நான் B. A Bphil பட்டப் பின் கல்வி டிப்ளோமா ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளேன். நான் ஒரு விரிவுரையாளராக வருவேன் என்பதே பலரது எதிர்பார்ப்பாக இருந்தது. எனது பெயர் 22ம் எண்ணில் இருந்தபடியினால் என்னால் அவ்வாறு வரமுடியவில்லை.

ஏனென்றால் பெயாக்கூட்டுஎண் 22இல் உள்ளவர்கள் எவ்வளவு தான் திறமைசாலியாக இருந்தாலும் உச்சத்திற்கு வரமுடியாது நான் கிராமசேவகராக இருந்து பின்னர் மக்கள் வங்கியில் வேலை பார்த்து பின்னர் அசிரியராக இருந்து அதிபராகி ஒய்வுபெற்றேன்.

முன்னைய காலங்களில் பாடநூல் சம்பந்தமாக பல பயிற்சி நூல்களையும் தற்போது முன்பள்ளி மாணவர்களுக்கான நூல்களையும் வெளியிடுகின்றேன். எனது மனைவி கிராம அதிகாரியாக இருந்து ஒய்வு பெற்றவர். எனக்கு மூன்று பெண்பிள்ளைகள். இரண்டுபேர் வெளிநாட்டிலும் ஒருவர் எமது நாட்டில் வைத்தியராகவும் உள்ளார். இயன் மருத்துவ வைத்தியர் பிரியந்தி கிரிதரன்.

**நீங்கள் இத்துறைக்கு வரக்காரணம்?**

பண்டிதர் சேதுராமன் அவர்களின் **நீங்களும் அதிஸ்டசாலியாகலாம்** என்னும் புத்தகமே எனது இத்துறைக்கான ஆரம்பம்.

**சோதிடம் என்பது கடவுளால் வழங்கப்படும் வரமா, அல்லது கற்றுத்தேறவேண்டிய பாடமா?**

அது கடவுளால் அருளப்படும் வரம். அருள் மட்டுமன்றி அனுபவமும் தேவை. அதிகமாக வாசித்து அறியவேண்டியதுமாகும். அதுமட்டுமன்றி கடக லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சோதிடக்கலை கைவந்த கலையாகும்.

**சோதிடக்கலையின் தோற்றுவாய் பற்றி கூற முடியுமா?**

சோதிடம் என்பது ஒரு கடல். இது கடவுளால் சித்தர்களுக்கும் சித்தர்களால் மானிடர்களுக்கும் கூறப்பட்டது. ஒவ்வொருவரினதும் ஊழ்வினைப் பயனே கிரகங்களாக வெளிப்படுகின்றன.

**சோதிடக்கலை தொடர்பான உங்கள் சேவைகள் குறித்து?**

துன்பப்படுகின்றவர்களைக் கரையேற்றும் முகமாக அதிஸ்ட எண்களில் பெயர்வைப்பதையே செய்துவருகின்றேன். கடைகள் மற்றும் தனிப்பட்ட நபர்களுக்கு பெயர்வைத்தல், ஆனந்தி திருமண



சேவை நிலையத்தின் மூலம் திருமணப் புரோக்கர் சேவை, அதிஸ்ட இயந்திரங்கள் செய்தல், திருமண மாகாத பெண்கள், குழந்தை பாக்கியம் இல்லாத பெண்களுக்கு நாக விளக்கு செய்துகொடுத்தல் வீடு, கிணறு போன்றவற்றிற்கான நிலம் தெரிதல் போன்ற சேவைகள் செய்வதுடன் மாதாந்தம் 10000 இற்கும் அதிகமான சோதிடப்புத்தகங்களை (சனி மாற்றம், வியாழ மாற்றம் தொடர்பாக) வெளியிட்டு வருகின்றேன். இலங்கை முழுவதும் எனக்கென ஒரு வாசகர் வட்டம் இருப்பதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். எனது முதலாவது புத்தகம், இந்தப் புத்தகம் உங்கள் வாழ்க்கையை மாற்றும் என்பதேயாகும். டான் ரிவி யில் தினமும் காலை ஏழு மணிக்கு எனது பலன்கள் கூறப்படுகின்றன. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 10 மணிக்கு காலம் எப்படி என்னும் தலைப்பில் வாசகர் கேள்வி பதில் நிகழ்வும் செய்துவருகின்றேன். இவற்றுடன் இறந்த ஆத்துமாக்களுக்கு கல் வெட்டு எழுதுவதையும் செய்கின்றேன்.

**நீங்கள் பெற்ற பட்டங்கள்?**

எனது சோதிடக்கலையைப் பாராட்டி கலாச்சார அமைச்சினால் ஜோதிர் வித்யா ரத்னா என்ற விருதும் சமூக சேவைக்காக சாமஸ்ரீ தேசமானிய விருதும் கிடைத்தது. இவ்விடயத்தில் நான் ஒன்றைக்கூறவேண்டும், கலாபூசண விருது வழங்கும் போது ஜோதிடக்கலை புறக்கணிக்கப்படுவது மிக்க மனவருத்தம்.

**மலரும் புதுவருடம் எமது நாட்டிற்கு எவ்வாறான பலனைத் தருகின்றது?**

ஆரம்பத்தில் இலங்கை சிலோன் என்றே அழைக்கப்பட்டது அதன் கூட்டு எண் 33 ஆகும். அப்போது அமைதியாகவே இருந்தது. அதன் பின் சிறிலங்கா என்பது இல 18 இல் உள்ளதால் தான் நிலைமை இவ்வாறுள்ளது. நாட்டில் அமைதியும் சுபீட்சமும் நிலவவேண்டுமானால் இதன் பெயர் 23, 5 இல் வருமாறு மாற்றம் செய்யப்படவேண்டும். அதாவது shrilanka என எழுதப்படவேண்டும். Tamils என்பது இல 7இல் வருவதால் எப்போதும் தீர்வு காணப்பட முடியாத நழுவல் போக்கே காணப்படும்.

**துர்முகி வருடத்தில் எந்தெந்த இராசியினருக்கு பலன் நன்றாக இருக்கும்?**

இடபம் 7ம் வீட்டில் சனி
சிங்கம் 4ம் வீட்டில் சனி
விருச்சிகம் 7 ½ சனி
தனு 7 ½ சனி
கும்பம் 10 இல் சனி
மீனம் 9 இல் சனி

இது தவிர ஏனைய இராசியினருக்கு பலன்கள் நன்றாக இருக்கும்.

**சோதிடம் என்பது மக்கள் வாழ்வில் அதிகளவு செல்வாக்குச்செலுத்துகின்றது என எண்ணுகின்றீர்களா?**

நிச்சயமாக, ஆயகலைகள் அறுபத்து நான்கில் சோதிடக்கலையும் ஒன்று, இது நிச்சயமாக புறக்கணிக்கப்பட முடியாத ஒன்று. இந்துக்கள் மட்டுமன்றி சிங்களவர், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் கூட பெயர் எண் பொருத்தத்திற்காய் என்னிடம் வருகின்றனர். இது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

**சோதிடத்திற்கும் இறை நம்பிக்கைக்கும் என்ன தொடர்பு?**

ஊழ்வினைப்பயன்படிதான் கிரகங்கள் அமைகின்றன அதாவது எமக்கு கிடைக்கும் நன்மை தீமைகள் மனைவிமக்கள் எல்லாமே. இதனை இறை நம்பிக்கை மூலமே எண்ணியபடி நிறைவேற்றலாம்.

**இறுதியாக ஒளிஅரசி சஞ்சிகை பற்றிய உங்கள் கருத்து யாது?**

ஒளிஅரசி ஒரு இனிய மாத சஞ்சிகை. பெண்களுக்கு மட்டுமல்ல அனேக ஆண் வாசகர்களையும் தன் வசம் இணைத்துள்ளாள்.

இணையத்தில் தொலைகின்ற எம் சந்ததிகளை எழுத்துலகின் பால் இழுத்துவர பெரிதும் முயற்சிக்கின்றாள். இதன் சமூக எண்ணம் ஈடேற என்றும் எனது நல்லாசிகள் உரித்தாகட்டும். ஒளிஅரசியின் வெற்றிப்பாதை தொடரட்டும்.



ஒளிஅரசி



# நடத்தைப் பிறழ்வுகளுக்கு ஆசிரியர்களும் காரணமாகலாமா?

அன்றாட செய்திப் பத்திரிகைகளிலும் தொலைக் காட்சிகளிலும் முக்கிய இடத்தைப் பிடித்துள்ள ஒரு செய்திதான் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம். அலுவலகத்திலோ பொது இடங்களிலோ மூன்று பேர் கூடிப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள் என்றால் அங்கே முக்கிய தலைப்பாக இருப்பதும் பாலியல் வல்லுறவுதான்.

மூன்று வயது பச்சிளம் குழந்தை முதல் 68 வயது மூதாட்டிவரை மிருகத்தனமாக இச்சைக்கு உள்ளாக் கப்படுகின்றனர். இவை தொடர்பாக பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன. சந்தேக நபர்கள் கைதுசெய்யப்படுகின்றனர். நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

இப்படி இழுத்தடித்துக் கொண்டிருக்கும்போதே கைதுசெய்யப்பட்டவர்கள் பிணையில் வெளியே வந்துவிடுகின்றனர். அவர்கள் தொடர்பான விசாரணைகள் முடிவடைந்து தண்டனை வழங்கப்படும் காலத்தில் இப்படியொரு சம்பவம் இடம்பெற்றதையே மக்கள் மறந்துவிடுகின்றனர். அண்மையில் செல்வி சேயாவின் கொலை தொடர்பான வழக்குக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், அது நிறைவேற்றப்படுமா என்பது கேள்விக்குறியே.

பாலியல் குற்றவாளிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவதாலோ தண்டனை வழங்கப்படுவதாலோ இதனைத் தடுத்துவிட முடியாது. இப்படியான குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் யார்? ஏன் இப்படியான செயல்களில் ஈடுபடுகின்றனர்? அவர்கள் உருவான சூழல் எப்படியானது? அவர்கள் வளர்க்கப்பட்ட விதம் எப்படி? என்பன போன்ற விடயங்களைக் கண்டறியவேண்டும்.

இவ்விடயத்தில் பாடசாலை ஆசிரியர்கள் முக்கிய வகிபாகத்தை ஏற்கமுடியும், ஏற்கவேண்டும். சகல பாடசாலைகளிலும் உடற்பயிற்சி மற்றும் உடற்சுகாதாரம் கற்பிக்கப்படுகின்றது. பாலியல் என்பது ஒன்றும் தடைசெய்யப்பட்டதோ அல்லது அருவருக்கத்தக்க விடயமோ அல்ல. மனித வாழ்வில் அதுவும் முக்கியமானதுதான். ஆனால், அதன் இரகசியத்தன்மை, வரைமுறைகள் தெளிவுபடுத்தப்படவேண்டும்.

எமது உடல் உறுப்புகளில் அடுத்தவரின் கைகள் படுவதோ பார்ப்பதோ கூடாது என்ற நிலைப்பாட்டை ஆரம்பத்திலேயே ஏற்படுத்த வேண்டும்.

பெரும்பாலான சம்பவங்கள் குடும்ப உறுப்பினர்களால் - பெரியவர்களால்தான் நிகழ்த்தப்படுகின்றது. சிறுவயதுமுதல் ஆதரவாக மடியில் தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்சுகின்றனர். அதையே காலப்போக்கில் தமது கபடத்தனத்துக்கும் சாதகமாக்கிக்கொள்கின்றனர். தமக்கு என்ன நடக்கிறது, என்ன செய்கிறார்கள் என்பது தெரியாமலே இடம்கொடுத்து விடுகின்றனர் பிள்ளைகள். பெற்றோரும் தினசரி பிள்ளையைத் தூக்குபவர்தானே, தினசரி தொடுபவர்தானே என்று சர்வசாதாரணமாக எடுத்துக்கொள்கின்றனர். பல நாட்கள், பல மாதங்கள், பல வருடங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று ஏதாவது விபரீதமான மாற்றம் ஏற்பட்ட பின்னர் பெற்றோர்கள் விசாரிக்கும்போதுதான் பிள்ளைகள் நடந்த சம்பவத்தை விவரிக்கின்றனர்.

ஆனால், இந்தக் குழந்தைக்கு சிறுபராயம் முதலே எந்த உடல் உறுப்பையும் பிறர் பார்க்கக்கூடாது, தொடக்கூடாது என்று உணர்த்தினால் மூன்றாவது நபரின் கரம் படும்போதோ, தவறாகப் பழகும் போதோ அக்குழந்தை ஆரம்பத்திலேயே இசைவுகாட்டாது அந்த நபரிடமிருந்து தூர விலகி விடும் என்பது உறுதி.

தொண்ணூறு வீதமான பாடசாலைகளில் உடற்கூறு மற்றும் உடற்பயிற்சி விஞ்ஞானப் பாடங்களுக்கு இளம் பெண் ஆசிரியர்களே பொறுப்பாக இருக்கின்றனர். இவர்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக வளர்ந்த பிள்ளைகள் முன் விளக்கம் அளிக்கவோ தெளிவுபடுத்தவோ கூச்சப்படுகின்றனர். ஆசிரியர்கள் சங்கோஜப்பட்டு அந்தப் பகுதிகளை ஒதுக்கிவிட்டு நீங்களே வாசித்துத் தெரிந்துகொள்ளுங்கள் என்று கூறிவிட்டு ஒதுங்கிவிடுகின்றனர்.

இது மாணவர்கள் மத்தியில் ஒரு சந்தோசத்தையும் அங்கு ஏதோ மர்மம் இருக்கின்றது என்ற எண்ணத்தையும் உண்டுபண்ணுகின்றது. தம் இஷ்டப்படி துருவி ஆராயத் தலைப்படுகின்றனர். மாணவர்களின் தன்னிச்சையான ஆய்வுகளும் முடிவுகளும் அவர்களைத் தவறான வழிக்கு இட்டுச் செல்கின்றன. சுகாதார பாடத்தில் நோய்த் தொற்றுகள் மற்றும் காரணிகள் தொடர்பாக மாணவர்களுக்குப் பூரண விளக்கம் கூறப்படவேண்டும்.

குறிப்பாக எயிட்ஸ் உயிர்க்கொல்லி நோய் எவ்வாறு தொற்றுகின்றது? இந்நோயினால் பாதிக்கப்பட்ட நண்பர்களுடன் பழகுவதினால் எயிட்ஸ் தொற்றாது. அவர்களுடன் சேர்ந்து ஒரே தட்டில் உணவைக்கூட சாப்பிடலாம். எச்.ஐ.வி. கிருமித் தொற்றுள்ள நபருடன் உடலுறவுகொள்வதன் மூலம் அல்லது பாதிக்கப்பட்ட நபர்களின் இரத்தம் தவறுதலாக ஏற்றப்படும்போதுதான் இந்த நோய் தொற்றுகின்றது.

இவை தொடர்பான போதிய விளக்கம் இல்லாத ஆசிரியர்களின் அரைகுறை ஞானத்தால் குளியாப்பிட்டியில் ஒரு மாணவனின் எதிர்காலமே கேள்விக்குறியாக்கப்பட்டு சின்னாபின்னமாகி உள்ளது.

இந்த விடயம் நாட்டையே பாதித்து ஜனாதிபதியும் பிரதமரும் கூட தலையிடும் அளவுக்குப் போய்விட்டது. இவ்விடயத்தில், சம்பந்தப்பட்ட அதிபர் உட்பட ஆசிரியர்களும் பொறுப்பற்ற வகையில் நடந்துகொண்டதாலேயே இந்த விபரீதம் ஏற்பட்டது. காரணம் சம்பந்தப்பட்டவர்களின் தெளிவின்மை. சில ஆசிரியர்கள் குறிப்பிட்ட பாட நேரத்தில் வகுப்புகளுக்கே செல்வதில்லை. அதை ஒரு ஓய்வுப் பாடவேளையாக கருதுகின்றனர். விரல்விட்டு எண்ணக்கூடிய ஆசிரியர்கள் யதார்த்தம் புரிந்து எதை எப்படி முடியுமோ அப்படித் தெளிவுபடுத்துகின்றனர். அவர்கள் பாராட்டப்படவேண்டியவர்களே. ஆனால், பெரும்பாலான ஆசிரியர்கள் இந்தத் தார்மீகக் கடமையில் இருந்து தவறிவிடுகின்றனர். மாதா, பிதா, குரு, தெய்வம் என்கிறோம், ஏன்? அதாவது, கடவுளிடம் நேரடியாகக் கூறமுடியாது. ஆனால், ஆசிரியர்களிடம் நேரடியாகக் கேட்டு தெளிவுபெற முடியும். அதனால்தான் கடவுளுக்கு முன் குருவை முன்னிலைப் படுத்தியுள்ளனர்.

எனவே, பாடசாலை ஆசிரியர்கள் வெறும் பாடங்களை மட்டும் படிப்பிப்பவர்கள் அல்லர். ஒரு சமுதாயத்தின் வழிகாட்டிகள், நாளைய சமுதாயம் இவர்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர்கள் செய்வது தொழில் அல்ல, அளப்பரிய சேவை. மாணவ சமுதாயத்தை சிறந்த கல்விமான்களாக உருவாக்கும் அதேவேளை, சிறந்த ஒழுக்க சீலர்களாகவும் உருவாக்கவேண்டும்.

இளம் வயதில் பாடசாலைப்பருவத்திலேயே நல்வழிப்படுத்தினால் சமுதாய சீரழிவுகள் இடம் பெறுவதை ஓரளவு தடுக்கமுடியும் என்பது பொதுவான நம்பிக்கை.



(மலையகத்தின் ஜனரஞ்சக எழுத்தாளர்- (இரா.சிகா)

## மெல்லச் சிரியுங்கள்

கணவன்: உன்னைக் கட்டினதுக்குப் பதிலா ஒரு பசுமாட்டைக் கட்டியிருக்கலாம்.

மனைவி: ஆனாஅதுக்கு மாடு சம்மதிக்கணுமே?



### சிறந்த பதில்களுக்கு ரூபா 100 ரீலோட். உங்கள் பதில்களை எழுதுங்கள்

01. பொதுவாக தற்போது பத்திரிகை விற்பனை குறைவதற்கான மிகப் பிரதான காரணம் என்ன? (விடைகளை 6ஆம் பக்கத்தில் உள்ள E.mail முகவரிக்கு அனுப்பலாம்)

**கடந்தமாத வினாக்கான விடை**

**கடவுள் எப்போது பிறந்தார்?**

ஆக்குவதும் அழிப்பதும் கடவுள் என்பதால் நிச்சயம் மனிதனுக்கு முன்னர் மனிதனை வழிப்படுத்துவதற்காக கடவுள் பிறந்திருப்பார். ஆனாலும் ஒவ்வொரு தம்பதிகளும் தமது குழந்தைகளை கடவுளுக்கு உருவகித்துப் பார்ப்பதாலும் மனிதன் செய்யும் நன்மை, தீமையின் ஒவ்வொரு சதர்ப்பத்திலும் கடவுள் பிறக்கின்றார்.

(சிற்றம்பலம் - கொழும்பு)



**இந்துக்களின் திருமணச் சடங்கில் அம்மி மிதித்தல்**

அதன் பொருள் என்னவென்றால் உலகத்திலுள்ள அனைத்து உலோகங்களையும் வெப்பத்தின் மூலம் வளைக்கமுடியும். கருங்கல்லை உடைக்கமுடியுமே தவிர வளைக்கமுடியாது. அதே போன்று கற்பு எனும் பண்பில் நான் வளைந்து கொடுக்கமாட்டேன். அதற்கு ஏதேனும் ஆபத்து வருமாயின் கல்பிளந்து போவது போல் என் உயிரை இழப்பேன் என்பதைக் காட்டவே பெரியவர்கள் மணப்பெண்ணை அம்மி யின்மேல் கால்வைத்து மிதிக்கச்செய்தனர்.

**வக்கற்றவனுக்கு வாத்தியார் வேலை போக் கற்றவனுக்கு பொலிஸ் வேலை**

இந்த பழமொழியை நாம் எப்போதெல்லாம் பாவிக்கின்றோம்? ஒருவன் ஒரு செயலை தப்பா கவோ தவறாகவோ செய்யும் போதோ பேசும் போதோ அல்லது அறியாமையினால் தடுமாறித் தவிக்கும் போதோ, அவர்கள் செயலில் திறமை இல்லை,

இவர்களை யார் இந்த இடத்தில் வைத்தது? அவன் அவனை அந்தந்த இடத்தில் வைக்கணும் என்பது போன்ற கருத்திற்குத்தான்

வக்கற்றவனுக்கு வாத்தியார் வேலை போக் கற்றவனுக்கு பொலிஸ் வேலை என்று சொல்லி நையாண்டி பண்ணுவார்கள்.

ஆனால்இ சொல்பவர்களைப் பார்த்து நகைப் பதா அழுவதா என்பதுதான் புரியவில்லை காரணம் இதன் பொருள் அப்படி அல்ல

சொல்லும் பழமொழி சரியானதும் இல்லை வாக்கு கற்றவனுக்கு வாத்தியார் வேலை போர் கற்ற வனுக்கு பொலிஸ் வேலை என்னும் ஆழ்பொருள் கொண்ட பழமொழியை எப்படி எல்லாம் சொல்லி வைக்கின்றோம்.

பூங்கோதை (கோ/விவேகானந்தா கல்லூரி)

சென்ற மாத ஒளிஅரசியில் ஆழஅறிவோம் பகுதியில் பிரசுரமான கருத்திற்கு, வாசகர் ஒரு வரிடமிருந்து வந்த பதில் கருத்து உங்களுக் காக...

**காகத்துக்கு சோறு வைப்பது ஏன்?**

காகத்துக்கு நாம் சோறு வைப்பது ஏன் என்ற கேள்வி பலரின் மனதில் பல சந்தேகங்களை உரு வாக்குகின்றது. அதற்கு, பலர் பலவிதமான அர்த்தங் கள்யும், காரணங்களையும் சொல்லிவருகின்றார்கள். அக்காரணங்களில் பெரும்பாலும் சொல்லப்பட்டு வருவது என்னவென்றால். காகம் நம் முன்னோர்கள். ஆகையால் அவர்களை நாம் மறக்காமல் எப்போதும் அன்புடன் நினைவுகூரவேண்டும் என்பதேயாகும். இங்கே தான் எனக்கு பெரும் சந்தேகம் எழுகின் றது,

அப்படி என்றால் நம் முன்னோர்கள் எல்லோரும் காகமாக மட்டும் தான் பிறந்திருக்கின்றார்களா? கிளி, கொக்கு ,ஆந்தை என்று ஏன் பிறந்திருக்க கூடாது? இது எனக்கு எழுவது போல் இன்னும் பலருக்கும் எழுந்திருக்கும். அப்படி பார்க்கும் போது ,இதில் முரண்பாடு இருப்பது புரிகின்றது அல்லவா....? இந்த குழப்பத்திற்கு விடை காண நான் யோசித்த போது என் அறிவுக்கு எட்டிய கருத்தைப் இங்கே பகிர்ந்து கொள்கின்றேன்.

**இந்தப் பழக்க வழக்கம் இன்று நேற்று தோன்றியதல்ல.**

இது மிகப்பழமையானதொன்று. அதனை அப் படியே நாம் பின்பற்றி வருகின்றோம் என்பது உண்மை. இங்கே தான் நாம் ஒன்றை மிகக் கூர்ந்து கவனிக்கவேண்டும். முன்னைய காலத்தில் மன்னர் கள் ஆட்சி புரிந்தார்கள், அவர்கள் தமக்கிடையே பல சூது வாது நயவஞ்சகங்கள் செய்து, ஆட்சியாளர் களைக்கொல்வதும், அவர்கள் வம்சத்தை அழிப்பது மாக இருந்ததாகப் பல வரலாற்றுக் கதைகள் கூறு கின்றன, அதற்காக அவர்கள் கையில் எடுத்துக் கொண்ட ஆயுதம் துப்பாக்கியோ ,போர்வாளோ அல்ல, உணவில் விசம் வைப்பது, குடி பானங்களில் விசம் கலப்பதென்று தங்களால் முடிந்த எல்லாவற் றிலும். இப்படி வஞ்சம் செய்து அழிப்பதையே பெரும் யுக்தியாக கடைப்பிடித்தார்கள்.

**இதை எப்படி அறிவது?**

எவ்வாறு கண்டு பிடிப்பது என்று அவர்கள் கண் டறிய கையாண்ட வழிமுறை தான் காகத்திற்கு சோறு வைப்பது என்பதாகும். நச்சுத் தன்மையோ, விசமோ இருந்தால் அந்த உணவை காகம் ஒரு போதும் சாப்பிடாது. அதனைக் கண்டறியும் ஆற்றல் காகத்திடம் அதிகம் உண்டு . அத்தோடு மட்டுமன்றி, இன்னும் பல காகங்களை வரவழைத்து, பரிசோதி த்ததன் பின்புதான் அது உணவை உண்ணும். இதை நீங்களே கவனித்திருப்பீர்கள். இதை நன்கு அறிந்த நம் முன்னோர் ,தம்மைப் பாதுகாத்துக்கொள்ள இந்த வழியை கையாண்டு வந்திருக்கலாம்.

-கண்ணன் கண்ணராசன் (கச்சாய் - ஜேர்மனி)-

# வெந்தயத்தின் மருத்துவக் குணங்கள்



வெந்தயத்தை வறுத்து பொடி செய்து 1 டம்ளர் நீரில் ஊறவைத்து உட்கொள்ள வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், சுரம், உட்சூடு, வெள்ளை, சீதக்கழிச்சல் முதலியவை நீங்கும்.

வெந்தயம் 17 கிராம் எடுத்து 340 கிராம் பச்சரிசியுடன் சேர்த்து சமைத்து உப்பிட்டுச் சாப்பிட குருதி பெருகும்.

கஞ்சியில் வெந்தயத்தைச் சேர்த்து காய்ச்சிக் கொடுக்க பால் சுரக்கும்.

வெந்தயத்தை ஒரு கைப்பிடியளவு எடுத்து ஊறவைத்து தலை முழுகிவர முடி வளரும். அது முடி உதிர்ந்து போவதைத் தடுக்கும்.

வெந்தயத்தை உலர்த்தி பொடி செய்து மாவாக்கிக் களி கிண்டிக் கட்ட, புண், பூச்சி நோய்களைப் போக்கும்.

வெந்தயத்தை வறுத்து இத்துடன் வறுத்த கோதுமையைச் சேர்த்து கோப்பிக்குப் பதிலாக வழங்கலாம் இதனால் உடல் வெப்பம் நீங்கும்.

**வெந்தய லேகியம்**

வெந்தயம், மிளகு, திப்பிலி, பெருங்காயம் இவற்றை சம அளவு எடுத்து உலர்த்தி நன்றாக வறுத்துப் பொடி செய்து சர்க்கரைப் பாகில் போட்டு இலேகியமாகச் செய்து சாப்பிட சீதக்கழிச்சல், வெள்ளை, மேல் எரிச்சல், குருதியழல், தலைகனம், எலும்பைப் பற்றிய சுரம் தீரும்.

நீர் வேட்கை இளைப்பு நோய், கொடிய இருமல் இவைகளை விலக்கும். ஆண்மை தரும்.

வெந்தயம், கடுகு, பெருங்காயம், கறிமஞ்சள் இவைகளை சமபாகம் எடுத்து நெய் விட்டு வறுத்து பொடி செய்து சோற்றுடன் கலந்துண்ண வயிற்றுவலி, பொருமல், வலப்பாடு, இடப்பாட்டு ஈரல் வீக்கங்கள் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வரும்.

மிளகாய், கடுகு, வெந்தயம், துவரம்பருப்பு, பெருங்காயம், கருவேப்பிலை இவைகளைத் தக்க அளவு எடுத்து நெய்விட்டு வறுத்து புளிக்குழம்பை இதில் கொட்டி உப்பு சேர்த்து சட்டியிலிட்டு அரைப்பாகம் சுண்டிய பின் இறக்கி சூட்டுடன்சாப்பிட வெப்பத்தால் நேரிடும் சிற்சிலப் பிணிகள் தணியும்.

இத்துடன் கசகசா, கோதுமை நெய், பால், சர்க்கரை சேர்த்து கலந்து உட்கொள்ள உடல் வலுக்கும். வன்மையுண்டாகும். இடுப்பு வலி தீரும்.

வெந்தயத்தை சீமை அத்திப்பழம் சேர்த்தரைத்து கட்டிகளின் மீது பற்றுப்போட அவைகள் உடையும். படைகள் மீது பூச அவைகள் மாறும்.

வெந்தயத்தை, சீமைப்புளி, அத்திப்பழம், திராட்சை ஒரே எடையாகச் சேர்த்து குடிநீரிட்டு தேன் சிறிது கலந்து சாப்பிட இதயவலி, மூச்சடைப்பு இவை போகும்.

வெந்தயத்தை வேகவைத்து தேன் விட்டுக்கடைந்து உட்கொள்ள மலத்தை வெளியேற்றும். இது மார்புவலி, இருமல், மூலம், உட்புண் இவைகளைப் போக்கும்.

நன்றி இணையம்

# குழந்தை வளர்ப்பில் முக்கிய பங்கு வகிக்க வேண்டியது தாயா? தந்தையா?

---------------- தந்தை ----------------

**க.மாதவன் வவுனியா**

பிள்ளைகள் வளர்ப்பில் தந்தையின் பங்கைக் கூற தமிழில் பழமொழி உள்ளது. ''தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை'' என்பது ஒன்று. பிள்ளைகள் தந்தை கூறுவதைக் கேட்டு நடந்தாலே நல்ல முறையில் வளர்வார்கள் என்ற கருத்து முன்னர் இருந்தது. பிள்ளைகளின் விருப்பத்திற்கும் திறமைக்கும் ஏற்ப உரிய முறையில் வழிகாட்ட வேண்டிய பொறுப்பு தந்தைக்கு உள்ளது.

கல்வியில் மட்டுமல்ல, தந்தை என்ற முறையில் பிள்ளைகளின் வாழ்வில் பல வழிகளில் பங்கு கொள்ள வேண்டிய தேவை தந்தைக்கு உள்ளது. வேலையில் அதிக நேரத்தைக் கழிப்பதால் பிள்ளைகளின் வாழ்வில் தந்தை அதிகம் பங்களிப்பதில்லை. அதனால் சரியான உதாரண புருஷன் இல்லாததால் பிள்ளைகள் பாதை மாறிப் போகிறார்கள். பிள்ளைகள் தந்தையிடமிருந்து புரிந்துணர்வை அன்பை எதிர்பார்க்கின்றார்கள். பொதுவாக தந்தையர் பிள்ளைகளோடு தினசரி மிகக்குறைந்த அளவு நேரத்தையே செலவிடுகின்றனர்.

சிறு வயதில் கிடைக்கும் தந்தையின் அணைப்பும் ஆதரவான வார்த்தைகளும் ஏற்படுத்தும் தாக்கம் பிள்ளைகளின் வாழ்நாள் வரை நினைவு கூரத்தக்கது. சிறுவயதில் இவ்வாறான அன்பான வளர்ப்பையும் உணர்வு பூர்வமான ஆதரவையும் பெறாவிட்டால் பிற்காலத்தில் பிள்ளைகளிடமிருந்து தந்தையும் அதை எதிர்பார்க்க முடியாது. பிள்ளைகள் உணர்ச்சி ரீதியாகவும், உடல் ரீதியாகவும் காயப்படும் போது வெளிப்படையாக அழவும், அதனை நம்மிடம் சொல்லவும் தைரியம் கொண்டவர்களாக வளர்வதில் தந்தையின் அன்பான வளர்ப்பு முறை முக்கிய பங்கு வகிக்கிறது.

ஒரு தந்தை எவ்வாறு தன் பிள்ளைகளின் மீது அன்பாக நடந்து கொண்டார் என்பது, அப்பிள்ளைகள் பிற்காலத்தில் அவர்கள் எவ்வாறு தனது தந்தையிடம் நடந்து கொள்கிறார்கள் என்பதை வைத்தே உணர இயலும். பொறுப்பை தாயிடம் சாட்டிவிட்டு, தந்தை அலட்சியமாக இருந்து விட முடியாது. சில பொறுப்புகள் தந்தைக்கே உரியவை எனலாம்.

---------------- தாய் ----------------

**கே.சுவர்ணலதா**

எந்தக்குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் கெட்டவராவதும் அன்னை வளர்பினிலேஎனும் பாடல் வரி மூலமே ஒரு தாய் குழந்தை வளர்ப்பில் ஆற்றும் பங்கினை எடுத்துக் காட்டமுடியும்..

ஐயிரண்டு மாதங்கள் அங்கமெல்லாம் நொந்து பிரசவம் எனும் மறுபிறப்பு எடுத்து குழந்தையை பிரசவித்து பிள்ளை வளரும் காலத்தில் தானும் ஒரு குழந்தையாய் மாறி .இவ் உலகில் சிறந்த தொரு பிரஜையாகத் திகழ தாய் பெரும் சவால்களையும் சிரமங்களையும் எதிர்கொள்கிறாள். தன் உதிரத்தினைப் பாலாக ஊட்டி நோயுற்ற வேளைகளில் இரவு பகல் எனப்பாராது கண்விழித்து, தன் குழந்தையை, கண்ணை இமைகாப்பது போல பாதுகாத்துக் கொள்கின்றாள்.

மாதா பிதா குரு தெய்வம் இதில் மாதாவையே முன்னிலைப்படுத்தப்படுகின்றது. கண்ணுக்கு இமை எவ்வளவு முக்கியமோ அதைப் போல குழந்தைக்கு தாய் முக்கியம். தந்தையும் குழந்தை வளர்ப்பில் சிறிய பங்களிப்புகளைச் செய்தாலும் முக்கிய பங்கு தாய்க்கே.

தாயொடு அறுசுவைப்போம்; என்பது ஆன்றோர் வாக்கு. தன்; பிள்ளைக்குத் தேவையான விரும்பிய உணவுகளை அனுதினமும் செய்து கொடுத்து மனமகிழ்ந்து கொள்வாள்.

பெண் குழந்தைகளோ ஆண் குழந்தைகளோ தாயிடமே தன் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்தும். இது அவர்களிடையே உள்ள அன்னியோன்ய தன்மைகளை எடுத்துக்காட்டும். ஆகவே குழந்தை வளர்ப்பில் தாயின் பங்கே பெரிதாகும்.

---------------- தந்தை ----------------

**ராதா குபேரன். இணுவில்**

எந்தக்குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்பினிலேஎனும் பாடல் வரி ஞாபகத்திற்கு வருகிறது.

உண்மையில, இந்தப் பாடல் உண்மையான எடுத்துக்காட்டாகவே விளங்குகின்றது. ஒரு குழந்தை பிறர் அரவணைக்கும் பாராட்டும் நல்ல குழந்தையாக வளர்வதற்கு தாயினுடைய வளர்ப்பு முக்கிய பங்காகும். பிள்ளைகளை வளர்ப்பது என்பது ஒரு தவம் அதை முறை யாகப் பின்பற்றினால் தான் இறுதியில் தக்க பலன் பெறலாம். பிள்ளைகளைத் தான்தோன் றித்தனமாக வளர்த்து விட்டுப் பிரச்சனைகள் ஏற் படும் போது அவர்களைத் திட்டுவதும் அடிப் பதும் எந்த வகையிலும் நியாயமாக இருக்காது. அது பிற்காலத்தில் பாரிய விளைவுகளை ஏற்ப டுத்தக்கூடும்.

கண்ணை இமை காப்பதுபோல குழந்தை களை வளர்த்தெடுக்கும் தாயானவள் அற விழு மியங்களைப்பேணி வாழ்தலின் புரிந்துணர்வை அடி மனதில் பதியச்செய்தல் வேண்டும். தான் பெற்ற பிள்ளை சான்றோன் எனப் பலராலும் பாராட்டப்படுவதையே பெற்ற தாயானவள் பெரிதும் விரும்புவாள் என்பதை ஈன்ற பொழு திற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய் என்று வள்ளுவரின் திருக்குறள் செப்புகின்றது. குழந்தைகளை நல்ல பண்புள்ள வர்களாக வளர்த்து எடுப்பவள் தாய் மட்டுமே.

குழந்தைகளுக்கு மிகவும் அடிப்படையாகத் தேவைப்படுவது தாயின் அன்பு மட்டுமே. அவ னியில் ஆயிரம் சொந்தங்கள் அவதரித்தாலும் அன்பால் அரவணைக்கும் ஓர் உன்னத ஜீவன் தாய் மட்டுமே. சிறு வயதில் இருந்தே குழந்தைக ளுக்கு, எது நல்லது, எது கெட்டது, என அறியும் பகுத்தறிவையும் கூட தாயால் மட்டுமே எடுத்து ரைக்கமுடியும்.

ஒவ்வொரு வீட்டிலும் தாயின் முழுமை யான அன்பு கிடைக்கும் குழந்தைகளும் சரி, சிறுவர்களும் சரி சரியான நடத்தையுள்ள குழந் தைகளாகவே இருப்பர். பிள்ளைகள் அவ்வாறு இருப்பதால் தற்காலத்தில் நடக்கும் பாலியல் பிரயோகம் , வன்முறை களவு கொலை இவை களையும் தவிர்த்துக் கொள்ளலாம். ஆகவே என் விவாதப்படி குழந்தை வளர்ப்பில் பெரும் பங்கு வகிப்பது தாயானவளே ஆகும்.

## விவாத மேடை 15 இற்கான தலைப்பு

**வெளிநாடுவாழ் தமிழ் மக்களின் பிள்ளைகள் எப்படி வளர விரும்புகின் றனர்? வெளிநாட்டுப் பண்பாட்டிலா? நமது பண்பாட்டிலா?**

உங்கள் விவாதங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 20.04.2016

## போட்டி -14- வெற்றிபெற்றோர்

| | |
|---|---|
| க.மாதவன் | (வவுனியா) |
| கே.சுவர்ணலதா | (கரவெட்டி) |
| ராதா குபேரன். | (இணுவில்) |

# கழுகுப் பார்வை

## ஆண் முந்தினால் வீரன் - பெண் முந்தினால் அடக்கமற்றவள்

ஆண் தன் காதலை பெண்ணிடம் நேரடியாகச் சொன்னால் அது வீரமாகவும் பெண் தன் காதலை ஆண்ணிடம் நேரடியாக சொன்னால் அது காமமாகவும் பார்க்கும் கழுகுக் கண் கொண் டதாக சமுகம் உள்ளது.

காதல் உணர்வு ஒன்றே!<br>
வாழப்போகும் ஜோடி ஒன்றே!<br>
புரியப் போகும் லீலைகள் ஒன்றே!<br>
வாழப் போகும் தம்பதி ஒன்றே!<br>
அடையப் போகும் இன்பம் ஒன்றே!<br>
இருப்பினும் ஏன் இந்த மாற்றுப்பார்வை பெண் மீது?

இதனால் தானோ என்னவோ, காதலை ஆண் தான் முதலில் சொல்வது சிறந்தது எனப் பெண்கள், ஆண்களை அலைய விடு கிறார்களோ! எனவும் சிந்திக்கத் தூண்டுகின்றது.



(ஜனா(ா)ரஞ்சகன், கொழும்பு)

பதில் : நான் இலங்கையின் கிழக்கு மாகாணம் பொத்துவிலைச் சேர்ந்தவன். பொத்துவில் அஸ்மின் எனும் பெயரில் மரபுக் கவிதைகளையும், புதுக் கவிதைகளும் எழுதி வருகின்றேன். வசந்தம் தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக, தொகுப்பாளராக செயற்பட்டு வருகின்றேன். விடை தேடும் வினாக்கள் (2002) விடியலின் ராகங்கள்(2003)எனும் மகுடத்தில் கவிதை நூல்கள், பாம்புகள் குளிக்கும் நதிகள் எனும் கவிதை நூலையும் வெளியிட்டுள்ளேன். சக்தி ரீவியினால் நடாத்தப்பட்ட 'இசை இளவரசர்கள் போட்டி நிகழ்ச்சி மூலம் பாடலாசிரியராக அறிமுகமானேன்.

தேசியமட்ட கவிதைப் போட்டிகளில் கலந்து கொண்டு ஜனாதிபதி விருது (2001), பேராதனை பல்கலைக்கழகத்தின் தங்கப் பதக்கம் (2003) உட்பட பல விருதுகளையும் கடந்த காலங்களில் பெற்றிருக்கின்றேன். வியர்வையின் ஓவியம் - 2010 கலை நிகழ்வில் சிறந்த பாடலாசிரியருக்கான விருதும் கிடைக்கப்பெற்றது. பொத்துவிலைச் சேர்ந்த மர்ஹூம் உதுமாலெவ்வை, ஆயிஷா தம்பதியினரின் மூத்த புதல்வனான நான் பொத்துவில் மத்திய கல்லூரியின் பழைய மாணவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடகவியல் துறையிலும் பட்டம் பெற்று ஆரம்ப நாட்களில் சுடர் ஒளி பத்திரிகையிலும் பணிபுரிந்திருக்கின்றேன். எனது கவிதைகள், கட்டுரைகளுக்கும் களம் கொடுத்தது சுடர் ஒளி பத்திரிகையாகும். அந்த பத்திரிகையின் இணை தயாரிப்பான ஒளிஅரசி என்னையும் நேர்காணுவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

**கேள்வி : அண்மையில் இந்திய சினிமாத் துறையினால் தங்களுக்கு வழங்கிவைக்கப்பட்ட எடிசன் விருது பற்றி கூறுங்கள்**

பதில் : இந்திய சினிமா உலகில் மிக முக்கியத்துவம் வாய்ந்த விருதான எடிசன் விருது அண்மையில் வழங்கிவைக்கப்பட்டமை வாழ்நாளில் மறக்க முடியாததாகும். இவ்விருது தமிழ் மூவி டாட்காம் மற்றும் உலகின் ஒன்பது தொலைக்காட்சிகள் இணைந்து நடத்திய 9வது எடிசன் தமிழ் திரைப்பட விருதாகும். இதனை சென்னை மாநகரில் நடாத்தியிருந்தார்கள். இவ்விழாவில் தமிழ் திரையுலகில் 2015ம் ஆண்டு தமது திறமைகளை வெளிப்படுத்திய ஜெயம்ரவி, அரவிந்த் சாமி, நயன்தாரா உட்பட பல முன்னணி கலைஞர்களுக்கும் இந்த நிகழ்வில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அதோடு நான் திரைப்படத்துக்காக தமிழ் சினிமாவில் அறிமுகமான ஈழத்து கலைஞனான இலக்கியச் சிற்றிதழின் முதன்மை ஆசிரியராகவும் சுடர் ஒளி வார வெளியீட்டின் கவிதைப் பகுதி ஆசிரியராகவும் பணிபுரிந்திருக்கின்றேன். அப்போது உணர்வுகள் என்ற பகுதியில் ஈழநிலா என்ற புனைபெயரில் ஈழத்தின் இலக்கிய நிகழ்வுகள், எழுத்தாளர்கள் குறித்துத் தனது மனப்பதிவுகளை எழுதி வந்திருந்தேன்.

**கேள்வி : உங்களது படைப்புக்களில் அதிகமானவை வெளிநாட்டு ஊடகங்களிலும் வெளியாவதாகவும் கூறப்படுகின்றது?**

பதில் : ஆம் எனது பதிவுகளில் அதிகமான வெளிநாட்டு ஊடகங்களிலும் வெளியாகின்றமை இந்நாட்டு கவிஞர்களுக்கு பெருமை சேர்ப்பதாகவே நான் எண்ணுகின்றேன். எல்லோரும் எழுதலாம். திறமைக்கு முக்கியத்துவம் கொடுத்து பதிவினை செய்கின்றவர்கள் வெளிநாட்டினர். இந்தியாவில் கோடிக்கனக்கான தமிழ்பேசும் மக்கள் வாழ்கின்றனர். எனவேதான் இந்தியாவில் ஒரு பத்திரிகையில் ஒரு கவிதை வெளிவருமாக இருந்தால் அதனை கோடிக்கனக்கான மக்கள் பார்க்கின்றனர்.

எனது படைப்புக்களுக்கு களமாக அமைகின்ற தென்றல் பண்பலை, இலங்கை வானொலி முஸ்லிம் சேவை, சக்தி பண்பலை, வசந்தம் பண்பலை, வெற்றி பண்பலை, பிறை பண்பலை, வெளிச்சம் பண்பலை, ஊவா சமூக வானொலி, ரீ. ஆர். டி. வானொலி (பிரான்சு), கனடா தமிழ் வானொலி, ஐ. பி. சி (இலண்டன்), ஜேர்மன் தமிழோசை, மின்னல் பண்பலை (மலேசியா), வேல்ட் தமிழ் நியூசு, லண்டன் தமிழ் வானொலி, வெற்றிமுரசு வானொலி (இத்தாலி) போன்ற வானொலிகளிலும் சக்தி தொலைக்காட்சி (இசை இளவரசர்கள், குட் மோர்னிங் ஸ்ரீலங்கா), வசந்தம் தொலைக்காட்சி (தித்திக்குதே, தூவானம்), டான் தொலைக்காட்சி (மண்வாசனை, தாலாட்டு), நேத்ரா தொலைக்காட்சி (பிரவாகம்) போன்ற ஊடகங்களிலும் எனது படைப்புக்கள் பதிவாகியிருக்கின்றன.

**கேள்வி : திரைப்படத்துறையில் உங்களது நுழைவினைப் பற்றி கூறுங்கள்**

பதில் : விஜய் ஆண்டனியின் இசையில் நான் திரைப்படத்திற்கான பாடலாசிரியர் ஒருவரைத் தெரிவு செய்யும் போட்டி அனைத்துலக ரீதியில் நடத்தப்பட்டது. பாடலியற்றல் போட்டியில் வழங்கப்பட்ட கதைச்சூழலுக்கும் இசைக்கும் ஏற்ப் பாடல் ருகின்றேன்.

**கேள்வி : தங்களுக்கு கிடைத்திருக்கின்ற கௌரவங்கள் பற்றிய குறிப்பினையும் கூறுங்கள்**

பதில் : 2011 இல் மலேசியாவில் நடைபெற்ற 6வது உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு கவிக்கோ தலைமையில் நடைபெற்றபோது அந்தக் கவியரங்கில் கவிதை பாடினேன்.

அங்கு மலேசியத்துணையமைச்சர்டத்தோசரவணன் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார். இலங்கை தடாகம் கலை, இலக்கிய வட்டத்தினால் அகஸ்தியர் விருதும் கலைத்தீபம் எனும் பட்டமும் வழங்கப்பட்டன. லக்ஸ்டோ ஊடக அமைப்பினால்தங்கப்பதக்கம் வழங்கப்பட்டு கலைமுத்து பட்டமும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டேன்.

**கேள்வி : ஒளிஅரசி மாதாந்த இதழைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

பதில் : உண்மையில் இலங்கையில் வெளியாகும் மாதாந்த சஞ்சிகைகளில் ஒளிஅரசி வித்தியாசமான அதுவும் இந்திய வெளியீடுகளுக்கு நிகராக வெளியாவதை நினைத்து பெருமைப்படுகின்றேன். விரசமான பத்திரிகைகளுக்கு மத்தியில் ஒரு குடும்ப இதழாக வீட்டிலுள்ள பெண்களும் வாசிக்க வேண்டும், உலக அறிவின் ஊடாக தமது குடும்பத்தை நிலைநிறுத்த வேண்டும் என்கிற பலநோக்குகளை கொண்டதாக வெளிவரும் ஒளிஅரசியை அனைத்து குடும்பங்களும் குடும்பத்தின் பத்திரிகையாக நினைத்து வாங்கி படிக்க வேண்டும். வாசிப்பு மங்கிமறைந்து கொண்டு வரும் இன்றைய காலகட்டத்தில் ஒளிஅரசியின் பங்களிப்பு பாரியதாகும் என்பதை நினைத்து மகிழ்வுறுகின்றேன்.

நமது நாட்டுக்கே உரித்தான பண்பும், பரிவும், மற்றவரை மதிக்கும் தன்மையும், புன்சிரிப்பும் நிறைந்த கவிஞர் அஸ்மின் அடக்கமே உயர்வுதரும் என்கிற தாரகை மந்திரத்துடன் சினிமா உலகில் காலூன்றி உள்ளார் இன்று வசந்தம் தொலைக்காட்சி ஊடாக கலைஞர்களை ஊக்குவித்துவரும் பொத்துவில் அஸ்மின் தனது இலக்கியப் பயணத்தில் நிறைந்த செல்வத்தினைப் பெற்று நீடூழிகாலம் வாழ ஒளிஅரசி சார்பாக வாழ்த்துகின்றோம். என்ன தவம் செய்தாயே! பொத்துவில் அன்னையே, அஸ்மினைப் பெற்றெடுத்ததற்கு! என்ற சிறு கவிதை வரியுடன் விடைபெற்றோம்.

நேர்காணல் - அட்டாளைச்சேனை மன்சூர்



# இந்திய சினிமாவில் ஜொலிக்கும் நம்ம கவிஞர்

## விசேட விருந்தினர்

இம்மாத ஒளிஅரசின் விசேட விருந்தினராக இந்திய திரையுலகில் எடிசன் விருதுபெற்ற பொத்துவில் அஸ்மினுடன் ஓர் மாலைப் பொழுது...

''தப்பெல்லாம் தப்பே'' இல்ல என்ற ''நான்'' படப்பாடல் மூலம் தமிழ்த் திரையில் கவிஞராக அடியெடுத்து நம்மையெல்லாம் மகிழ்வித்திருப்பவர் கவிஞர் பொத்துவில் அஸ்மின். நான் படக்குழுவினர் கவிஞர்களுக்காக நடாத்திய போட்டியில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கானோரில் முதலிடத்தைப் பெற்றிருந்தார் அஸ்மின்.

இந்த வாய்ப்பைத் தொடர்ந்து அமரகாவியம் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட படங்களுக்கு பாடல்வரிகள் எழுதி தன் கவித்துவப் புலமையினை நிலைநாட்டியவர் நமது நாட்டின் இளம் கவிஞர் அஸ்மின் 50ஆண்டுகளுக்கு முன்னர் ஈழத்து ரத்தினம் தமிழ்சினிமாவுக்கு பாடல்எழுதியிருந்தார்.

அதன் பின்னர் இந்தச் சாதனையை நமது நாட்டுக் கவிஞரான பொத்துவில் அஸ்மின் தொடர்ந்திருப்பது நமக்கெல்லாம் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

இவ்வாறு தன் கவித்துவப் புலமையினால் இன்று இந்திய தமிழ்சினிமாப் படங்களுக்கு பாடல் எழுதும் அளவுக்கு நமது நாட்டுக் கவிஞர்கள் சளைத்தவர்கள் அல்ல என்பதையும் நிலைநாட்டியுள்ள பொத்துவில் அஸ்மின் அவர்களை இம்மாத ஒளிஅரசி இதழுக்காக சந்தித்தபோது கலை இலக்கிய விடயங்களையும் தனக்குக் கிடைத்திருக்கும் விருதுகளைப் பற்றியும் தெரிவித்த கருத்துக்களை இம்மாத சாதனையாளர் பகுதியில் தருகின்றோம்.

**கேள்வி : உங்களைப் பற்றிய அறிமுகத்தை ஒளிஅரசி வாசகர்களுக்காக கூறுங்கள்**





... மாக இருந்தது. இதுவே எனது ஊடக உகிற்காகன முதல் கவிதை பிரவேசம்.

அதைத் தொடர்ந்து எனது கவிதைகள், சிறுகதைகள், பத்தி எழுத்துக்கள், நேர்காணல்கள், பாடல்கள் இலங்கையின் தேசியச் செய்தித் தாள்கள், சிற்றிதழ்கள், அனைத்துலகத் தமிழ்ச் சிற்றிதழ்கள், இணையச் சிற்றிதழ்கள் ஆகியவற்றையும் தாண்டி மின்னியல் ஊடகங்கள் பலவற்றிலும் வெளியாகிய வண்ணம் இருப்பதும் எனது இலக்கியப் பயணத்திற்கு மேலும் உந்து சக்தியை கொடுப்பதாகவே நான் கருதுகின்றேன்.மேலும், 2000ம் ஆண்டுகாலப்பகுதியில் பொத்துவில் பிரதேசத்தை மையமாக ...

எனக்கு சிறந்த வெளிநாட்டு பாடலாசிரியர் என்கிற விருதினைப் பெற்றுக் கொண்டேன். என்குரிய விருதினை பிரபல நடிகை குட்டி பத்மினி வழங்கியிருந்தார்.

**கேள்வி : உங்களுக்கு இலக்கிய ஆர்வம் எப்படி ஏற்பட்டது என்பதைப் பற்றிக் கூறுங்கள்**

**பதில்** : பொத்துவில் மத்திய கல்லூரியில் கற்கின்றபோதே என்னுள் எழுந்த கவித்துவத்தினை தட்டியெழுப்பியவர்கள் எனது ஆசிரியர்கள். குறிப்பாக சிறு வயது முதலே என்னுள் காணப்பட்ட இலக்கிய ஆர்வம் என்னை எழுதத்தூண்டியது. என்னுடைய முதவாவது கவிதை மார்ச் 25, 2000 ஆண்டில் தினக்குரல் செய்தித் தாளில் **என்ன தவம் செய்தாயோ** எனும் தலைப்பில் வெளியாகியிருந்தமை மிகச் சந்தோஷ...

எழுதி அதில் 20,000 போட்டியாளர் களுக்குள் முதலாமிடம் பெற்று ''நான்'' திரைப்படத்தில் பாடல் எழுதும் வாய்ப்பினையும் பெற்றேன். தொடர்ந்து செவ்வேளின் தயாரிப்பிலும் கேசவராஜனின் இயக்கத்திலும் வெளிவந்த பனைமரக்காடு திரைப்படத்தில் இசையமைப்பாளர் விமல் ராஜாவின் இசையில் உயிரிலே உன் பார்வையால் பூ பூத்ததே என்ற பாடலையும், இயக்குநர் சு.வரதகுமார்இயக்கிய வல்லைவெளிதிரைப்படத்திலும் இசையமைப்பாளர் க. ஜெயந்தனின் இசையில் எங்கோ பிறந்தவளே என்ற பாடலை யும் எழுதியிருக்கின்றேன். நடிகர் ஆர்யாவின் தயாரிப்பில் இயக்குனர் ஜீவாசங்கரின் இயக்கத்தில் வெளிவந்த அமரகாவியம் திரைப்படத்தில் ஜிப்ரானின் இசையில் தாகம் தீர கானல் நீரை காதலின்று காட்டுதே.. என்ற பாடலையும் எழுதியிருந்தேன். இப்பாடல் 2014 வெளிவந்த 100 பாடல்களில் 4 ஆவது இடத்தை பிடித்திருந்தது. இயக்குனர் அனூப் அரவிந்தனின் இயக்கத்தில் தேன்ல ஊர்ன மிளகாய் என்ற திரைப்படத்தில் முழுப்பாடலையும் நானே எழுதியிருக்கின்றேன். முத்துக்குமாரின் இயக்கத்தில் வெளிவரவுள்ள திரைப்படத்தில் இசையமைப்பாளர் சதீஸின் இசையில் முழுப்பாடலையும் நானே எழுதியுள்ளேன்.

இசையமைப்பாளர் தாஜ் நூரின் இசையில் காந்தாரி என்கிற திரைப்படத்துக்கு ஒரு பாடல் எழுதியுள்ளேன். இன்னும் பல திரைப்படங்களுக்குரிய ...

# வரலாற்றில் பதிவான அரங்கேற்றம்

திருமதி விஜயகலா மகேஸ்வரனின் புதல்விகளான செல்வி பவதாரணி மகேஸ்வரன், பவித்திரா மகேஸ்வரன் ஆகியோரது பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த மாதம் (20.03.2015) ஞாயிற்றுக்கிழமை மாலை பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த அரங்கேற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டார். இந்நிகழ்வின் ஒரு பகுதியாக ஜனாதிபதி தமிழ் சம்பிரதாய முறைப்படி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அத்தோடு ஜனாதிபதி செல்வி பவதாரணி மகேஸ்வரன் மற்றும் பவித்திரா மகேஸ்வரன் ஆகியோருக்கு விசேட நினைவுப்பரிசில்கள் வழங்கி வைத்தார்.



இந்நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், அமைச்சர்களான டி.எம்.சுவாமிநாதன், விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

நல்லாட்சி அரசாங்கம் என்பதை எடுத்துக்காட்ட, தற்போதைய அரசாங்கம் பல சமிக்கைகளைச் செய்து வரு கின்றது. எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம்,

➩ 35



சுதந்திரதினத்தில் தமிழ்மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டமை, காணிவிடுவிப்பு, கைதிகள் விடுதலை எனப் பல விடயங்களை அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்காக மேற் கொண்டு வரும் நிலையில் ஒரு அரசாங்கத்தின் முக்கிய பதவியில் உள்ள அனைவரும் (ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட) இவ் அரங்கேற்ற நிகழ்விலே பங்குபற்றி இருப்பதால் நல்லாட்சியின் இன்னொரு அடையாளமாகவும் இந்நிகழ்வு நோக்கப் படுகின்றது இத்தனை வருடகால வரலாற்றில் இதுபோன்றதொரு நடன நிகழ்வில் நாட்டின் முதன்மை பிரதிநிதிகள் ஒன்றாகப் பங்குபற்றிய சம்பவம் இடம் பெறாமையால் இந் நிகழ்வு ஒரு வரலாற்றுப்பதிவாகவும் நோக்கப்படுகின்றது.

நாட்டிய செல்விகளுக்கும் அரசியல் படுகொலைகளால் பெண்தலைமைத்துவ குடும்பமாக்கப்பட்டிருந்தும் நிகழ்வை செவ்வனவே ஒழுங்குபடுத்திய சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரனுக்கும் மகளிர் சஞ்சிகை எனும் அடிப்படையில் ஒளிஅரசியின் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.





(ஜன(ா)ரஞ்சகன், கொழும்பு)

# நோபல் பரிசுபெற்ற முதல் அராபிய பெண்



தவக்குல் கர்மான்

நோபல் பரிசினை எத்தனையோ மனிதர்கள் பெற்றுள்ளார்கள். ஆண்கள், பெண்கள் எனப் பலரும் பெற்று வரும் இப்பரிசு 2011ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசாக தவக்குள் கர்மான் என்பவருக்கு வழங்கப்பட்டமை நினைவிருக்கலாம். அரபுலகத்தைச் சேர்ந்தவர்கள் அதிலும் பெண்கள் சமுகவிடயங்கயளில் ஈடுபடுவது மிகமிகக் குறைவாக இருந்தபோதிலும் ஏமன் நாட்டைச் சேர்ந்த அராபியப் பெண்மணி தவக்குள் கர்மான் இப்பரிசினைப் பெற்றதன் மூலம் உலக முஸ்லிம் பெண்களுக்கு வழிகாட்டியாக இருக்கின்றார். 2005ஆம் ஆண்டில் சங்கிலிகள் இல்லாத பெண் இதழியலாளர்கள் என்கிற அமைப்பினை நிறுவி, அதன் தலைமையாளராகவும் இருந்து, மனித உரிமைகள் விடயத்தில் கடும்போக்காளராக மாறி, உரிமைமீறல்களைக் கண்டித்ததன் விளைவு இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஏமனின் புரட்சித்தாய், இரும்புப் பெண்மணி என்றும் இவர் வர்ணிக்கப்படுகின்றார்.

அரபு வசந்தம் சூடான வாஞ்சையுடன் வீசியதால் அட்டகாசமாக ஆட்சியில் இருந்தவர்கள் பலர் முகங்குப்புற விழுந்து ஓடி ஒளிந்துகொண்டனர். ஏமன் நாட்டின் அதிபதியாக இருந்துவந்த அலி அப்துல்லா சாலே அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தார் தவக்குள் கர்மான்.

**இவர் கடந்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்து முக்கியமான மாவட்டங்களுக்கு சென்று மனிதஉரிமைகள் தொடர்பாக பார்வையிட்டு மனிதஉரிமைகள் தொடர்பாக உரையாற்றிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

ஏமன் ஒரே நாடாக இருந்தாலும் இஸ்லாமிய ஆட்சியாளர்களால் ஆளப்பட்டது வடக்கு ஏமன் தனியாகவும் பிரிட்டிஷ் காலனித்துவப் பகுதி தெற்கு ஏமன் எனவும் பெயர்பெற்றிருந்தது. 1962ஆம் ஆண்டில் ஏற்பட்ட கிளர்ச்சியின் காரணமாக மன்னராட்சி முடிவுக்கு வந்து வடக்கு ஏமன் அரபுக் குடியரசு என்றும், 1967 ஆம் ஆண்டில் தெற்கு ஏமன் பிரிட்டிஷ் பிடியில் இருந்து விடுபட்டு மக்கள் ஜனநாயக கட்சியும் என்றும் மலர்ந்தது. 1990 ஆம் ஆண்டு ஏமன் ஒரே நாடாக மாறியது. கேர்னல் அலி அப்துல்லாஹ் சாலே அதிபராகின்றார். பிரச்சினைகள் வலுக்கின்றன. மக்கள் வறுமையால் வாடுகின்றனர். பொருளதாரம், மதப்பிளவுகள் மக்களை நெருக்கடிக்குள் தள்ள அரசும் ஒரு காலாய் அமைகின்றது.

2004 ஆம் ஆண்டு ஹசைன் அல் ஹத்தி ஒரு இயக்கத்தை ஆரம்பித்து சாலே அரசை எதிர்க்க அவர் கொல்லப்படுகின்றார். இந்த இயக்கம் அரசுக்கு எதிராய் வலுக்கிறது. தவக்குலின் தந்தையான அப்துல் சலாம் ஒரு வழக்கறிஞர். சாலேவின் அரசில் சட்ட அமைச்சராக இருக்கின்றார். அவர் இதனை முழுமையாக எதிர்க்கின்றார். மகளை நல்லமுறையில் வளர்த்து கல்வியை ஊக்கமுடன் கற்பிக்கின்றார். தான் பெற்ற அறிவினைக் கொண்டு மக்களை வதைசெய்யும் அரசிற்கு எதிரான போராட்டத்தை ஆரம்பிக்கின்றார் கர்மான். அதற்கான அமைப்பினை நிறுவி தொடர்ந்தும் போராடுகின்றார்.

தலையை மறைக்கும் ஹிஜாப் அணிந்து இந்த சமூகத்தை எதிர்கொண்டார். யாரும் பேசத்தயங்குவதையும் யாரும் செய்யாததையும் புதிதாய் செய்யும் போது இந்த சமூகம் எப்படிப் பார்க்குமோ அப்படித்தான் கர்மானை பார்த்தது. பைத்தியக்காரப் பெண், தண்டிக்கப்பட வேண்டியவள் என்றும் பல வசை மொழிகள் இவரை வந்தடைந்தன. பொறுமையோடு போராட்டத்தைத் தொடர்ந்தார். ஆயுதப் போராட்டங்கள் என்றைக்கும் தீர்வைத் தரப்போவதில்லை காந்தி, மார்ட்டின் லூதர்கிங், மண்டேலா இவர்களின் அகிம்சையே தம் ஆயுதம் என்பதில் அசைக்க முடியாதவாராக இருந்தார் தவக்குல். இப்போராட்டத்தின் விளைவாக பலர் கொல்லப்படுகின்றனர். பலர் காயப்பட்டு மருத்துவமனைகளில் கிடத்தப்பட்டனர். அழுகையை விழுங்கி போராட்ட சதுக்கத்தில் போராடியது இந்தப்பூ.

அகிம்சை வழியில் ஏமனின் வரலாற்றில் பெரும் பங்காற்றிய கர்மான், 2011ஆம் ஆண்டுக்கான நோபல் அமைதிப்பரிசினை லிபேரியா நாட்டின் எல்லென் ஜான்சன், லேமா குபோவீ ஆகியோருடன் சேர்ந்து பெண்கள் பாதுகாப்பு, சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், பெண்கள் உரிமைகளுக்கான வன்முறையற்ற போராட்டம் ஆகியவற்றுக்காகப் பெற்றுக்கொள்கின்றார். இதன் மூலம் நோபல் பரிசை வென்ற முதல் அரேபிய பெண் மற்றும் 2ஆம் முஸ்லிம் பெண் என்ற பெருமையையும் இவரே பெறுகின்றார். உலகிலேயே இளம் வயதில் நோபல் பரிசு பெற்ற பெண்ணும் அக்காலகட்டத்தில் இவராகவே இருந்தார். இவரது துணிச்சல்மிக்க போராட்டத்தின் விளைவு உலக அரங்கில் அழியாப் புகழையும் வரலாற்றில் மகத்தான பதிவையும் குறிப்பாக அராபிய பெண்களுக்கு வழங்கியிருக்கிறது.

வலையில் தேடித் தொகுத்தவர் - அட்டாளைச்சேனை மன்சூர்






# அழகன் - பேரழகன்

**Q :- அம்மு, ரீன் ஏஜ் பருவம் எனக்கூறுகின்றார்களே, எவ்வாறு அப்படி அழைக்கப்படுகின்றது?**

**(லதாங்கி உடுவில்)**

**A :-** அதாவது teen age என்று thirteen – nineteen வரையான அகவையுடைய பருவத்தினரையே அழைப்பர். (13-19 வரை) teen age is danger என்றும் teen age is gold என்றும் கூறுவர்.

**Q :- 21ம் நூற்றாண்டின் விஞ்ஞான யுகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் போதும் சமூக வேற்றுமை, சாதி பேதம் பார்க்கும் சில படித்தவர்கள் உள்ளனரே, இது பற்றி என்ன நினைக்கின்றீர்கள் அம்மு?**

**(தமிழரசி கிளிநொச்சி)**

**A :-** அன்னை தெரசா போன்றவர்கள் உயர் சமூகத்தில் பிறந்து சேரி வாழ் ஏழை மக்களுக்காக தம்மையே அர்ப்பணித்து அம்மக்களோடு மக்களாக தாமும் வாழ்ந்து மனிதராகப் பிறந்து புனிதர் எனப்பெயர் பெற்றவர்கள். இன்றைய காலத்தில் சமூகபேதத்தை ஒரு விடயம் எனக்கொள்பவர்கள் மனிதராகப் பிறந்து மாக்களாக வாழ்பவர்கள் எனக்கொள்ள வேண்டும்.

**Q :-அம்மு, கலர்கலராய்கனவுவருகிறதே, என்ன காரணம்?**

**(சித்தன் ஒட்டிசுட்டான்)**

**A :-** சித்தன், உங்கள் மனதில் யாரோ ஒரு பெண் கலர்கலராய் கனவுகளைத் தூவுகிறாள் என்று அர்த்தம்.

**Q :- அம்மு, ஒரு ஆண் எப்போது அழகனாகிறான்? எப்போது பேரழகனாகிறான்?**

**(து. சகிலா கிரான் குளம்)**

**A :-** தனது இலட்சியங்களை அடைந்து பெற்றோரின் குடும்ப சுமையை தன் தோழிலே சுமந்து தன் சகோதரியை மணமேடையில் அமரவைத்து அவளது கழுத்திலே மாங்கல்யம் ஏறும் வேளை தன் கடைக் கண்ணில் வழியும் விழிநீரைத் துடைக்கும் போது ஆண் அழகனாகிறான். சமூகத்தின் பால் அதீத ஈடுபாட்டுடனும் ஏதோ ஒருவகையில் இயலாமையால் தவிக்கும் பெண்ணிற்கு எந்த பிரதிபலனும் பாராது உதவிவிட்டு சின்னதாய் புன்னகைக்கும் வேளையிலும் மனைவி தவிக்கும் வேளையில் அந்த தவிப்பை தன்னதாய் உணர்ந்து அதன் பிரதிபலிப்பை முகத்தில் காட்டும் வேளையிலும் ஆண் பேரழகனாகிறான்.

**Q :- அம்மு விலைமதிப்பில்லாத பொக்கிசம் எது?**

**(துவாரகா கோப்பாய்)**

**A :-** தாயின் அன்பு

**Q :- தன்னம்பிக்கையை எடுத்துக்காட்டும் விதமாய் நறுக்கென ஒரு வார்த்தை கூறுங்கள் அம்மு?**

**(நிதா கல்முனை)**




**ஓவியர் யோகா**

கொழும்பு

**தொடர்புகளுக்கு:**

**0754419019**


**Email:yoganadsgmail.com**


**A :-** எந்த வேர்வைக்கும் ஒருநாள் வேர் வைக்கும்.
(கவிஞர் வாலியின் வரிகள்)

குறிப்பு - வாசகர்களே! உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள் அல்லது Oli Arazi என்ற முகநூலில் பதிவிடுங்கள்.

## போட்டிகளுக்கான கூப்பன்

முழுப்பெயர் : ..........................................
..........................................
முகவரி : ..........................................
..........................................
தொலைபேசி இல.: ..........................................
ஒப்பம் : ..........................................
போட்டியின் பெயர் : ..........................................
..........................................



# தலைமைத்துவத்தில் பக்கஞ்சாராப் பண்பிற்கு வழிகாட்டிய மனுச்சோழன்

நாடு என்பது எப்படி அமையவேண்டும்? என்ற வினா பலரிடம் உள்ளது. எல்லா வகையான உணவுப் பொருள்களும் நிறைந்து உழவர் பெருமக்களும் இல்லறம், துறவறம் என்கின்ற அறவழியில் தவறாத பெருமக்களும் பிறருக்குப் பயன்நல்கும் செல்வர்களும் சேர்ந்திருப்பதே நாடு என்கிறார் வள்ளுவர். தெய்வப் புலவரின் இந்த எண்ணப்பாங்கு இலட்சிய நாட்டிற்குரிய பண்பு என எண்ணத் தோன்றுகின்றது. இயல்பாகச் செயற்படும் நாடு இத்தகைய உயர்பண்புக் கூறுகளை உள்வாங்கி நடக்க முயல்வதே நாடு நல்லாட்சி வழியில் பயணிக்க வாய்ப்பளிக்கும்.

பண்டைய இலக்கியகாரர் அரசை மையப்படுத்திக் கூறிய சிந்தனைகள் நல்லாட்சியை அவாவியதன் வெளிப்பாடுகளே. இவை தற்காலத்திலுங்கூட நிறுவனங்களை மையப்படுத்திய தலைமைத்துவத்திற்கும் வழிகாட்டுவதாக அமையும்.

பெரியபுராணத்தில் சேக்கிழார் காட்டும் சோழ நாடு நீதிநெறியில் உச்சம்பெற்றுத் திகழ்கின்றது. இதனைச் சான்றுப்படுத்த மனுநீதிகண்ட சோழனின் கதையைக் கையிலெடுக்கிறார் சேக்கிழார்.

மனுநீதிகண்ட சோழனுடைய ஒரே மகன் வீதிவிடங்கன். தவமிருந்து பெற்ற பிள்ளை. இளவரனாகிய வீதிவிடங்கன் ஒரு நாள் தேரில் உலாவருகின்றான். திடீரெனப் பசுக்கன்று ஒன்று தேர்க்காலின் இடையிற் புகுந்துவிடுகின்றது. விபத்தில் நசியுண்டு இறந்துவிடுகின்றது. இந்நிலையில் தாய்ப்பசு மனுநீதிகண்ட சோழனிடம் வந்து நீதி கேட்டு நிற்கின்றது.

பசுக்கன்றைக் கொன்ற பழியில் இருந்து விடுபடுவதற்கான பிராயச்சித்தங்களை மனுதர்மசாத்திரங்கள் உரைத்துள்ளன. அவற்றைக் கைக்கொள்வதன் மூலம் பாவங்களை நீக்கிக்கொள்ளலாம் என மந்திரிமார் உரைக்கின்றனர். அவர்கள் கூறிய பிராயச்சித்த வழிமுறைகளைக் கேட்ட சோழ அரசன் துடித்துப்போகின்றான். நாட்டில் வாழும் மக்களுக்கு ஐந்து வழிகளில் அச்சுறுத்தல்கள் நேரலாம். அரசனால், நாட்டில் சமகாலத்தில் வாழும் குடிமக்களால், தீமை விளைவிக்கக்கூடிய பகைவர்களால், திருடர்களால், பிற உயரினங்களால் ஆபத்துக்கள் நேர வாய்ப்புக்கள் உள்ளன. இத்தகைய ஐந்து அச்சங்களையும் நீக்கி அறத்தை வழுவாமல் நடத்துபவனே உண்மையான அரசன். இத்தலைமைத்துவச் சிந்தனையை வெளிப்படுத்துமுகமாக சோழனின் வார்த்தைகள் முழங்குகின்றன.

"மாநிலம் காவலன் ஆவான்
மன்உயிர் காக்கும் காலை
தான் அதனுக்கு இடையூறு
தன்னால் தன் பரிசனத்தால்
ஊனம்மிகு பகைத்திறத்தால்
கள்வரால் உயிர்கள் தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து
அறம் காப்பான் அல்லனோ"

வடநூற் சாத்திரங்கள் விதித்த அறக்கருத்துக்களைப் புறந்தள்ளிவிட்டு தமிழர் காட்டும் அறம் பற்றிய சிந்தனையைச் சேக்கிழார் முன்வைக்க விழைகின்றார். பசுக்கன்றைக் கொலை செய்தால் அப்பாவம் நீங்கிவிட வேண்டும் என்பதற்காக மேற்கொள்ளக்கூடிய பிராயச்சித்தங்கள் பற்றி அரசன் பிரஸ்தாபிக்கவில்லை. அவன் பாவப்பட்ட தாய்ப் பசுவின் பக்கத்தில் இருந்து பிரச்சினையை அணுகுகின்றான். இதனால் தன்மகன் என்றுகூடப் பார்க்காமல் வீதிவிடங்கனைத் தேர்க்காலில் இட்டு நசிக்குமாறு ஆணையிடுகின்றான். இத்தகைய பக்கம் சாராத பண்பையே வள்ளுவரும் வலியுறுத்துகின்றார். சமன் செய்து சீர்தூக்கும் துலாக்கோல்போல் நடுநிலை காத்தல் வேந்தனுக்குரிய முக்கிய இயல்பு ஆகும். இதனாலேயே அவன் இறை எனப்பட்டான்.

ஒருவன் செய்த குற்றத்தை ஆராய்ந்து எவரிடத்தும் தாட்சண்யம் காட்டாது நடுநிலை நழுவாது நின்று அக்குற்றத்திற்கு ஏற்ற தண்டனை வழங்குவதே நீதியாகும். இதனை

**ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்**
**தேர்ந்து செய்வஃதே முறை**
**-என்கிறார் வள்ளுவர்.**

நிர்வாகவியலில் வள்ளுவர் முன்வைத்த பக்கஞ்சாராப் பண்பும் மனுநீதிச் சோழன் அதனைக் கைக்கொண்டதாகச் சேக்கிழார் காட்டும் விதமும் நினைக்குந்தோறும் நயக்கத்தக்கன.

(ச.லலீசன் - பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)



இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# கவிக்களம்

Oli Arazi In

# பேசும் படம்

## போட்டி -08

படத்தைக் கூர்ந்து
பாருங்கள் உங்கள்
மனதில் எழும் எண்ணங்களை
சுவைபட ஆறு வரிகளுக்கு மேற்படாத
சிறந்த கருத்தைக் கூறும் கவிதையாக ஒரு
தபாலட்டையில் எழுதி 37ஆம் பக்கத்தில் உள்ள
கூப்பனை பயன்படுத்தி 20.04.2016 க்கு முன்பு அனுப்புங்கள்.






**1**

வலையிழுத்த கணவனை
அலையிழுத்தது.
படகோட்டிய மகனை
போர் ஒட்டியது
ஈழிழப்பும் இவளை
கடற்றொழிலாளி ஆக்கியது.

யோ.புரட்சி [கிளிநொச்சி]

**2**

கடலோடு உறவாடி
அலையோடு போராடி
நித்தம் நித்தம் எங்களுக்கு
சத்தியமா பரிதவிப்பு
எங்க துயர் தீர்த்திடத்தான்
ஏதுமிங்கு வழியிருக்கா?

தமிழரசி [மட்டக்களப்பு]

**3**

ஆலைத்தாயின் மடியினிலே
அழகாக நாம் புரண்டு
அள்ளிவரும் செல்வமெல்லாம்
கரை சேரும் வேளையிலே
காத்திருக்கும் மனையாளும்
கைகொடுத்து தேற்றிடுவாய்

சாய் ஓவியா [முல்லைத்தீவு]

**4**

கடல் வாழ்க்கை எங்களுக்கு
கத்தி முனை வாழ்க்கை தான்
எங்க வீட்டுப் பெண்களும் தான்
எங்களுக்கு ஒத்தாசை
மீன் தெரியும் லாவகத்தில்
மெச்சிடணும் அவங்களைத்தான்.

அம்ருதா [குருநகர்]

**5**

கடற்கரையில்
மீன்பிரிக்கும் நிலைமாறி
நடுக்கடல் சென்று
வலைவீசி மீன்பிடிக்கும்
காலம்தான் பெண்ணுக்கு எப்போது?


மது [வல்வெட்டித்துறை]

**கடந்த மாத வெற்றியாளர்கள் :-**

| | | |
|---|---|---|
| 01 ஆம் இடம் | : யோ.புரட்சி | [கிளிநொச்சி] |
| 02 ஆம் இடம் | : தமிழரசி | [மட்டக்களப்பு] |
| 03 ஆம் இடம் | : சாய் ஓவியா | [முல்லைத்தீவு] |

1 ஆம் பரிசு - 250/=
2 ஆம் பரிசு - 150/=
3 ஆம் பரிசு - 100/=

# ஆத்திரத்தில் பெற்ற அறிவு



மனைவி சமையலறையில் சமைத்துக்கொண்டிருக்கும்போது கணவன் அங்கு வந்தால் பலர் வரவேற்பார்கள். கூடமாட உதவி செய்துகொண்டு இணைந்து சந்தோஷமாக சமைக்கும்போது சாப்பாட்டில் ஏதும் குறைநிறை ஏற்பட்டாலும் யார் மீதும் குற்றம் சுமத்தமுடியாது. அங்கே கூட்டுப் பொறுப்பாகி விடுகிறது.

ஒரு நாள் பகல்வேளை சமையல் செய்துகொண்டிருக்கும்போது அந்த இளம் கணவன் சமையலறைக்குள் சென்றுள்ளான். மழை இல்லை. உஷ்ணம் அதிகம். அதனால் கொக்காக்கோலா குளிர்பானத்தை குடித்துக்கொண்டே வந்தார். கொக்காக்கோலா என்றாலே மனைவிக்கு அலர்ஜி.

இது கணவனுக்கும் தெரியும். அவன் சும்மா இருக்கக்கூடாதா? இறைச்சிக்கறிக்கு சுவையூட்ட மனைவி தயாராக வைத்திருந்த அஜினோ மோட்ரோ கண்ணில் பட்டுவிட்டது. என்ன டார்லிங் இதையா பாவிக்கிறாய்? கோழி எலும்பை மக்கச்செய்வதுபோல நம்முடைய எலும்புகளையும் அல்லவா மக்கச் செய்துவிடும் என்று கூறிக்கொண்டே அந்த அஜினோ மோட்ரோ டப்பாவை தூக்கி ஜன்னல் வழியாக வீசிவிட்டானாம்.

இதை மனைவி எதிர்பார்க்கவில்லை. அவளும் எதையாவது செய்யவேண்டும் அல்லவா? கணவனின் கையில் இருந்த கொக்காக்கோலாவைக் கண்டுவிட்டாள். இவன் எதிர்பாராத வேளை கொக்காக்கோலாவைப் பிடிங்கி எறிந்துவிட்டாள். அன்று அப்படியே போய்விட்டது.

மறுநாள் விடுமுறை கணவனும் மனைவியும் இணைந்து வீட்டுத்தோட்டத்தை துப்பரவு செய்யும்போது சமையலறையின் பின் மாட்டிக் கிடந்த புல் பற்றை காய்ந்து கிடந்ததாம். ஏன் என்று பார்த்தால் கணவனும் மனைவியும் ஆத்திரத்தில் வீசிய அஜினோ மோட்ரோ, கொக்காகோலாக் கலவைதான் இந்த மாற்றத்தை ஏற்படுத்தியமை தெரியவந்துள்ளது.

பார்த்தீர்களா கணவன் மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட ஆத்திரம்கூட ஒரு களைநாசினியை அல்லவா உருவாக்கியுள்ளது. இதுவும் ஒருவித கண்டுபிடிப்புத்தான்.

எங்கே நீங்களும் இரண்டையும் கலந்து ஒரு இடத்தில் பரீட்சித்து பாருங்கள். விடயம் புரியும். அதே இரண்டையும் உட்கொள்ளலாமா? எனும் உண்மையும் புரியும்.

(மலையகத்தின் ஜனரஞ்சக எழுத்தாளர்- (இரா.சிகா)



# திண்ணைச் சங்கதி

கோமளா, சாமந்தி, தாமரை மூவரும் அரிவரி தொடக்கம் வகுப்புத் தோழிகள். அந்த நாளைய நட்பு இண்டைக்கு வரை தொடர்ந்துகொண்டே இருந்தது. கிழமையில ஒரு நாளெண்டாலும் ஒண்டாச் சேர்ந்து ஊர்ப்புதினம் அலசுவது இவர்களின் வழமை. அடுத்த வீட்டு விசயமோ பக்கத்து வீட்டுச் சண்டையோ பேசுவது கிடையாது. இவர்களில் கோமளா மட்டும் தவறாமல் பத்திரிகை பார்ப்பதால் நாட்டு நடப்பு பற்றி அவளோட கலந்தாலோசிப்பதே இவர்களின் மாநாடு.

சமையல் முடிஞ்ச கையோட இப்பிடியே வந்திட்டன், என்றபடி தாமரையின் பெட்டிக்கடை வாங்கில் அமர்கிறாள் கோமளா. அங்க இங்க தலை திருப்பி ஆந்தை மாதிரிப் பார்த்த தாமரை, உவள் சாமந்தி இன்னும் வரவில்லை என்றபடி அருகில் அமர்ந்தாள். சொல்லி வாய் மூட முன்னம் யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பது போல கிறீச் கிறீச் என்ற சைக்கிள் சத்தத்துடன் வந்து நின்றாள் சாமந்தி.

**தாமரை** - என்னடி, இவ்வளவு நேரம்?

**சாமந்தி** - ரியூசனில மீற்றிங் முடிஞ்சு வர நேரம் போட்டுது

**கோமளா** - பேப்பர் பாத்தனியே,

**தாமரை** - நானெண்டால் பார்க்கயில்லை,

**சாமந்தி** - உதுக்கெங்க நேரமடி?

**கோமளா** - நேரம் எண்டது எங்களால் ஒதுக்கப்பட வேண்டியது அதை முதல் தெரிஞ்சுகொள்.

**தாமரை** - இருபத்து நாலு மணி நாற்பத்தெட்டா மாறினா என்ன எண்டு இருக்கு.

**சாமந்தி** - சரி சரி ........ பேப்பர்ப் புதினம் என்னவாம்.

**கோமளா** - சுகாதார அமைச்சு புதுசா ஒரு திட்டம் நடைமுறைப்படுத்தப் போகுதாம்.

**தாமரை** - அது என்ன திட்டம்?

**கோமளா**- கர்ப்பணிப் பெண்கள் குழந்தைகளுக்குக் குடுத்த திரிபோசாவுக்குப் பதிலா வவுச்சர் குடுக்கப் போறாங்களாம். சாமந்தி ஏனாம்?

**கோமளா** - றேடியோவில சொன்னவங்கள் எல்லே, போன வருசம் கர்ப்பிணிப்பெண்களின்ர இறப்பு நூறுக்கும் மேலயாம்.

**சாமந்தி** - எனக்கெண்டாப் பயமாக் கிடக்குது,

**கோமளா** - ஏன்?

**சாமந்தி** - தொங்கல் வீட்டுச் சிவகாமி படைச்சவன் படியளப்பான் தானே எண்டு சொல்லிச் சொல்லியே ஐஞ்சு பிள்ளை பெத்திட்டா, வவுச்சர் எண்டு தெரிஞ்சா.....

**தாமரை** - அவளின்ர புருசன் வேலைக்கும் போக மாட்டான்.

**கோமளா** - அவள் செய்கிறது ஒரு விதத்தில் தியாகம் தான்.

**தாமரை** - என்ன? உனக்கு ஏதும் மறை ஏதும் கழண்டு போச்சே, உதில என்ன தியாகம்?

**கோமளா** - பின்ன என்ன, இவ்வளவு பொருளாதார நெருக்கடியிலும் பிள்ளைகள வளர்க்கிறதெண்டாச் சும்மாவே, எங்கட இனம் தான் எங்கட பலம் எண்டுறது பலபேருக்குத் தெரியிறதில்லை. நாங்கள் வாழ்க்கையின்ர சுலபத்தைப் பாக்கிறம். ஆனா அது பாரிய விளைவென்றது காலப்போக்கில தான் புரியும்.

**சாமந்தி** - அது சரி, திரிபோசாவை நிப்பாட்டி காசு குடுக்கிறதில என்ன வித்தியாசம் இருக்காம்?

**கோமளா** - திரிபோசா குடுக்கிறது நூறு வீதம் முற்று முழுதா உரியவரிட்ட போறதில்லையாம். அதை விட இடையில உள்ள அலுவலர் வீடுகளில தான் அதிகமா திரிபோசா உலாவுதாம். வவுச்சர் எண்டா இடைநடுவில் தரகர்களாகவும் ஒப்பந்ததாரர்களாலும் விழுங்கப்படும் இலாபத்தையும் சேர்த்துப் பயனாளிகளுக்குக் குடுக்கலாம் தானே.

**தாமரை** - வீட்டில புருசன் தனக்குத் தேவையானதை வேண்டுவம் எண்டு நிண்டுகொண்டால் பாதிப்படையிறது கர்ப்பிணிகள் தானே.

**கோமளா** - நீ, சொல்லுறதும் சரிதான, இதில் கூடின கவனம் எடுக்க வேண்டியது பெண்கள் தான். டொக்டர் எந்தச் சத்தை பரிந்துரை செய்யிறாரோ அது அதிகமாக உள்ள சாப்பாட்டை வேண்டிச் சாப்பிட வேணும். பிள்ளைகளுக்கும் அப்படிச் செய்ய வேணும்.

**சாமந்தி**- நல்லா இருக்கு உன்ர கதை, எந்தப் பொம்பிள தன்னப் பற்றி நினைச்சு தன்ர ஆரோக்கியத்துக்காகப் பொருள் பண்டம் வாங்குகிறாள்? எல்லாம் புருசன் பிள்ளைக்குத்தான்.

**கோமளா** - காலம் பூராகவும் உப்பிடியே இருந்தாச் சரி வருமே, சுகி சிவம் ஐயா சொல்லியிருக்கிறார், முதலில் உன்னை நேசி, பிறகு மற்றவரைப் பற்றி யோசி எண்டு.

**தாமரை** - அதென்னவோ வாஸ்தவம்தான், ஆனால் உந்த வவுச்சர் விளையாட்டு மருந்துவ மாதுக்களுக்கு வேலையைக்கூட்டி சம்மந்தப்பட்ட பெண்களுக்கும் அலைச்சலைக் குடுக்கப் போறது எண்டது மட்டும் நல்லாத் தெரியுது. நல்லவேளையா உந்த விளையாட்டில இருந்து நான் தப்பிவிட்டன்.

**சாமந்தி** - எனக்கென்னவோ உது சரிவரும் போல தெரியேல்ல ஆனால் சரியான இறுக்கமான மேற்பார்வையிருந்தால் முடியாது என்றும் சொல்ல முடியாது

**கோமளா** - சரி சரி, என்ன நடக்குதெண்டு பொறுத்துத் தான் பாப்பமே. அப்ப சரி நாங்கள் போட்டுவாறம் என்றபடி சாமந்தியும் தாமரையும் எழுந்துகொண்டனர்.

ஜனநாயகி

# நம்ம நல்ல குடும்பம்

திருமணம் என்பது ஒரு குடும்பத்தின் ஆரம்பக்கட்டமாகக் காணப்படுகின்றது. திருமணம் என்கின்ற ஒப்பந்தத்தின் மூலமே ஆணும் பெண்ணும் கணவன்-மனைவி என்ற ஒரு உறவைக்கொண்டு தங்களது குடும்ப வாழ்க்கையை ஆரம்பிக்கின்றனர். புதிதாகத் திருமணம் செய்கின்ற ஒவ்வொரு தம்பதியினரும் தாங்கள் மகிழ்சியாகவும் சந்தோசமாகவும் வாழவேண்டும் என்று ஆசைகொள்வதோடு மனைவி தனது கணவனின் குடும்பத்தினரோடும் அதேபோல் கணவன் தனது மனைவியின் குடும்பத்தினருடனும் நல்ல முறையில் நடந்துகொள்ளவேண்டும் என்றே அவாக்கொள்கின்றனர். இருந்தபோதிலும் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் குடும்பங்களுக்கிடையில் போர் தொடுக்கும் வாளாகவே இருந்து வருகின்றது. ஒவ்வொரு குடும்பமும் நல்ல குடும்பமாக மிளிர்ந்திட கணவன் - மனைவி ஆகிய இருவரதும் பங்களிப்பு மிகமிக முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது.

அல்லாஹ் தனது திருமறையாம் அல்குர்ஆனில் குறிப்பிடும்போது நீங்கள் மன நிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே உங்கள் ஜோடிகளைப் படைத்திருப்பதும் உங்களிடையே அன்பையும், நேசத்தையும் உண்டாக்கி இருப்பதும் அவனது அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக் கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக இதில் அத்தாட்சிகள் உள்ளன.

இதே போன்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும்போது உங்களில் சிறந்தவர்கள் யார் என்றால் உங்களது மனைவிமார்களிடம் சிறந்தவர் எவரோ அவரே! என்னுடைய மனைவிமார்களிடத்தில் நான் மிகச்சிறந்தவனாக இருக்கின்றேன் என்று கூறியுள்ளார்கள். எனவே கணவனானவன் மனைவியுடன் நல்லமுறையில் நடந்துகொள்வது நபிவழியாகவும் இன்னும் அல்லாஹ்வுடைய கட்டளையாகவும் காணப்படுகின்றது. குடும்பங்களிடையே காணப்படும் முக்கியமான பிரச்சினையாக மாமியார் மருமகள் பிரச்சினை காணப்படுகிறது. குடும்பத்தை சின்னாபின்னமாக்குவதற்கு இந்த ஒரு பிரச்சினை போதுமானது. இவ்வாறான பிரச்சினைகள் தங்களது வீடுகளில் வராமல் இருப்பதற்கு மிக முக்கியமான காரணமாக கணவன். மனைவி புரிந்துணர்வு காணப்படுகின்றது.



ஒரு பெண் திருமணமானவுடன் தன் பெற்றோர் மற்றும் உற்றார் உறவினரை விட்டுப் புகுந்த வீட்டில் அடியெடுத்துவைக்கின்றாள். (அதாவது, தனது கணவனின் இல்லத்தில்) எனவே, அவளது எல்லா அபிலாசைகளையும், எதிர்பார்ப்புக்களையும் பூர்த்திசெய்வது ஒரு நல்ல கணவனின் கடமையாகும்.

அன்புக்குரிய கணவர்களே! நீங்கள் உங்கள் மனைவிக்கு நல்ல கணவராக இருக்கவிரும்பினால் இறை அச்சமுள்ளவராக ஆகிவிடுங்கள். இந்த இறையச்சமே உங்களுக்கும் உங்கள் மனைவிக்குமிடையே உள்ள உறவைப் பலப்படுத்துவதுடன் அன்பையும் புரிந்துணர்வையும் வளப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

உங்கள் மனைவிமார்களின் சின்னச்சின்ன ஆசைகளை நிறைவேற்றுவதுடன், அவர்கள் கூறும் நல்ல கருத்துக்களை ஏற்றுக்கொள்பவராகவும் பழகிக்கொள்ளுங்கள். அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அவரவர் வருமானத்திற்கேற்றாற்போல் செய்துகொடுத்து மனைவியரை உடலாலோ



மனதாலோ சோர்ந்துபோகாமல் பார்த்துக்கொள் ளுங்கள். அதைவிட, வீட்டுவேலைகளில் உதவி ஒத்தாசை செய்வதன் மூலம் அவர்களின் அன்பைப் பெற்றுக்கொள்ளுங்கள். தங்களது மனைவியர் தவ றிழைக்கும்போது அவர்களைத் தனிமையிலன்றி பிறர் முன்னால் கண்டிக்கவே கண்டிக்காதீர்கள்.; அதிகமான ஆண்கள் குழந்தைச் செல்வம் கிடைத் ததும் முழுஅன்பையும் குழந்தைகளுக்கு மட்டுமே செலுத்துகின்றனர். இதன்போது உடல் நிலையில் பாதிக்கப்பட்டிருக்கும் பெண்கள் மனதளவிலும் பாதிக்கப்டுகின்றனர். எனவே, அன்புசெலுத்துவ தில் கஞ்சத்தனம் காட்டாது தாயையும் சேயையும் அன்பாகவும் பாசமாகவும் பார்த்துக்கொள்ளுங் கள். இன்னும் மாமியார், மருமகள் பிரச்சினை யின்போது தலையிடாது ஒதுங்கியே இருங்கள். அவ்வாறான பிரச்சினைகள் உங்களிடம் கொண் டுவரப்படும்போது செவிடன் காதில் சங்கூதியது போன்று இருந்துவிடுங்கள். இது உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் சிறந்ததாகும். இது உங்க ளுக்கு விடுக்கப்படும் ஆலோசனையாக அல்லாது கட்டளையாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

இன்னும் மனைவியருக்குரிய ஆலோசனை யாக கணவனது தேவைகளை நிறைவேற்றுவதில் மிகுந்த முயற்சியுடன் ஆர்வமாகச் செயற்படுங் கள். வேலை முடிந்து களைப்புடன் திரும்பிவரும் கணவனை சுத்தமான உடை, அழகிய தோற்றம் மற்றும் இன்முகத்துடன் வரவேற்றுக்கொள்ளுங் கள். அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி மார்க்க விடயங்கள், அதாவது தொழுகையை பள்ளிவாசலுக்குச் சென்று தொழுதுகொள்ளுங் கள்., மார்க்கத்திற்கு முரணான செயல்களை ஆத ரிக்காது புகை, மது போன்ற உடலிற்கு கேடுதரும் பழக்கவழக்கங்களை அடியோடு நிறுத்திவிட வேண்டும். கணவன் ஏதும் மனவுளைச்சலில் இருக்கும்போது ஆறுதலான வார்த்தைகளைக் கூறி உற்சாகமூட்ட வேண்டும். கணவரின் குடும் பத்தினரை கண்ணியத்துடன் நடத்தவேண்டும். இன்னும் கணவனுடைய இரகசியத்தை பேணக் கூடியவராக இருக்கவேண்டும். உங்கள் கணவ ருக்கு பொருளாதாரச் சிக்கல்கள,; வியாபாரத்தில் நட்டம் ஏற்படும்போது தோளோடு தோள் நின்று நல்ல நண்பனாகச் செயற்பட வேண்டும்.

உங்கள் கணவர் அம்மா பிள்ளையா? கவ லையை விடுங்கள்!


ஒரு குழந்தைக்கு உலகின் முதல் சொந்தமாக தாயானவள் காணப்டுகின்றாள். தாய் பிள்ளை பாசமானது உலக வார்த்தைகளால் மெச்சமுடியாத ஒன்றாகும். இது உலகத்தார் அனைவரும் அறிந்த உண்மையே. எனவே, தாய் - மகன் இருவரையும் பிரிப்பது யாராலும் இயலாத காரியம். அதுமட் டுமல்லாது பாவமான செயலுமாகும். கணவன் அம்மா பிள்ளையாக இருந்தால் பதிலுக்கு நீங்கள் மாமியார் பிள்ளையாக மாறிவிடுங்கள். மாமி யாரை தனது தாயைப்போன்று பாசத்தைக்காட்டி அரவணையுங்கள். சின்னச்சின்ன பிரச்சினைகள் வரும்போது கணவனிடம் கொண்டுசெல்லாது நீங்களே சமாளித்துவிடுங்கள். உங்களது ஆலோச னைகளையும் தீர்மானங்களையும் மாமியாருடன் பகிர்ந்துகொள்ளுங்கள். சில சந்தர்ப்பங்களில் நீங்களும் மாமியாரும் நல்ல நண்பிகளாக இருங் கள். அப்போது உங்கள் கணவரின் குடும்பப்பொ றுப்புக்களில் பாதி குறைந்தாற்போலிருக்கும். அவரது மனம் நிம்மதியடையும். இனிமேல் அவர் அம்மா பிள்ளையுமில்லாமல் பெண்டாட்டி ராமனுமில்லாமல் நல்ல குடும்பஸ்தனாக இருப் பார். உங்கள் இல்லறம் நல்லறமாகும். தம்பதி கள் சந்தோசமாக வாழ்வது அவர்களுக்கு மட்டும் நன்மை பயப்பதல்ல. அவ்விருவரின் குடும்த்தார், பிள்ளைகள் அனைவருக்குமே சந்தோசத்தைக் கொடுக்கும். ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டி, சகிப்புத்தன்மையுடனும் பொறுமையுடனும் விட்டுக்கொடுத்து வாழ்வதை பார்க்கக்கூடிய பிள்ளைகள் இத்தகைய நட்பண்புகளை தங்கள் வாழ்விலும் செயற்படுத்தி நன்மையடைவார்கள். அமைதியான சூழ்நிலை நிலவக்கூடிய இல்லறத் தில் வாழ்வின் வசந்தங்கள் என்றென்றும் பூத்துக் குலுங்கி நம்ம குடும்பம் எப்போதுமே நல்ல குடும்பமாக பரிணமிக்கும்.

றிப்னா மசூர் (மருதமுனை)



# சிரிப்போம் சிந்திப்போம்

# அந்த ட்ரிங் மாதிரி வருமா?



நேரம் இரவு 10 மணி. அந்த மதுபானச் சாலையில் நல்ல நெரிசல். கூட்டமாகவும் தனியாகவும் அமர்ந்திருந்தவர்களால் அந்த ஹோல் இரைச்சலாக இருந்தது. வெளிச்சம் குறைவான ஒரு மூலையில் அமர்ந்திருந்த ஒல்லியான அந்த நபர் தன் முன்னால் மேசையில் வைக்கப்பட்டிருந்த சாராயக் கிளாஸை வெறித்து நோக்கியவாறு பலத்த சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

அந்த சமயத்தில் தடபுடலாக உள்ளே நுழைந்தான் சண்டியன் ''குடு சந்தன'' அவனைக் கண்டதும் ஹோலில் இருந்த இரைச்சல் சட்டென ஓய்ந்து போனது. அடி தடிக்குப் பேர்போன அவன் இன்றைக்கு யாரோடு வம்பு இழுக்கப் போகிறானோ என்று கடை உரிமையாளரும் பயந்து கொண்டிருந்தார்.

சுற்றுமுற்றும் நோட்டமிட்ட சந்தன நேராக நோஞ்சான் ஆசாமி இருந்த ரேபிளுக்கு போனான். மேசையில் இருந்த கிளாஸை எடுத்து ஒரே மிடறில் வாயில் ஊற்றிக் கொண்டான். திகைத்துப்போன ஒல்லி நபர் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினார். சண்டையை எதிர்பார்த்து வந்த சண்டியன் தடுமாறிப் போனான். நோஞ்சான் ஆசாமியின் அழுகை அதிகரித்தது.

சரி, சரி அழாதே, உனக்கு வேற ட்ரிங் வாங்கித்தருகிறேன் என்று சமாதானம் சொன்னான். ஆனால் அந்த நபர் புலம்பினார். ''இன்றைக்கு காலையில் இருந்து எனக்கு நேரமே சரியில்லை. காலையில் கட்டட லிப்ட் வேலை செய்யவில்லை. எட்டு மாடிகள் இறங்கி வந்து காருக்குப் போனால் சாவியை மறந்திருந்தேன். பிறகு ஏறிப்போய் சாவியை கொண்டு வந்து காரில் ஆபீசுக்குப் போனால் ஒவ்வொரு நாளும் லேட் என்று வேலையை விட்டுத் தூக்கி விட்டார் மேனேஜர். கார் பார்க்குக்கு வந்தால் காரை எவனோ கிளப்பிக் கொண்டு போய்விட்டான். ஆட்டோவில் ஏறினால் அது இடையில் மக்கர் பண்ணிவிட்டது. மூன்று கிலோமீற்றர் நடந்தே வீட்டுக்குப் போய் எட்டுமாடி ஏறிப்போனால் எனது மனைவி பக்கத்து வீட்டுக்காரனுடன் படுக்கை அறையில் கிடக்கிறாள்.

வெறுத்துப்போய் கீழே வந்தால் வாடகைப் பாக்கியால் வீட்டைக் காலிபண்ணு என்று அடியாட்களுடன் வீட்டுச் சொந்தக்காரன். பாதைக்கு வந்தால் ஹெரோயின் கேஸில் மகனை பொலிஸ் தள்ளிக் கொண்டு போகிறது.

எனக்கு எல்லாமே வெறுத்துப் போய் இந்த பாருக்கு வந்து தண்ணி அடிக்கத் தொடங்கினேன். இதில் நீ வேறு எனக்கு கடுப்பேத்துகிறாய்'' என்று சொல்லிவிட்டு மீண்டும் அழத் தொடங்கினார்.

சரியப்பா, உனக்கு ஒரு முழுப்போத்தலே வாங்கித்தருகிறேன், அழாதே என்ற சண்டியன் சமாதானம் செய்தான்.


எந்தப் போத்தலை வாங்கினாலும் நான் கிளாஸில் வைத்திருந்தது போல் வராதே என்று புலம்பினார். ''சரியப்பா, அந்தக் கிளாஸில் அப்படி என்ன தங்கத் திரவமா இருந்தது?'' என்று சண்டியன் ஆத்திரத்தோடு கேட்க, ஒல்லி ஆசாமி சொன்ன பதில்..

**64 ஆம் பக்கத்தில்.**



தயாரிப்பு – கே.சுப்பிரமணியம்

# கிளி/முருகானந்தா கல்லூரி மாணவி தனுஜா பங்கஜன்.



படைப்பாற்றல் என்பது பல்கிப்பெருகி புற்றீசல்களாக முளைத்துக்கொண்டிருக்கின்ற காலம் இது. ஒரு பக்கம் வாசிப்பு சரிவுநிலையை நோக்கினாலும் இன்னொரு பக்கம் எதிர்கால சந்ததியினரிடம் கலை உணர்வு துளிர்த்து எழுகின்றது என்பதே இது உணர்த்தும் செய்தியாகும். உள்ளத்து உணர்வுகளே படைப்புகளாக பிரவாகம் எடுத்துக் கொண்டிருக்கின்றன. கட்டுக்கடங்காது தட்டுக்கொட்டும் உணர்வுகளை வார்த்தைகளில் கட்டிப் போடும் வித்தையே கவிதை சமைத்தலாகும். வகைவகையாய் வண்ணம்வண்ணமாய் படையல்கள் சமைக்கும் இப் படைப்பாளிகளை அறிமுகப்படுத்தி அங்கீகாரம் அளிக்கும் ஒப்பற்ற பணியினை ஆற்றி வருவதில் பெருமையும் நிறைவும் அடைகின்றாள் ஒளிஅரசி. அந்த வகையில் இம்மாத ஒளிஅரசியின் கவிஞர் அறிமுகம் பகுதியை அலங்கரிப்பவார் கிளி/முருகானந்தா கல்லூரி உயர்தர மாணவியான செல்வி தனுஜா பங்கஜன்.

இவர், மருதநிலமும் நெய்தல் நிலமும் இணைந்த பெருநிலப்பரப்பாம் முல்லைத்தீவில் விசுவமடு என்னும் கிராமத்தில் பிறந்து வளர்ந்து சாதாரண தரம் வரை மு விசுவமடு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று உயர்தரத்தினை முருகானந்தாக் கல்லூரியில் பயின்று வருகின்றார். கல்வி, விளையாட்டு என பல்துறையில் சாதித்து வரும் தனுஜா இலக்கியத் துறையிலும் தடம் பதித்துள்ளமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றாள் ஒளிஅரசி.

சொற்கள் நடப்பதை விட நடனமாடுவதையே விரும்புகின்றேன். இது தனுஜாவின் உள்ளத்து வரிகள். உள்ளத்து எண்ணங்களை அடக்கி வேலியிடப்பட்டிருந்த தனது உணர்வுகள் இடப்பெயர்வின் பின்னர் கண்ணுற்ற வலிகளாலேயே உடைப்பெடுக்க ஆரம்பித்தன எனக்கூறுகின்றார். கல்வி, சமூகம், பெண்ணியம் எனப் பல விடயங்களைத் தொட்டுச்சென்றிருக்கிறார் தனுஜா. விடியாத வாழ்வு தொடங்கி வித்தியாவின் கொடூரம் வரை அனைத்தும் படைக்கப்பட்டிருக்கிறது இவரது கவிகளில். சமூகத்தில் தான் பார்த்த அவலங்களையும் சந்தித்த அனுபவங்களையும் ஒரு பூவின் மடலாகச் சமர்ப்பித்திருக்கிறார். ஆசிரியர்களால் பெற்றோரால் பிள்ளைகள் பெருமையடையும் சந்தர்ப்பங்கள் உண்டு. இளங்கவி தனுஜாவினால் பெற்றோரும் ஆசிரியரும் மட்டுமன்றி அவரது மண்ணும் பெருமையடைந்துள்ளது. மொட்டாகியிருக்கும் தனுஜாவின் இலக்கியப் பயணம் பூவாகி மணம் பரப்ப ஒளி அரசியும் வாழ்த்தி நிற்கின்றாள்.

## உருகும் பெண்



மெழுகு வர்த்தி பேசுகின்றது
அவளே பெண்
தன் திரிக்கரு சிதைவதை எண்ணியே
அவள் மனம் அழுகின்றது

சூரியனே
உருகும் மெழுகுவர்த்தியை
ஏன் உன் உதிக்கும் கரங்களால்
உருக்குகிறாய்?
இப் பெண்கள் படும் பாடு
போதாதென்றா?

எதை எழுதினாலும்
என் பேனா மை கசிவதில்லை.
இப்போ கசிகிறது
பெண்களின் அவல நிலை கண்டு

தினம் பெண்களுக்குத்
தேய்பிறை என்றால்
விடிவு என்ற ஒன்று எதற்கு?

இந்தப் பெண்ணை
கலங்கரை விளக்காய் கருதி
விட்டில் என
முட்டி மோத வேண்டாம்.

இங்கே வடிவது கண்ணீரல்ல
பெண்களின் எழுச்சி வெள்ளோட்டம்.
ஓ...அது எழுச்சி வெள்ளோட்டமா?
இல்லை இல்லை அது
புரட்சிக் கண்ணோட்டம்.

(2014.07.23 அன்று எழுதப்பட்டது)

**குறிப்பு:-** தனுஜாவின் பதிவுகள் ஒவ்வொன்றிலும் திகதியும் சந்தர்ப்பமும் குறிப்பிடப்பட்டுள்ளன.


கம்பிகலின் மொழி -பிரேம்

# மனதிற்கு மகிழ்ச்சிதரும் சமூகசேவை




இன்று பல்வேறு சங்கங்கள் பெயரளவில் தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மேலும் சில சங்கங்கள் பெயரளவில் உறங்கிக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் பல வருடகாலமாகத் தங்கு தடையின்றி தொடர்ச்சியாக சேவையாற்றும் ஒரு சங்கம் தான் இளம் மாதர்களின் முஸ்லிம் சங்கம். பெண்களின் தலைமையில் பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இவ்வளவு காலமும் ஒரு சங்கம் இயங்குவது என்பது முயற்கொம்பாகும். ஆனால் அதற்கு மாறாக எல்லோரும் மூக்கில் விரல் வைக்கும் அளவுக்கு அபூர்வமாக சளைக்காது சமூக சேவையாற்றும் இச்சங்கத்தின் பணிகள் உண்மையிலேயே பாராட்டத்தக்கவை இச்சங்கத்தின் முதுகெலும் பாகத் திகழும் சங்கத்தலைவியான **தேசமான்ய ஹாஜியானி மக்கியா முஸம்மில் தான்** இம்மாத மங்கையாக ஜொலிக்கிறார். இவருடனான நேர்காணல் வாசகர்களாகிய உங்களுக்காக.

**இனி சங்கத்தலைவியான தேசமான்ய மக்கியா முஸம்மிலிடமே அன்னாரின் சங்க செயற்பாடுகள் குறித்து கேட்டறிவோமா?**

**கேள்வி : முதலில் உங்களைப்பற்றி அறிமுகம் ...?**

**பதில்:-** வெலம்படையைச்சேர்ந்த எம்.எல்.எம்.கபூர் சித்தி மலீஹா தம்பதிகளின் மூத்த மகளாகப் பிறந்தேன். கொழும்பு தெமட்டகொடையை பிறப்பிடமாகக் கொண்ட நான் தெஹிவளை நெதிமாலைப் பகுதியை வசிப்பிடமாகக் கொண்டுள்ளேன். கொழும்பு பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் ஆரம்ப கல்வியை கற்ற நான் கொழும்பு ஸ்டெபெர்ட் கல்லூரியில் உயர்கல்வியை தொடர்ந்தேன். படிக்கும் காலத்திலேயே எனக்கு சமூக சேவையில் அதிக ஈடுபாடு ஏற்பட்டது.அதன் பயனாக மக்கியா காமன்ற் என்ற பெயரில் ஆடை உற்பத்தி நிலையம் ஒன்றை ஆரம்பித்தேன். அதில் சுமார் பத்து பெண்களுக்கு தொழில் வாய்ப்பும் வழங்கப்பட்டன.

வெலம்படையைச்சேர்ந்த ஏ.எல்.எம்.முஸம்மிலை 1977 ஆம் ஆண்டு கரம் பற்றினேன்.எனது கணவர் மக்கள் வங்கியில் உதவிபிராந்திய முகாமையாளராக கடமையாற்றி ஒய்வு பெற்றார் தற்சமயம் வர்த்தகத்துறையில் ஈடுபட்டுள்ளார். எமக்கு மூன்று பெண் பிள்ளைகளும் ஒரு மகனும் உள்ளனர். இவர்கள் அனைவருமே திருமணமாகி தனிக்குடித்தனம் நடத்துகின்றனர்.

**கேள்வி:- ஒரு இல்லத்தரசியான நீங்கள் பலமான ஒரு மாதர் சங்கத்துக்கு தலைவியானது எப்படி?**

**பதில்:-** 1983ஆம் ஆண்டு தான் இச்சங்கம் அமைக்கப்பட்டது. ஸரீனா இஸ்ஸதீன் மூலமே நான் இந்த சங்கத்துக்கு அறிமுகமானேன். ''வீட்டுக்குள்ளேயே கிணற்றுத்தவளையைப்போல இருக்காமல் வெளிஉலகத்தையும் எட்டிப்பாருங்கள்'' என்று எனது கணவர் என்னை சதா ஊக்கப்படுத்துவார். அவர் தந்த ஊக்கம் தான் நான் சமூக சேவையில் நிலைத்திருக்க வழிகோலியது எனலாம். இலங்கையின் அறிவுலகத்தந்தையான அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸின் புதல்வியான மரீனா இஸ்மாயீல் தான் இந்த மாதர் சங்கத்தின் தலைவியாக இருந்தார். எனது திறமைகளை இனங்கண்ட அவர் இந்த மாதர் சங்கத்தின் பொருளாளர் பதவிக்கு என்னை நியமித்தார். இதன்படி சுமார் 12வருட காலமாக நான் அந்த பதவியை வகித்தேன். அதனையடுத்தே அனைவரும் சங்கத்தலைவி பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தனர். அமானிதமாக தந்த இந்த பதவியை நான் பக்குவமாகவே கையாள்கிறேன்.

**கேள்வி:- இந்த மாதர் சங்கத்தின் செயற்பாடுகள் பற்றி சற்று விளக்குவீர்களா?**

**பதில்:-** பாடசாலை பிள்ளைகளின் போசாக்கு நலன் கருதி குறிப்பிட்ட சில பாடசாலைகளில் இலைக்கஞ்சி வழங்கும் திட்டத்தை அமுல்படுத்தினோம். அத்தோடு வசதி குறைந்த மாணவர்களுக்குஇலவசஅப்பியயாசக் கொப்பிகளை வழங்கும் நிகழ்வுகளை நாடளாவிய ரீதியில் செயல்படுத்தி வருகிறோம்.

பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகளையும் வழங்கியுள்ளோம். சட்டத்துறை, மருத்துவர், மௌலவி பட்டம் ஆகிய துறைகளில் உயர்

கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு புலமைபரிசில்களையும் வருடாவருடம் வழங்கி வருகிறோம். இலங்கைக்கான மலேசிய தூதுவராக கடமை புரிந்த டத்தோ நஸீரா ஹுசைன் அவர்கள் தனது தந்தையின் பெயரால் வழங்கும் நிதியுதவி யினாலேயே இந்த உயர்கல்வி புலமைபரிசில்கள் வழங்கப்படுகின்றன என்பதை இங்கு நன்றியுடன் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

அவ்வாறே இங்கிலாந்தை வசிப்பிடமாகக் கொண்ட கலாநிதி ஹரீஸ்தீன் அவர்களும் லைலா பவுன்டேசன் என்ற தனது அமைப்பினூடாக எமது சங்கத்துக்கு பல்வேறு வகையில் ஒத்து ழைப்புகளை நல்கி வருகின்றார். புனித றமலான் காலத்தில் வறிய குடும்பங்களுக்கு எமது சங்கத் தினூடாக பெறுமதியான உலர் உணவுப்பொதிக ளையும் வழங்கி வருகிறார். எனவே அன்னாரின் சேவைகளையும் நாம் நன்றியுடன் நினைவு கூரு கின்றோம். அவ்வாறே கட்டார் நாட்டில் இயங்கும் இலங்கை முஸ்லிம் மஜ்லிஸ் இயக்கம் கூட எமது சங்கத்தினூடாக விதவையருக்கான வாழ்வாதாரத் திட்டங்களுக்கு தொடர்ச்சியாக உதவி வருகின் றது. அதன் சேவைகளையும் இங்கு நன்றியுடன் நினைவுபடுத்துவதில் பெருமகிழ்ச்சியடைகி றோம். விதவையருக்கான வாழ்வாதார திட்டத் தின் கீழ் சுய வேலைவாய்ப்பினூடாக அவர்களது பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கில் தையல் இயந்திரங்கள் (மெஷின்கள்) சமையல் உபகரணங் கள் போன்றவற்றை வழங்கி வருகிறோம். மற்றும் சமையல் வகுப்புகள், தையல் வகுப்புகள் போன் றவற்றையும் நடாத்தி வருகின்றோம்.

மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரண உதவி கள், பாடசாலைசாலை மாணவர்களுக்கான கருத் தரங்குகள், நோய்கள் சம்பந்தமான விழிப்புணர்வு கருத்தரங்குகள் போன்ற சேவைகளையும் வழங்கி வருகின்றோம்.

**கேள்வி:- முஸ்லிம் மாதர் சங்கம் என்ற பெயரில் இயங்கும் உங்கள் சங்கத்தின் செயற்பாடுகள் முஸ்லிம் சமூகத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டனவா?**

**பதில்:-** இல்லை. சாதிமத பேதமின்றி அனைத்து சமூகத்துக்கும் எமது சங்கத்தின் சேவைகள் தொடர் கின்றன. முஸ்லீம்கள் மட்டுமன்றி தமிழ் சிங்கள கிறிஸ்தவ அனைத்து சமூகத்தினரும் எமது சங்கத் தின் சேவைகள் பெற்றுக் கொள்கின்றனர் மனித நேய அடிப்படையில் எவ்வித சாதிமத பேதமு மின்றி நாம் சேவையாற்றி வருகிறோம். எமது சங்கத்தை நாடும் எந்த ஒரு சமூகத்தவருக்கும் எம் மாலான உதவிகளை செய்து வருகிறோம்.

வருடாவருடம் மலேசியாவில் நடை பெறும் இளைஞர் யுவதிகளுக்கான தலை மைத்துவப் பயிற்சிக் கருத்தரங்குகளுக்காக அவர் களை மலேசியாவுக்கு அழைத்துச்செல்லும் பணியையும் எமது சங்கம் மேற்கொள்கின்றது.

**கேள்வி :- உங்கள் சங்கத்தின் சேவை கொழும்பு மாவட்டத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதா?**


**பதில்:** இல்லை. எமது சங்கத்தின் கிளைகள் நாடளாவிய ரீதியில் 16 இடங்களில் அமைக்கப் பட்டு எமது சங்க சேவைகள் விஸ்தரிக்கப்பட் டுள்ளன.

**கேள்வி :- உங்களின் சங்க நடவடிக்கைகளுக்கு சங்க உறுப்பினர்களின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கிறதா?**

**பதில் :-** ஆமாம். எமது சங்க போஷகர் ஹாலீதா சஹாப்தீன் அவர்களின் வழிகாட்டலின் கீழ் எமது சங்க உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தரும் மகத் தான ஒத்துழைப்பு தான் நாம் இவ்வளவு சேவை களை செய்ய வழி வகுத்தது என்றால் அது மிகை யாகாது. குறிப்பாக சங்க செயலாளர் தேமான்ய மர்ளியா சித்தீக் பொருளாளரான தேசமான்ய பவாஸா தாஹா உட்பட ஏனைய சகல உறுப் பினர்களினதும் அயராத ஒத்துழைப்பே எமது சங்க வளர்ச்சிக்கு பிரதான காரணமாகும். சங்க உறுப்பினர்கள் ஒத்துழைக்கா விட்டால் எம்மால் இவ்வளவு தூரம் பயணிக்க முடியாது. இந்த ஒத்துழைப்பும் ஒற்றுமையும் என்றும் நிலைக்க வேண்டும்.

**கேள்வி:- சங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் என்ன?**

**பதில் :-** வழமையான எமது சமூக சேவைக ளுடன் சங்கத்தின் பெயரால் தொழில் பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும் என்






# காணிகிடைத்தால் தொழிற்பயிற்சி நிலையம்

பதே எமது எதிர்கால திட்டமாகும். இதற்காக பொறுத்தமான இடத்தில் நிலம் தேவை. தனவந்தர்கள் யாராவது இதற்காண காணியை பெற்றத்தர முன்வந்தால் இந்த தொழிற் பயிற்சி நிலையத்தை நிர்மாணித்து இளைஞர் யுவதிகளுக்கு தொழில் பயிற்சிகளை அளிக்க முடியும். இதன் மூலம் இளைஞர் சமூகத்தின் எதிர்காலம் ஒளிமயமாக வழி பிறக்குமல்லவா?

**கேள்வி:-இன்றைய பெண்களுக்கு நீங்கள் கூறவிரும்புவதென்ன?**

**பதில்:-** பெண்கள் அடுப்பங்கரையே தஞ்சம் என்றிருக்காமல் கிடைக்கும் ஓய்வு நேரத்தை சிறந்த முறையில் முகாமைப்படுத்தி சமூக சேவையில் ஈடுபட முன்வர வேண்டும். இதனால் சமூகத்துக்கு பயன் கிடைப்பது போல எமது மனங்களுக்கும் மகிழ்ச்சி கிடைக்கின்றது. குறிப்பாக படித்த பெண்கள் இந்த சமூக சேவைகளில் அதிக ஆர்வம் செலுத்த வேண்டும். ஒவ்வொருவர் உள்ளங்களிலும் சமூகப்பற்று துளிர்விட வேண்டும்.

**கேள்வி:- இறுதியாக ஏதும் கூற விரும்புகிறீர்களா?**

**பதில்:-** ஆம்! சுமார் 33வருடங்களாக சளைக்காது சமூக சேவையாற்றி வரும் எமது இளம் மாதர் முஸ்லிம் சங்கத்தின் சேவைகளை உலகறியச் செய்த 'ஒளி அரசி' சஞ்சிகைக்கு எமது சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவிப்பதுடன் இச்சஞ்சிகையின் சேவையும் தங்கு தடையின்றித் தொடர வாழ்த்திகிறேன்.

அத்தோடு எமது சங்கத்தின் சேவைகளை பெற விரும்புவோர்.

தலைவி:- 0766683688 அல்லது செயலாளர் -0718292957, பொருளாளர்- 0714697009 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளலாம்.

சுமார் 33 வருடகாலமாக சமூக சேவையாற்றும் மேற்படி சங்கத்தை வாழ்த்தி அதனை முறையாக வழிநடத்தும் சங்கத்தலைவியையும் ஒளிஅரசி சார்பாகப் பாராட்டி நாமும் விடைபெற்றோம்.



**நேர்காணல்: கலாபூசணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்**

துளிக்கதை

# வரதட்சணை

அந்த கம்பனி முதலாளி முரளி கம்பனியின வெள்ளி விழாவில் முதல் முறையாகத் தன் மனைவியுடன் கலந்து கொண்டான். முக்கிய ஊழியர்களின் அறிமுகப்படலம் முடிந்தபின், அவள் தனியாக அவனிடம் சொன்னாள். ''பிரகாஸ்னு ஒரு எக்கவுண்டனை அறிமுகப்படுத்தினிங்களே, அவர் என்கூட கம்பசிலை படிக்கும்போது என் பின்னால வந்து வழிஞ்சிட்டிருந்தார்.''




''உன்னோட அதிர்ஷ்டத்தைப் பார்த்தியாகீதா'' சிரித்தான் முரளி ''நீ அவனைக் கட்டியிருந்தா இன்னைக்கு வெறும் எக்கவுண்டனோட பெண்டாட்டியா இருந்திருப்பாய். என்னைக் கல்யாணம் பண்ணினதாலேதான் இந்த கம்பனி ஓனரோட வைவ்பாக (Wife) இருக்கே என்றான்''

''இல்லேங்க உண்மையிலேயே நீங்கதான் அதிர்ஷ்டக்காரர்'' என்று சிரித்தாள் அவள்.

''நான் அவரைக் கல்யாணம் பண்ணியிருந்தா இன்னைக்கு அவர்தான் இந்த கம்பனியோட ஓனராக இருந்திருப்பார்.

(ஜன(ா)ரஞ்சகன், கொழும்பு)




''என்ன சொன்னா?''

''நானே கடினப்படுத்தின அவமனசு கரையிற வரைக்கும் நான் காத்திருப்பேன். வா போகலாம்'' என்ற அஸ்வந்தை பூரிப்பாய் பார்த்தபடி கூட நடந்தான் தீபக்.

வானத்து நட்சத்திரங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் மதுவிழி. சில்லென வீசிய பனிக் காற்று உடலைத் தழுவியது. உறக்கம் வராத பொழுதுகளில் இப்படி மொட்டை மாடியில் நிற்பது அவளது வழக்கம். அவ்வேளை கையில் இருந்த செல்போன் ஒலி எழுப்பியது.

காதுக்கு கொடுத்துவிட்டு ''ஹலோ'' என்றாள்.

எதிர்முனையில் சுசரிதாதான் பேசினாள். ''என்ன மது எப்படி இருக்கீங்க?'' இப்படி ஆரம்பித்து சுவாரஸ்யமான பல பேச்சுகளில் பல நிமிடங்கள் கழிந்தன.

''சுசரி நிறைய நாளைக்குப் பிறகு சந்தோஷமா இருக்கு. ஊர்ல சம்யுகூட இப்படித்தான் சிரிக்க சிரிக்க பேசுவா. உங்களோட பேசினதில அவளோட பேசின மாதிரி ஒரு பீலிங். ரொம்ப ரொம்ப ஹப்பியா இருக்கேன்'' என்றாள் மதுவிழி.

சுசரிதாவை பேசவைத்தது அஸ்வந் என்பதையோ, தங்கையின் அருகில் இருந்து மதுவிழி பேசிய அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்தான் என்பதையோ மதுவிழி அறியவில்லை.

அஸ்வந்தின் முகத்தில் ஏற்பட்ட மலர்ச்சியையும் மகிழ்ச்சியையும் கண்டு பேருவகை அடைந்தாள் சுசரிதா.

காலைச் சூரியன் யன்னல் வழியாய் வீட்டிற்குள் பிரவேசித்தான். உஷ்ணக்கதிர் உடலில் பட்டதால், கண்விழித்தாள் மதுவிழி. முன்னிரவில் சுசரிதா போனில் பேசியதால் மனதில் அமைதியும், ஒருவித மகிழ்வும் ஏற்பட்டிருந்தது. மெல்ல சோம்பல் முறித்தபடி எழுந்துகொண்டவள் வெளியே வர மனமின்றி கட்டிலிலேயே அமர்ந்துகொண்டாள். மனதின் இவ்உணர்வுகளையும் மீறி ஏதோ ஒருவித பரபரப்பு இருப்பதுபோல தோன்றியது. கணனுக்குள் அஸ்வந்தின் உருவம் மெல்லச் சிரித்தது. அஸ்வந்தைப் பார்க்கும் ஆவல் தனக்குள் எழுந்துவிட்டது அவளுக்குப் புரிந்தது.

முதல் நாளில் அஸ்வந்திடம் கடினமாகப் பேசிவிட்டபோதும் மனம் அவனது தரிசனத்திற்காய் ஏங்கியது. இனிமேலும் பொறுக்க இயலாது என எண்ணியபோது தன்மீதே அவளுக்கு கோபம் வந்தது. ஈருயிர் ஒருடல் போல அஸ்வந்தோடு வாழவேண்டிய வாழ்வை அவளாகவே மறுத்துவிட்டு இப்போது அவனது முகத்தைப் பார்ப்பதற்காக தவிக்கவேண்டி உள்ளதே என எண்ணிய மனதிற்கு, அஸ்வந் உன் அன்பை களங்கப்படுத்தி உன் பெண்மையை பழி தீர்த்தவன் எனக் கூறி கெக்கலித்துச் சிரித்தது புத்தி. என்ன செய்வதெனப் புரியாது அப்படியே அமர்ந்திருந்தாள் மதுவிழி.

வெளியே விஜயா ஆன்ரி யாரிடமோ பேசும் ஒலி கேட்க எட்டிப் பார்த்தாள். தீபக் தான் வந்திருந்தான். அவள் குழப்பமடையும் வேளைகள் அவனுக்கு எப்படி தெரியுமோ தெரியாது. ஆனால், அவ்வேளைகளில் அவன் பிரசன்னமாகிவிடுகிறான். அன்பால் உறவான அவனது பந்தத்தை வியந்தபடி குளித்து முடித்து வெளியே வந்தாள்.

''அண்ணா'' என்றாள் அன்புடன்.

''மது என்னடா, ஏன் ஒரு மாதிரி டல்லா இருக்கே?'

''இல்லையே'' அவளது உதடுகள் சொன்ன போதும் உள்ளத்தின் ஏக்கம் முகத்தில் பிரதிபலித்தது.

''ஏன் ஏதாவது பிரச்சினையா?''

''இல்ல அது அஸ்வந்தை பாக்கணும்''

''ஓ.கே. நான் ஏற்பாடு பண்றன்.''

''அண்ணா அவருக்குத் தெரிய வேண்டாம்'' என இழுக்க, ''எனக்கு தெரியாதா அவனுக்கு எதையுமே சொல்லாம அவனைக் கூட்டி வரவேண்டியது என் னோட பெறுப்பு'' என்றான்.

அன்று மாலையே உணவு விடுதி ஒன்றில் அஸ் வந்தைப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டான் தீபக். மாலை மயங்கிய அவ்வேளையில் அவனைப் பார்ப்பதற்காய் புறப்பட்ட மதுவிழி, பார்த்துப் பார்த்து அலங்காரம் செய்துகொண்டாள். விஜயா ஆன்ரியிடம் சொல்லிவிட்டு ஓட்டோ ஒன்றில் ஏறிப் புறப்பட் டாள்.

ஏற்கனவே தீபக்கின் ஏற்பாட்டின்படி அஸ்வந் அங்கே வந்துவிட்டிருந்தான். மனம் பலவாறு குதூக லிக்க மதுவிழிக்காய் காத்திருந்தான் அஸ்வந். விந்தை யான அவளது செயல்களினால் அவனுக்கு சிரிப்பும், மகிழ்ச்சியும், கோபமும் ஒன்றாய் தோன்றின. தானாக அவளிடம் போகும்போது துரத்திவிட்டு, இப்போது அவளாகவே தேடுகின்றாள். அதுவும் அவனுக்குத் தெரியக்கூடாது எனும் நிபந்தனையோடு. எண்ணங்க ளில் இலயித்திருந்தான் அஸ்வந்.

நிலமங்கையை வரவேற்பதற்காய் சூரியன் தனது பொன்னிறக் கதிர்களை மேற்கு நோக்கித் திருப் பியிருந்தான். அத்தகைய இளம் மஞ்சள் ஒளியின் பளபளப்பு அவ்விடத்தையே நிறைத்திருந்தது. கண் ணாடிப் பதுமை என ஆட்டோவில் வந்திறங்கிய மதுவிழியை தூரத்தில் வரும்போதே கண்டுவிட்டான் அஸ்வந். சட்டென தனது கையிலிருந்த கமராவை உயிர்ப்பித்து அவள்புறம் திருப்பினான்.

சூரியனின்மெல்லிய பொன்னொளிபட்டு அவளது மேனி தகதகவென மின்னியது. ஏதோ ஓர் ஏக்கம் அவளது விழிகளுக்குள் தெளிவாகப் பிரதிபலித்தது. ஓடிச்சென்று அவளது கரங்களைப் பற்றிக் கொள்ள வேண்டும் போல பரபரத்த மனதை அடக்கிக்கொண் டான். அவள் மறுக்க மறுக்க அவளுக்குள் மெல்ல மெல்ல தான் ஊடுருவுவது அவனுக்குப் புரிந்தது. 'காலம் நிச்சயம் கனியும்' என எண்ணிக்கொண்டான் அஸ்வந். எங்கிருந்தோ வந்து சேர்ந்த தீபக், அஸ்வந் தின் அருகில் அமர்ந்துகொண்டான். தனியே இருந்த மதுவிழி இவ்வகையான செயல்களில் பழக்கமற்றவள் என்பதால் சங்கடத்துடன் இருந்ததை இருவரும் கண் டுகொண்டனர். அஸ்வந் நிமிர்ந்து தீபக்கைப் பார்க்க, மெல்லிய முறுவலால் பதில் தந்தான் அவன்.

மதுவிழியின் பார்வைவட்டத்திற்குள் மெல்ல விழுந்தான் அஸ்வந். தீபக்கோடு பேசியபடி இருந்த அவனது பார்வை மட்டும் அவள் புறம் திரும்பவே இல்லை. பக்கவாட்டில் தெரிந்த அவனது முகமோ சிறந்த சிற்பி ஒருவன் செதுக்கிய சிற்பம்போல் கல்லாக இறுகிக் கிடந்தது. அவன் சிரித்துப்பேசமாட்டானா எனத் தவித்த நெஞ்சமோ கனத்துப்போனது அவ ளுக்கு. எப்போதும் சிரிக்கச் சிரிக்க பேசும் அஸ்வந் இப்போதெல்லாம் அதிகம் சிரிப்பதோ பேசுவதோ இல்லை என சுசரிதா சொன்னது உண்மைதான் என எண்ணிக்கொண்டாள். அவனுக்கு தான் அளித்த தண் டனை ரொம்ப அதிகமோ என்றுகூட அவளுக்குத் தோன்றியது.

பெயருக்கு எதையோ ஓடர் பண்ணிவிட்டு காத் திருந்த வேளையில் தோழியர் சூழ அவ்விடம் வந்து சேர்ந்த சுசரிதா, ''ஹாய் என்ன மது இந்தப்பக்கம்'' என்றாள்.

''இல்ல சும்மாதான்'' என தடுமாறும்போது சுசரிதாவைச் சூழ்ந்துகொண்ட தோழியர்.

''சுசரிதா யார் இவங்க?'' என வினா தொடுக்க,

மதுவிழிக்கோ நிலைமை சங்கடமாய்ப் போனது.

''இவங்க எனக்கு அண்ணி'' என்றுவிட்டு 'மாதிரி' என்றவள் அவ்வளவு குளோஸ் என்றாள்.

''யாருக்கு? உங்கண்ணாவுக்கா, இல்ல உனக்கா? என்றனர்.

''முதல்ல நீங்க எல்லோரும் சொப்பிங் முடிச்சி ட்டு வாங்க'' எனக்கூறி ஒருவாறு அவர்களை அனுப் பிவைத்தாள் சுசரிதா.

முப்பது நிமிடங்களுக்கும் அதிகமாக மதுவிழி யோடு பேசியபடி இருந்த சுசரிதா, மதுவிழியை கவ னமாக ஓட்டோவில் அனுப்பிவிட்டே அண்ணனிடம் திரும்பினாள்.

''அண்ணா உங்களைவிட தங்கச்சிமேல அவ ருக்கு ரொம்ப அக்கறை. இல்லைன்னா சொப்பிங் போன என்னை கூப்பிட்டு மதுவிழி தனியா இருக்கும்போது ரொம்ப சங்கடப்படுவா. சொப்பிங் பிறகு பாக்கலாம். உடனே வாங்கன்னு ஓடர் பண்ணுவாரா'' என்றாள்.

''டேய் ராஸ்கல். உன் தங்கச்சிக்காக என் தங்கச்சி யை கஷ்ரப்படுத்திறியா?'' என்றான் அஸ்வந் பொய்க் கோபத்துடன்.

''இதென்ன கஷ்டம் உன் தங்கச்சியை நானே சொப்பிங் கூட்டிப்போகப்பேறேனே'' என்றான் தீபக் சுசரிதாவையே பார்த்தபடி.

இரண்டு நாட்களின் பின் வீட்டிற்கு வந்த தீபக் எதுவுமே பேசவில்லை. என்னண்ணா , எதுவுமே பேசாம இருக்கிறீங்க? ரெண்டு பேருக்கும் ஏதாவது பிரச்சினையா? என்ற மதுவிழியிடம்

எங்களுக்குள்ள இல்ல'' என்றாள்.

''என்னண்ணா சொல்றீங்க? அப்போ யாருக்கு பிரச்சினை'' என்றாள் பதற்றமாய்.

''மது நான் இப்படி கேக்கிறதால நீ தப்பா நினைக்கக்கூடாது. நீ ஒரு வாரமா சுசரியோட

போன் கதைக்கவே இல்லையாம். அவ தன்மேல ஏதோ கோபம்ன்னு குழம்பிப்போனா. நான்தான் நானே கேட்டிட்டு வர்றதா சொல்லிட்டு வந்தன். மது... சுசரிதா தன் மனசில படுறதை பட்டுன்னு சொல்லிடுவா. அவ சுபாவம் அப்படி. ஆனா மனசில எதையுமே வைச்சிருக்கமாட்டா'' என இழுத்த தீபக் கிற்கு,

''ஐயோ அப்படி எதுவுமே இல்ல, சுசரியோட எனக்கென்ன கோபம்? அவவோட கதைச்ச பிறகு தான் மனசால ரொம்ப சந்தோஷமா இருந்தேன். நான் ஏதோ மனக்குழப்பத்தில பேசாம இருந்தனே தவிர, சுசரிமேல ஒரு பிழையும் இல்ல. அவ ஒரு நல்ல நண்பி என்றதை விட என்னோட ஒரே அண்ணாவுக்கு மனை வியாகப் போறவ. அவங்களோட எப்படி கோபிக்கிற தாம்'' சொல்லிவிட்டு மெல்லச் சிரித்தாள்.

''ஆ அப்பா'' என்ற தீபக்

''உச்சந்தலைல பெரிய ஐஸ்கட்டியா வைச்சிட்டி யேம்மா. அதான்'' என்றான். பதிலுக்கு சிரிக்காமல்.

அவன் கூறியதைப் பார்த்து கலகலவெனச் சிரித் தாள். ''இப்படி வார்த்தைக்கு வார்த்தை அண்ணா அண்ணாண்ணு சொல்லுறியே தவிர அப்படி நினைக் கிற மாதிரி தெரியவே இல்லை'' என்றான்.

''ஏன் அப்படி சொல்றீங்கண்ணா?''

''அப்படி உண்மையாகவே அண்ணாவ நினைச்சி ருந்தா உன் மனதில் இருந்த கஷ்டத்தை சொல்லியிருப் பாய். இப்படி உனக்குள்ள மறைச்சிருக்க மாட்டாய். சரி எனக்குத் தெரியக்கூடாது எண்டா ஓ.கே. நான் வர்றேன் என எழுந்துகொண்டான்.

**(தொடரும்....)**

கோபிகை

# கடந்த மாத வினாத்தாள் - II இல் பாராட்டுப் பெறும் தரம்-5 மாணவர்கள்

**தபால் மூலம் கிடைக்கப்பெற்ற 1200 வினாத்தாள்களில் 85 புள்ளிகளுக்கு மேல் பெற்ற கீழ்வரும் மாணவச் செல்வங்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

வி.இரேஷன் (97) பம்பலபிட்டி, ஆ.சகானா (95) கொழும்பு 13 அஹமட் நஜாப் (95) பேருவளை, எம். பாதிமா ஹம்தா (96) மாவனெல்ல, ரொ.ஆருணி (94) கொட்டாஞ்சேனை, ம.யஸ்ரிக்கா (94) வவுனியா, பா.கவிஸ்கர்தேவா (94) பம்பலபிட்டி, ற.அபிநயா (93) அல்வாய், ச.ஜஷ்மிதன் (93) தெல்லிப்பளை, ச.விதுர்ஷா (93) தலவாக்கலை, த. யதுர்ஷன் (92) கரணவாய், ர.மாதுரியன் (92) மட்டுவில் வடக்கு, என்.எம்.முப்தி (92) வவுனியா, ச.சிவானுகா (92) நல்லூர் வடக்கு, ச. பியேஷாந்த் (92) குருமன்வெளி-12, ப.கிரிஷான் (92) பம்பலபிட்டி, க.பவித்திரன் (92) பம்பலபிட்டி, க.கிரிசாம் (92) பம்பலபிட்டி, அ.அனுசுருதி (92) வவுனியா, எம்.பி.எச்.எப். புஷ்ரா (91) பேருவளை, க.தனுப்பிரியா (91 ஆவரங்கால், வ.தபூஷனா (91) புன்னச்சோலை, ப.கவிஷா (91) கோண்டாவில், ஜெ.சகீதன் (91) மட்டக்களப்பு, மு.பதிமா நதா (91) அல்அக்ஸாரபுரம், சி.ஹெரீன் (91) வவுனியா, பி. அபிநாத் (91) வவுனியா, இ.இராஜஷியான் (91) பம்பலபிட்டி, ச.ஹக்ஷிந் (91) பம்பலபிட்டி ந.நிஷேவிதா (90) கொழும்பு - 13, ஜெ.ஜெயநிலவன் (90) கட்டைக்காடு, சி.ரகஷியன் (90) சுன்னாகம், கு.தனுஷ்கர் (90) புத்தூர், வி.அட்சயன் (90)வவுனியா, கெ.ரிதன் (90) வவுனியா, யோ. புகழினி (89) நல்லூர், சி. சீனுஜா (89) வவுனியா, ப. அபிலாஷ் (89) வவுனியா, ச. ரிஷாந் (89) கோண்டாவில், சு. கிருஷாந்த் (89) பம்பலபிட்டி, இ. கிஷோபன் (89) வவுனியா, ம. ஹிரேன் (89) பம்பலபிட்டி, தி. டிலக்ஷன் (88) ஏழாலை, தி. ஷர்ணிகா (88) வவுனியா, சி. லக்ஸ்மிகாந் (88) கொழும்பு-13, யெ. அபிசேக் (88) கற்பிட்டி, பி. சுயானா (88) வவுனியா, அ. அலோஜிதன் (88) மட்டுவில் வடக்கு, வி. ஜிசான் (88) வவுனியா, பி. கவிமதுரன் (88) பம்பலபிட்டி, தே. பிரகஷ்வினி (87) புலோலி வடமேற்கு, ரா. ஜான்சிக்கா (87) சின்ன உப்போடை, மட்டக்களப்பு, பி. அபிஷன் (87) மட்டுவில் வடக்கு, சு. சேயோன் (87) வவுனியா, ரா. ஹரிஆகாஸ் (87) வெல்லம்பிட்டி, நி. யரோமி (87) வவுனியா, வி. நவீன் (87) வவுனியா, மு. அகஷிகா (86) திருகோணமலை, ம. ஜனுஸ்தரன் (86) கண்ணகிபுரம், யோ. சிவகாமி (86)அச்செழு, ர. திசோத்மன் (86) மட்டக்களப்பு, யோ. ஷஸ்விந் (86) பம்பலபிட்டி கோ. அபிசிகன் (86) வவுனியா, தெ. ஸஸ்மிதா (86) வவுனியா, தே. டில்ஷான் (86) கொழும்பு-13, ஜெ. ஸ்ருதி (86) வண்ணார் பண்ணை, சி. தனுஸ்கர் (86) பம்பலபிட்டி, அ. அஜந்தன் (86) வவுனியா ர. தனுஷான் (86) பம்பலபிட்டி, கு. பிறேமன் (85) சங்கத்தானை, எம்.ஐ.எப். நிஸ்மா (85) வெளிமடை த. தாரகி (85) வவுனியா, ம. ஹரிஷா (85) வவுனியா, பா. வித்தகன் (85) வவுனியா, ம. மதுஷன் (85) அல்வாய், பி. சேருஜா (85) மட்டுவில் வடக்கு, எம்.ஆர். முஹம் மட் சிமாம் (85) அக்கரைப்பற்று -01, ர. விஷ்மிதா (85) வவுனியா, ப. கிஷோரிகா (85) வவுனியா, த. அமுதவன் (85) வவுனியா, ரா. மாதுளன் (85) பம்பலபிட்டி.

பரீட்சகர் பி.அம்பிகைபாகன் (கொழும்பு)

ஒளிஅரசி

# மலையக பெண்களின் பொருளாதாரம்?



## உண்மை நிலை என்ன?

இலங்கையின் பெருந்தோட்டத்துறையில் 200 வருட வரலாற்றை கொண்ட மலையக மக்கள் நாடற்றவர்களாகவும், வலுவற்றவற்றவர்களாகவும், நிலமற்றவர்களாகவும் மட்டுமன்றி இன்றுவரை முகவரி அற்ற ஓர் சமூகமாக வாழ்ந்து வருகின்றனர்.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களில் 50% மேல் பெண் தொழிலார்களே வேலை செய்கின்றனர். ஆனாலும் உரிமை மீறல்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். எனினும், இன்றுவரையும் இவற்றுக்கான நியாயமான பரிகாரங்கள் அல்லது தீர்வுகள் எடுக்கப்படவில்லை.

இலங்கையானது தெற்காசியாவில் கல்வி நிலையில் உயர்ந்தமட்டத்தில் இருக்கின்றது. ஆனால் பெண்களுக்கான சமூகநீதி சரியாக கிடைத்துள்ளாதா என்றால், ''இல்லை'' என்றே கூற வேண்டும். இலங்கைக்கு அந்நிய செலவாணியை ஈட்டித்தருவதில் பெண்களே முக்கிய பங்காற்றுகின்றனர்.

குறிப்பாக, மலையகப் பெண்கள் பற்றி ஆராய்வோமேயானால் இவர்கள் இன்னும் தேசிய நீரோட்டத்துடன் இணைக்கப்படாத சமூகமாகவே காணப்படுகின்றனர்.

50% மேற்பட்டவர்கள் பிரித்தானியர் காலத்தில் கட்டிகொடுக்கப்பட்ட லயன் அறையிலேயே வாழ்கின்றனர். இன்னும் இவர்கள் நிலத்திற்கோ, வீட்டிற்கோ உரிமையற்றவர்கள்.குறிப்பாக தேயிலைத் தோட்ட தொழிலாள பெண்களுக்கு வேலை நேரத்திற்கு ஏற்ப சம்பளம் கிடைப்பதில்லை.

இலங்கையில் ஏனைய தொழிலாளர்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்த வருமானத்தை பெறுபவர்களாகவே இவர்கள் காணப்படுகின்றனர்.

குறிப்பாக, கண்டி மாவட்டத்திலே வாழுகின்ற மலையக பெருந்தோட்டத்துறை சார்ந்த மக்கள் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர். பல முக்கிய பிரச்சினைகள் காணப்பட்டாலும் கூட ஒரு சில பிரச்சினைகள் முதன்மைப்படுத்தப்பட்ட பிரச்சினையாக காணப்படுகின்றன. அவற்றிலே நிலம், நிலம் சார்ந்த பிரச்சினை, வீடு வாழிடப்பிரச்சினை, தொழில் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினையும், சட்டரீதியான கொடுப்பனவுகள் (EPF,ETF, சேவைகால பணம்) சம்பந்தமான பிரச்சினை என்பன முக்கியம் பெறுகின்றன. கண்டி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான தோட்டங்கள் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை (JEDB), இலங்கை பெருந்தோட்ட யாக்கம் (SLSPC)ஆகிய நிறுவனங்களின் முகாமைத்துவ கட்டமைப்பில் காணப்படுகின்றன.

JEDB, SLSPC, மற்றும் எல்கடுவ பிலான்டேசன் தோட்டங்கள் கண்டி, மாத்தளை மாவட்டங்களிலேயே பெரும்பாலும் காணப்படுகின்றன. இத்தோட்டங்கள் ஒப்பீட்டுரீதியில் குறைந்த உற்பத்தி, வருமானம், மோசமான முகாமைத்துவ நிலைமை, இலாபமற்ற தன்மை, தொழிலாளர்களின் குறைந்த வாழ்க்கைத் தரம், தொழிலாளர்களின் வருமானமின்மை, குறைந்த மட்ட சமூக நலன் போன்ற பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருகின்றன. இதிலே குறிப்பாக கண்டி மாவட்டத்திலே காணப்படுகின்ற பல்வேறு JEDB தோட்டங்களும் நில கையகப்படுத்தல், நில விற்பனை, நில சுவீகரிப்பு, நிலம் துண்டாடப்படல் போன்ற பல்வேறு நிலம் சார்ந்த பிரச்சினைகளுக்கு உள்ளாகிவருகின்றன. இதன் பிரதிபலனாக தோட்டங்கள் மூடப்படுதல், தொழிலாளர்கள் வருமானத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வருகின்ற நிலைமை, வீட்டையும் வாழ்விட



வசதிகளையும் இழந்து வருகின்ற நிலைமை போன்றவற்றை காணக்கூடியதாகவுள்ளது. இவ் வாறான நிலைமைகளில் அதிகமாகப் பாதிக்கப்படுவது பெண்களே.

இவர்களது சம்பளம் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை முதலாளிமார் சம்மேளனத்தினதும், தொழிற்சங்கங்கள் சம்மேளனத்தினதும் ஒப்பந்த உடன்படிக்கை மூலமே பேசப்படுகின்றது. இதில் பெண்கள் பங்குபற்றுவதில்லை. மேலும் 2013 ஆம் ஆண்டு கைச்சாத்திட்ட சம்பள ஒப்பந்தம் 2015 மார்ச் மாதத்துடன் முடிவடைந்து விட்டது ஒரு வருடமாகியும் இன்னும் இவர்களது சம்பள ஒப்பந்தக் கூட்டம் கூட்டப்படவில்லை. மற்றும் தொழிற்சங்கரீதியாகவோ, அல்லது அரசியல் ரீதியாகவோ பெண்களின் தலைமைத்துவம் குறைவாக காணப்படுகின்றது. இச்சமுகம் தொழில் ரீதியாக கொச்சைபடுத்தப்படுகின்ற சமூகமாகவே காணப்படுகின்றது.

கண்டி, கேகாலை, நுவரெலியா, பதுளை போன்ற மாவட்டங்களில் உள்ள தோட்டப்

# பொது அபிவிருத்தி நிதியம் ஒன்று அவசியம்!

பிரதேசங்களில் நிலவீட்டுரிமை தொடர்பான, சகல வசதிகளும் கொண்ட வீடமைப்பு, வாழ்வாதாரதேவைகளுக்கும் காணி வழங்கப்படுவதோடு, பெருந்தோட்ட மக்கள் பெருந்தோட்டக் கைத்தொழிற்துறையின் பொருளாதார உற்பத்திச் சாதனமாகப் பார்க்கப்படாது உரிமையும், கௌரவமும் மிக்க பங்காளர்களாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற நியாயப்பிரச்சாரத்தை, தொழிலாளர் ஒத்துழைப்பு சங்கமும், மலையக கூட்டு செயலணியும், மனித அபிவிருத்தி தாபனத்தின் ஒத்துழைப்புடன் கண்டி, கேகாலை, நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் உள்ள தோட்ட பிரதேசங்களில் மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.


**உதாரணமாக:** கண்டி மாவட்டத்தில் லூல்கந்துர அபர்கோனாவ தோட்டத்திலும், நுவரெலியா மாவட்ட ஹேவாஹெட்ட தோட்டத்திலும் அண்மை காலங்களில் மண்சரிவு ஏற்பட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இவ்விடயம் தொடர்பாக அரச அதிகாரிகளினால் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு, வேறு இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டது. அறிவுறுத்தல் மட்டும் கொடுத்தால் அம்மக்கள் எங்கு செல்வார்கள்? அவர்களுக்கான இட ஒதுக்கீடு எதும் செய்து கொடுக்கப்படவில்லை. இவ்விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளகள், தொழிலாளர்கள் ஒத்துழைப்புச் சங்கத்திற்கு முறைப்பாடுகளைச் செய்தனர். இதற்கிணங்க தொழிலாளர் ஒத்துழைப்புச் சங்கம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் உரிமையை நிலைநாட்டுவதற்காக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிற்கு இம்முறைப்பாட்டை கையளித்தது. மேற்படி இம்முறைப்பாடு தொடர்பான முதல் விசாரணை 13.01.2015 அன்று கொழும்பு மனித உரிமை ஆணைக்குழு காரியாலயத்தில் நடைபெற்றது. அங்குரங்கெத்த பிரதேச செயலக செயலாளர் அவர்கள் நாம் இம்மக்களுக்கு மாற்றிடம் கொடுத்து வீடு கட்டி கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் முன்வைத்தோம், ஆனால் தோட்ட நிருவாகம் அதற்கு முன்வரவில்லையென்று குறிப்பிட்டார். அத்தோடு இலங்கை கட்டட ஆய்வு மையத்தின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. விசாரணையின் தீர்வாகப் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு நிலம் ஒதுக்கப்பட்டு வீடு கட்டி கொடுக்கப்பட வேண்டும் என்று நிர்பந்திக்கபட்டது. இவ்வாறு நீண்டுபோகும் மலையகப் பெண்களின் அபிவிருத்திக்கு வலுவான பொது அபிவிருத்தி நிதியம் ஒன்றை உருவாக்க முகாமைத்துவ உயர் பதவியில் இருக்கும் பெண்கள் முன்வருவார்களா?

திருமதி. பி. லோகேஸ்வரி (பெண்கள் ஒத்துழைப்பு முன்னணி)



இன்று இலங்கையில் மின்சாரம் தாக்கி மாதாந்தம் 100 பேருக்கு மேல் பலியாகின்றனர். பாதிப் படைகின்றனர் எனப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இந் நிலையில் இல்லத்தரசிகள் எவ்வாறு ஆபத்து இன்றியும் செலவு குறைந்த முயையிலும் மின் உபகரணங்கள் பயன்படுத்தலாம் என்பதை இங்கு ஒலிஅரசி தொடர்சியாக தர முன்வந்துள்ளது. இவ் வகையில் இம் மாதம்...

# வீட்டு மின் உபகரணங்களை பாதுகாப்பாக கையாளுதல்






1. வீட்டு மின் இணைப்பில் Trip Switch (தடக்கு ஆளி) இணைக்கப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்தல்.
2. தடக்கு ஆளி சரியாக வேலை செய்கின்றதா எனப் பார்த்தல்.

   **சோதிக்கும் முறை:-** Trip Switch CÀ இருக்கும் மஞ்சள் பொத்தானை (button) அழுத்தினால் Trip Switch off நிலைக்கு வரும். இப்படி தொழிற்பட்டால் Trip Switch நல்ல நிலையில் இருக்கின்றது என முடிவுசெய்யலாம்.
3. அடுத்து வீட்டு மின் இணைப்பு சரியாக இருக்கவேண்டும். முக்கியமாக (Earth) புவி இணைப்பு உறுதியாகவும், சீரான முறை யிலும் இருக்கின்றதா என மின் இணைப் பாளர்களைக் கொண்டு உறுதிப்படுத்தல்.
4. எல்லா விதமான உபகரணங்களுக்கும் முடிந் தவரை மூன்று இணைப்பு (3 Pin) Plugகளை பாவித்தல் மிகவும் சிறந்தது. மற்றும் பாது காப்பானதும்கூட.

   **முக்கிய குறிப்பு:-** உபகரணங்களில் மின்க சிவு ஏற்பட்டால் 3 கடிண Plug இல் இருக்கும் 3ஆவது இணைப்பு ஊடாக மின்சாரம் சென்று புவியை அடைந்து Trip SwitchI தொழிற்பட வைக்கின்றது. இதனால் எமது உயிர்கள் பாதுகாக்கப்படுகின்றன.
5. உலோக மேற்பரப்பை உடைய மின்சார உப கரணங்களுக்கு கண்டிப்பாக 3 கடிண கடு தஞ் இணைக்கப்படவேண்டும்.
6. உலோக மேற்பரப்பில் நாம் தொடும்போது - அதாவது, உபகரணத்தில் தொடும்போது எமக்கு மின்னதிர்ச்சி ஏற்பட முன்னரே (தடக்கு ஆளியும், மின்சுற்றும் Earth இணைப்பு சரியாக இருக்கும் பட்சத்தில்) வீட்டு மின்சாரம் துண்டிக்கப்படும்.
7. Plugகளில் வயர்களை செருகிப் பாவிப் பதை கண்டிப்பாகத் தவிர்க்கவேண்டும். சரியான Plug Top களை இணைத்து பாவிக் கவேண்டும்.
8. 3 கடிண Topகள் கண்டிப்பாக பாவிக்க வேண்டிய உபகரணங்களும் அவற்றின் அட்ணீ அளவுகளும் கீழ்வருமாறு இருத்தல் சிறந்தது.

| | |
|---|---|
| Computer | - 13 Amp 3 Pin |
| Iron Box | - 5 A 3 Pin |
| Electrical Kettle | - 15 A or 5 A Pin |
| Electrical Cooker | - 15 A 3 Pin |
| Washing Machine | - 15 A 3 Pin |
| Refrigerator | - 5 A 3 Pin |
| Fan | - 5 A 3 Pin |
| Emerction Heater (நீர் சூடாக்கி) | - 5 A or 15 A 3 Pin |
| Induction Coolker (தூண்டல் மின்அடுப்பு) | - 15 A 3 Pin |
| Grinder, Mixer | - 5 A 3 Pin |
| Barthroom Water Heater | - 15A 3Pin |

குறிப்பு - அடுத்த இதழில் இருந்து ஒவ்வொரு உபகரணத்தையும் எவ்வாறு சிக்கனமாகப் பயன்படுத்தலாம் எனப் பார்ப்போம்.

வாசகர்களால் கேட்கப்படும் கேள்விக ளுக்கும் பதில் தரப்படும்.

(தொடரும்)

தொழிநுட்பவியலாளர்- சுரேந்திரன் -யாழ்.



# புதிய கண்டுபிடிப்பு


என்சளிட்டா

## நீங்களும் சாதிக்கலாம் இது ஒரு முன்னுதாரணம்

மட்டக்களப்பு - சிசிலியா பெண்கள் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவி ஒருவர் அதிகளவான எலிகளைப் பிடிக்கும் இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்.

என்சளிட்டா என்ற இந்த மாணவி குறித்த இயந்திரத்தைக் கண்டுபிடித்துள்ளதுடன் இதன் மூலம் அதிகளவான எலிகளைப் பிடிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார் .

இது, வீட்டில் உள்ள பாவனைக்கு உதவாத கழிவுப் பொருட்கள் மூலமே தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கண்காட்சியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற இந்த இயந்திரமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற கண்காட்சியில் முதலாம் இடத்தைப் பெற்றது.

**இம் மாணவிக்கு வழிகாட்டி வெற்றிக்கு வித்திட்ட பாடசாலைச் சமூகத்திற்கு ஒளிஅரசியின் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.**

பங்குனி மாத ஒளிஅரசியின் முகப்பை அலங்கரித்து, சாதனை மாணவி நேர்காணல் பகுதியிலும் இணைந்த சாதனை மாணவியான மோகனதாஸ் யுவலக்ஷி மற்றும் பிரபாகர் நிவேதனா குழநடனத்தில் வெற்றியீட்டிய ஏனைய மாணவிகள் அனைவரையும் கௌரவித்து பாராட்டும் நிகழ்வு 21.03.2016 திங்கட் கிழமை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஒளிஅரசியின் நிர்வாக இயக்குநர் திருமதி யசோதை சரவணபவன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இவர் இப்பாடசாலையின் பழைய மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் அதிபர் திருமதி விமலநாதன், ஒளிஅரசி நிர்வாக இயக்குநர், ஒளிஅரசி உதவி ஆசிரியர் ஆகியோர் வெற்றியீட்டிய மாணவிகளுடன்....





சென்றமாத ஒளிஅரசியில் கலாபூனிருதுபெற்று பாராட்டப்பட்ட செல்லையா குஞ்சிதபாதம் என்ற இவரது பெயர் வே.செல்லையா எனத் தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுவிட்டது. இத்தவறுக்கு வருந்துகின்றோம்.

**செல்லையா . குஞ்சிதபாதம் (நாடகம்)**

ஆசிரியர்



# சமுதாயத்தின் பார்வை பெண்களை கட்டி வைத்து விடுகின்றது

பெண்களின் ஆளுமைகள் ஆற்றல்கள் இன்று அளவுக ணக்கின்றிப் பெருகிக்கொண்டே செல்கின்றன. சகல துறை களிலும் பெண்களின் எழுச்சியானது பேசப்படும் ஒன்றா கக் காணப்படுகின்றது. விஞ்ஞானத்துறை, பொறியியல் துறை போன்றவற்றில் கூட பெண்கள் உயர் பதவிகளை வகிப்பது பெருமைக்கும் பாராட்டிற்கும் எடுத்துக்காட் டிற்கும் உரிய விடயமாகும். அந்த வகையில் வவுனியா மாவட்டத்தின் பிரதம பொறியியலாளர்களில் ஒருவரான **மைதிலி தயாபரன்** ஒளிஅரசியின் இம் மாத நட்சத்திர இல்லத்தரசி பகுதியை அலங்கரிகின்றார். சிறந்த சமூகசேவை ஆர்வலரும் பெண் நல விரும்பியுமான இவர் பொறியியலாளர் என்பது மட்டுமன்றி கவிஞர், நாவ லாசிரியர் எனப் பன்முகங்கொண்ட படைப்பாளியுமாவார். அவர் ஒளி அரசி பகிர்ந்துகொண்ட கருத்துக்கள் வாசகர் களாகிய உங்களுக்காக...

**உங்களைப் பற்றி, உங்கள் குடும்பம் பற்றி எம் மோடு பகிர்ந்து கொள்ள முடியுமா?**

நான் இந்த வவுனியா மாவட்டத்தில் பிறந்து வளர்ந் தேன். என் அன்னை ஒரு பாடசாலையின் அதிபராக இருந் தார். தந்தை மலேரியாத் தடை இயக்கத்தில் வெளிக்கள உதவியாளராக இருந்தார். இருவரும் வெகு காலத்திற்கு முன்னால் அமரத்துவம் அடைந்துவிட்டனர். அண்ணா, தங்கை தம்பி என சகோதரர்கள். கணவர் ஒரு சட்டத்த ரணி. ஆணும் பெண்ணுமாக இரு குழந்தைகள் இருக் கின்றார்கள்.

**நீங்கள் தொழில் புரியும் துறை பற்றி..**

தொழில் ரீதியாக, இலங்கை மின்சார சபையின் பிரதம பொறியியலாளர்களில் ஒருவர் நான். அறிவு தெரிந்த காலம் முதலாக எமது பாடசாலையின் சின்னமாகிய உலகிற்கு ஒளியாக என்னும் வாக்கை நினைவுபடுத்தியதாலோ என்னவோ, அனைத்து துன்பங் களுக்கும் தீர்வாகும் ஒளியை வழங்குதல் என்ற துறை யில் ஆர்வமாக இணைந்து கொள்ள முடிந்தது. தற்போது வவுனியா பிரதேசத்தின் பிரதம பொறியியலாளராகவும், வடக்கின் வசந்தம் என்ற செயற்றிட்டத்தின் திட்ட முகா மையாளராகவும் பணியாற்றிக் கொண்டு வருகின்றேன். படைத்தல், காத்தல் என இருவகைப் பரிமாணம் உயிர் களுக்கு இருப்பதைப் போல மின் மார்க்கக் கட்டுமானப் பணியிலும் அதே சமயம், பிரதேச மின்பொறியியலாள ராக பராமரிப்புப் பணியிலும் ஈடுபட்டுக் கொண்டிருக் கின்றேன்.

**உங்களது இலக்கிப் பயணம் பற்றி.**

பாடசாலையில் மேற்பிரிவிற் படித்துக்கொண்டிருந்த காலத்தில் இருந்தே, கட்டுரை, கவிதை, பேச்சு, நாடகம், குழுப்பாடல் என்பவற்றில் பங்குபற்றும் வாய்ப்புக் கிடைத்தது. பாடசாலை மட்டத்தில் மட்டுமல்லாமல் கோட்ட, மாவட்ட, மாகாண மட்டப் போட்டிகளிலும் பங்குபற்றி பரிசில்களைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத் தைப் பெற்றிருந்தேன். 1992இல் அகில இலங்கை ரீதியாக புராண நாடகத்தில், முதலாம் இடத்தை எனது பாடசாலை பெற்றிருந்தது. குரு தட்சணை என்ற அந்த நாடகத்தில் குரு துரோணர் வேடத்தில் நான் நடித்திருந்தேன். தொழில் மற்றும் குடும்பம் காரணமாக, எழுத்துத்துறையில் பெரியதொரு இடைவெளியை எடுத்துவிட்டு 2014 இல் 3 புத்தகங்களையும், 2015 இல் 4 புத்தகங்க ளையும் வெளியிட்டேன்.

**இன்றைய இளைஞர்கள் அதிகமாகப் பொறி யியல் துறையைத் தெரிவு செய்கின்றனர். இவர்களுக்குப் பொறியியற் துறை பற்றி நீங்கள் கூறுவது?**

படிக்கும் காலத்தில் பார்வையிற்படும் அனைத் தையும் எடுத்துக் கொள்ளவேண்டும். வேலை செய்யும்போது அதைக் கவனமாகப் பிரயோகித்துக் கொள்ளவேண்டும். இதைத்தான் ஒரு பொறியிய லாளரிடம் சமுதாயம் எதிர்பார்ப்பது. ஒரு பொறி யியலாளனுடைய வருகையை சமுதாயம் மிகவும் அவதானத்துடன் வரவேற்கும் என்பதில் ஐயம் கொள்வதற்கில்லை.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் கல் வியில் உயர் நிலையை அடைவதற்கு கடுமையான போட்டிப் பரீட்சையைக் கடந்து செல்ல வேண்டி யதாயிருக்கின்றது. இது அனைத்து கல்விமான்க ளுக்கும் உள்ள பொதுவான நியதியே. ஆனால் அவ் வாறு பிரயாசைப்பட்டு கல்வியைப் பெற்றவர்கள் உயர் நிலைக்கு வந்தபின்னர் பொது நலம் பற்றிய சிந்தனைகளைக் குறைத்துக் கொள்கின்றனர். அவர் களை மட்டும் குறை சொல்வதற்கில்லை. இது எமது கல்வி முறையிலுள்ள குறைபாடு என்றுதான் தோன்று கின்றது. சமுதாயத்தில் உயர்நிலையில் உள்ளவர்கள் சமுதாயத்தைப் பற்றி யோசிக்காதுவிட்டால் மற்றவர் கள் நினைப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாதே.

இது பொதுவாகவே காணப்பட்டாலும் பொறி யியல் பீடத்தைத் தெரிவு செய்பவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது அவர்களுக்கு பொது நோக்கு, சமுதாய நோக்கு அமைதல் வேண்டும்.

சமுதாயத்துக்குப் பயன்படாத தொழில், எம் அன்னையை அயலாரை வாழ வைத்திடாத கல்வி எம்மிடம் இருந்து எந்தப் பயனையும் தந்துவிடப் போவதில்லை.

**இதுவரை நீங்கள் வெளியிட்ட படைப்புகளைப் பற்றி அறியத்தருவீர்களா?**

2014 செப்ரம்பர் 21 ஆம் திகதி இரு நாவல்களை ஒரே நாளில் வெளியிட்டேன். வாழும் காலம் யாவிலும் என்ற என்னுடைய முதலாவது நாவல் கதை வடிவிற் பல விடயங்களைப் புகுத்த முனைந்து.

அடுத்து, வாழ்க்கையில் நித்தியமானதும் நிரந்தரமானதுமாவது துன்பம். தொடர்ந்து துன்பத்தை அனுபவிப்பவன் அதிலிருந்து விடுபடுவதற்கு வழி யாது என்பதை யோசித்தேன். ஒன்றில் இருந்து மற்றயதற்கு தீர்வை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று என்னுடைய அனுபவ அறிவு சொல்லியது. இதனால் சொந்தங்களை வாழ்த்தி என்ற அடுத்த நாவலையும் வெளியிட்டேன்.

மூன்றாவதாக விஞ்சிடுமோ விஞ்ஞானம்! என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட்டேன். மனிதனுடைய வாழ்வைமேலும்வேகமாக்கியவிஞ்ஞானமும்தொழில் நுட்பமும் மனிதத்தைப் பேணுவது சாத்தியமா? மரணத்தை வென்றுவிட முடியுமா?. மனித குலத்தின் உயரிய விழுமியங்களை உறுதிப்படுத்துமா? என்ற பல்வேறு வினாக்களைக் கேட்டு அவற்றுக்குப் பதிலளிப்பதுபோல அந்தப் புத்தகத்தை உருவாக்கினேன்.

அடுத்து, 2015 இல், வட பகுதியில் பல காரணங்களுக்காகவும் அநாதையாக்கப்பட்டவர்களின் எதிர்காலத்தைச் சிந்திப்பதாக அநாதை எனப்படுவோன் என்ற நாவலையும், சீதைக்கோர் இராமன் தவறுகள் தொடர்கின்றன என்ற இரு கவிதை நூல்களையும், மின்சக்தி சேமிப்பை செயற்படுத்தும் முகமாக வீடுகளில் மின்சக்தி விரயமாதலைக் குறைப்போம் என்ற புத்தகத்தையும் ஒரே நாளில் வெளியிட்டேன்.

**பொதுவாக, பல சிறுகதைகள் எழுதிய பின்னரே நாவல் வெளியிட முடியும் என்பது வழமை. ஆனால் நீங்கள் ஆரம்பமே நாவல் வெளியீடு செய்துள்ளீர்கள். இது பற்றி?**

சிறுகதைத் தொகுதியாக வெளியிடவில்லை. சிறுகதைகள் பல எழுதிப் பரிசு பெற்றிருக்கின்றேன். ஆதலால் நாவலை வெளியிடத் தீர்மானித்தேன். சந்தர்ப்பம் அமையும்போது என்னிடம் உள்ள சிறுகதைகளை தொகுப்பாக்குவேன்.

**ஒரே பொழுதில் நான்கு தொகுப்பு வெளியிட்டு அசத்தியுள்ளீர்கள். இதன் அனுகூல பிரதிகூலங்கள் பற்றி**

வழமையாக எழுத்துக்களுக்குக் கிடைக்கும் அதே மதிப்பு கிடைத்தது. குறிப்பிட்டுச் சொல்லுவதாயின் எழுத்துலகில் ஒரு திடீர் கண்ணோட்டத்தைக் கொண்டு வந்தது.

**உயர்ந்த பதவியில் இருந்து கொண்டு குடும்பப் பொறுப்புடன் எவ்வாறு இப்படி துரித வெளியீடுகள் வெளியிடுகின்றீர்கள்?**

எல்லோருக்குமே கடவுள் கொடுத்திருப்பது நாளில் 24 மணி நேரத்தைத்தான். எந்த ஒரு விடயத்திற்கும் நான் நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பதில்லை. கிடைக்கும் நேரத்தினை ஓரளவு பயன்படுத்திக் கொண்டு ஏற்கெனவே எழுதியிருந்த ஒரு சிலவற்றை அச்சிலேற்றினேன்.

ஆனால் எஞ்சியுள்ளவை வெளியிடப்படுவதற்கு எவ்வாறு நேரம் கைகொடுக்கும் என்பதை என்னால் இன்று சிந்திக்;க முடியவில்லை. காலம் பதில் சொல்லும் என்று எதிர்பார்க்கின்றேன்.

**தொடரும் பெண் குழந்தைகள் மீதான வன்புணர்வுகள் குறித்த உங்கள் கருத்து?**

செய்யவேண்டியதை செய்ய வேண்டிய நேரத்தில் செய்யாதிருப்பதும் தவறுதான். ஒரு செயல் சமுதாயத்தைத் தாக்கும்போது, அதுவும் பெண்கள், குழந்தைகள் மீதான வன்முறைகள் அதிகரிக்கும்போது அந்த சமுதாயத்தைத் தாங்கிக் கொள்ளும் அத்தனை பேரையும் தண்டித்தாக வேண்டும் என்ற வெறி இயல்பாகவே எழுகின்றது.

அது மட்டுமல்ல. தெளிவாகத் தெரிவதற்கெல்லாம் அநாவசிய சாட்சியங்களும் அடுத்தடுத்த தவணைகளும் எதற்காக என்று சிந்திக்க வைக்கின்றது. ஆனாலும் அவலங்களைப் பார்த்துக் கொள்ளவேண்டிய நிலைமை வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படும்போது, பேனாவாலும் பேச்சாலும் கிழித்துவிட எண்ணம் தோன்றுகின்றது. அதையும் சமுதாயத்தின் பார்வை கட்டி வைத்து விடுகின்றது.

**கலாசார மாற்றம் பற்றி இன்றைய இளைஞர் யுவதிகளுக்கு நீங்கள் கூறும் அறிவுரை எது?**

கலாசாரம் என்பது நாம் உணரும், சிந்திக்கும் செயற்படுத்தும் அனைத்தின் வடிவம். தனிமனிதனின் வாழ்வுக்குக் கலாசாரம் ஒரு தடையாக அமைந்துவிடக் கூடாது. அது பல பிரச்சினைகளையும் தடுக்க வேண்டிய வடிகாலாக திகழவேண்டும்.

மேலைத்தேயவனின் கலாசாரப் பாணியைப் பின்பற்றியமை எமது பிரச்சினைகளுக்குக் காரணம் எனப் பலர் சொல்லிச் செல்கின்றனர்.

அதனால் இளைஞர், யுவதிகளை கட்டுப்படுத்த வென பல பாரம்பரியங்களை வலியுறுத்த நினைக்கின்றனர். ஆனால் அவற்றால் மட்டுமே எமது மொழியின் இருப்பினை நிலைக்க வைத்துவிட முடியாது என்பதை கடந்த காலம் எமக்குக் காட்டிவிட்டுச் சென்றுவிட்டது.

முடிவாக, அனைத்தினையும் தெரிந்து கொள்வோம். ஆழமாக சிந்திப்போம். அருமையானதை அமைத்துக் கொள்வோம். ஏனெனில் எமது வாழ்வு எமது கைகளில்.

**ஒளி அரசி என்னும் எமது சஞ்சிகை பற்றிய கருத்தை எமது வாசகர்களுடன் பகிருங்கள்?**

ஒளி தருபவள் பெண் என்பதா? அன்றேல் அரசியாகத் திகழ்வதால் ஒளி என்பதா?

அதிக தேடல். அமைதியான நடை. ஆழமான பார்வை. நேர்மையான அணுகுமுறை. மகிழ்ச்சிதரும் சொற் பிரயோகம். மறைமுகமாக அறிவுரைகள். பரந்துபட்ட விடயக் கலப்பு. இவற்றுடன்.. அனைத்தும் அடக்கம்.

நேர்காணல் - கோபிகை

## 'ஒளிஅரசி' குறுக்கெழுத்துப் போட்டி இல. 28

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | 3 | | | 4 |
| 5 | | | 6 | | 7 | | | |
| 8 | | | | 9 | | 10 | | |
| | 11 | | | | | | | |
| 12 | | | 13 | | 14 | | 15 | |
| 16 | | | | 17 | | 18 | | 19 |
| | | 20 | | | | | | |
| | | | | | | | | |
| | 21 | | | | 22 | | | |

## போட்டி முடிவு திகதி 20.04.2016

**இடமிருந்து வலம்**

1. நகைச்சுவையாய் கவி புனைபவன்
2. கவிஞனின் எதிர்ப்பால்
5. உறவு என்பதை இப்படியும் கூறுவார்(திரும்பியுள்ளது)
6. உலகம்
7. கள்வன்
8. கடவுளுக்குப் படைப்பது
9. கல்லிலே வடிப்பது
10. பிருத்விராஜ் ஜெனிலியா நடித்த படம்
11. இலட்சணம் என்பதன் எதிர்ப்பதம்
12. காட்டில் வாழும் மிருகம் ஒன்று
13. தழும்பு
15. குழப்பு
16. இதை பூட்டி வைப்பதே பாதுகாப்பு
21. தன்மைப்பன்மைச் சொல்
22. பகை

**மேலிருந்து கீழ்**

1. ஒன்றைப் போல இன்னொன்று
3. உயிர் காக்கும் உன்னதப் பணி செய்பவர்
4. விட்டு விட்டு ஒளிரும் ஆனால்; மின்குமிழ் அல்ல
6. சிற்பக் கலையில் சிறந்து விளங்கியவர்
9. குருவி வகையில் ஒன்று
10. இதனை ஆரோக்கியமாக உண்ண வேண்டும்
11. யாருமற்ற ஒரு நிலை
13. ஒரு எண்ணை அதே எண்ணால் பெருக்குவது
14. பாண்டவ கௌரவ சேவையின் உபாத்தியாயன்
15. மதுரையை எரித்த பெண்
16. நாரதர் இதற்கு உதாரணம்
17. தாமரை குவிந்துள்ள இடம்
18. பறவையின் சுமையை தாங்குவது
19. மூலதனம் அல்லது சேமிப்பு
20. அகம் என்பதன் எதிர்

37ஆம் பக்கத்தில் உள்ள கூப்பனைப் பயன்படுத்துக.

### இல. 27 இல் ரூ. 250/= பரிசு பெறும் அதிஷ்டசாலிகள்

**1 ஆம் இடம்**

அமுதா கிருபாகரன்
நாச்சிமார் கோயிலடி

**2ஆம் இடம்**

சந்திர லீலா நாகராசா
பருத்தித்துறை வீதி
யாழ்ப்பாணம்.

**3ஆம் இடம்**

ம. டில்லிமலர்
கிளிநொச்சி

### 'ஒளிஅரசி' குறுக்கெழுத்துப் போட்டி இல. 27

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தே | 2 வ | ர் | 3 ம | 4 க | ன் | ன | ட | ம் |
| ன் | ள் | 5 ப | ரு | ப் | 6 பு | னி | 7 த | ம் |
| 8 வி | ள | 9 க | தா | ப | த் | 10 க | ரு | மை |
| க | ல் | ல் | ணி | ம் | 11 த | ண் | ம | தி |
| ட | 12 வி | யா | 13 தி | ணை | 14 க | ண | ன் | ண் |
| 15 க | ண் | ண | த் | வி | ம் | 17 தா | ம | 19 ரை |
| வி | ண | ம் | தி | 18 சா | க | ச | ம் | ஏ |
| ஞ | 20 க | ரை | ப் | ல | 21 சி | ன் | ன | ம் |
| ன் | 23 ம் | ல | பு | ம் | 24 இ | ய | லா | மை |


அனுசரணை :

Be Es En Traders

அச்சக பொருட்களின்
மொத்த விற்பனையாளர்

+94 11 2348418

# தமிழ் வருடங்களின் வரலாறு



தற்போது தமிழ் ஆண்டுகள் என வழங்கப்படும் கால அட்டவணை முறை அறுபதாண்டு வட்டம் ஒன்றைக் கொண்டுள்ளது. இது பிரபவ ஆண்டில் தொடங்கி அட்சய ஆண்டில் நிறைவுபெற மீண்டும் அடுத்த பிரபவ ஆண்டு சுழற்சியாகத் தொடங்குகிறது. வானியல் விஞ்ஞானத்தை ஆதாரமாகக் கொண்டு மிகவும் கச்சிதமாகக் கணித்து வரையறுக்கப்பட்டவை. இவ் வருடமாகிய துர்முகி வருடம் தமிழ் ஆண்டுகளின் வரிசையில் 30 ஆவது ஆண்டாகும்.

ஒவ்வொரு தமிழ் வருடமும் எமது பார்வையில் சூரியன் பன்னிரு ராசிகளில் சஞ்சரிக்கும் கால அளவாகும். சூரியன் முதலாவது இராசியான மேட இராசியில் பிரவேசிப்பது புது வருடப்பிறப்பாகும். இவ்வாறு ஒவ்வொரு பன்னிரு இராசிகளிலும் ஒன்றன் பின் ஒன்றாக சூரியன் பிரவேசிக்கும் காலம் பன்னிரு தமிழ் மாதப்பிறப்பு. 365 நாட்களைக் கொண்ட இந்த ஆங்கில வருடக்கணக்கின்படி, வானியல் விஞ்ஞானரீதியாக உள்ள 365 நாட்கள் 6 மணித்தியாலங்கள் 43 விநாடிகள் கொண்ட வானியல் வருடத்தில் ஒவ்வொரு ஆண்டும் மேலதிகமாக 6 மணித்தியாலங்கள் மிகுதியாகும். இந்த ஆறு மணித்தியாலங்களை நான்கு ஆண்டுகளுக்குச் சேரவிட்டுவிடுவதால் நான்காம் ஆண்டில் ஒரு முழு நாளாகின்றது. இதை பெப்ரவரி மாதத்தில் ஒரு மேலதிக நாளாக இணைத்து விடுவார்கள். சாதாரணமாக 28 நாட்களை மட்டுமே கொண்ட பெப்ரவரி மாதம் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை 29 நாட்களைக் கொண்டிருக்கும். இதுவே லீப் வருடம் எனப்படுகின்றது.

இப்படியாக 365 நாட்கள் 6 மணித்தியாலங்கள் சரி செய்யப்பட்டாலும் இன்னமும் 11 நிமிடங்கள் 48 வினாடிகள் மிகுதியாக உள்ளன. அவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு நூற்றாண்டுக்கு ஒரு நாளைக்கூடுதலாகச் சேர்த்து சரிசெய்யப்படும் . இப்படிச் செய்யும் போது சற்று அதிகமாக ஆகிவிடுகின்றது. இதற்காக நானூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு நாளை நழுவவிட்டு விடுவார்கள். இவ்வாறு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு நாளையும் ஒவ்வொரு நூற்றாண்டுக்கு ஒரு நாளையும் கூட்டி நானூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு நாளையும் கழிப்பதனால்தான் நமது தமிழ் மாதப்பிறப்புடன் கூடிய தைப்பொங்கல் சித்திரை வருடப்பிறப்பு என்பன 13, 14, 15, 16 ம் ஆங்கிலத் திகதிகளில் மாறி மாறி வருகின்றன.


புதுவருடத்தில் செய்யப்பெறும் அனைத்துச் செயல்களும் காலமறிந்து சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பதற்காக அன்றைய தினத்தில் நாம் அனைவரும் பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டதன் பிரகாரமே செய்கின்றோம். நாம் செய்யும் செயல்கள் அனைத்தும் அந்த வருடம் முழுவதும் எமது வாழ்க்கையை வளப்படுத்தும் என்பது இந்துக்களின் ஐதீகம்.

## புதுவருட தினத்தில் செய்ய வேண்டியவை

புதுவருட தினத்தில் தான தருமங்கள் செய்வது வழக்கம். ஏழைகளுக்கும், உறவினர்களுக்கும் புதிய விசிறிகளைத் தானம் செய்ய வேண்டும். சித்திரை பிறப்பதற்கு முந்தைய நாள் இரவு சாப்பாடு முடிந்தபிறகு பூஜை அறையை தூய்மை செய்து கோலமிட்டு வைத்துவிட வேண்டும். வீட்டிலுள்ள பொன், வெள்ளி நகைகள், உட்பட அனைத்து ஆபரணங்களையும் பணம், நிலைக்கண்ணாடி, வெற்றிலை, பாக்கு, பழங்கள், தேங்காய், மலர்கள் முதலிய மங்கலப் பொருள்களையும் தயாரித்து, ஒரு மனையின் மீது இட்டு அதற்கு அழகியகோலமிட்டு, பூஜைக்குரிய தெய்வத்தின் முன் வைக்க வேண்டும்.

அரிசி, பருப்பு, வெல்லம், பலா, மாம்பழம், வாழைப்பழம் ஆகியவற்றையும் வைத்து மறுநாள் காலை, சித்திரை மாதப்பிறப்பன்று அதிகாலையில் முதன் முதலாக வீட்டில் மூத்த பெண்மணி எழுந்து குளித்து புத்தாடை உடுத்தி இறைவன் முன்பு குத்துவிளக்குகளையும், ஊதுவத்திகளையும் ஏற்றி வைப்பார். அதற்குப் பின்பு, அவர் வீட்டில் தூங்கும் ஒவ்வொருவரையும் எழுப்பி, கண்களை மூடிய நிலையிலேயே சுவாமியின் முன்பு அழைத்துச் சென்று, கண்களைத் திறக்கச் சொல்லி பூஜைக்குரிய தெய்வத்தையும், பூஜைக்கு வைத்துள்ள மங்கலப் பொருட்களையும் முதன் முதலாக தரிசிக்கும்படி செய்வார். இவ்வாறு செய்தால் வருடம் முழுவதும் மகிழ்ச்சி பொங்கும் எனவும் மங்கலப் பொருட்கள் செழித்து இருக்கும் என்பதும் நம்பிக்கை.

திருமதி அனுராதா சிவராம்



# அலுவலகத்தில் பெண்கள்- அழகான நடைமுறைகள்

இன்றைய சூழலில் ஆணும் பெண்ணும் சேர்ந்து வேலை செய்வது என்பது தவிர்க்க இயலாதது. இப்படிப்பட்ட சூழலில் சக ஆண் பெண் ஊழியர்களிடமிருந்து பிரச்சினைகள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமெனின் நாம் அவர்களிடம் நடந்து கொள்ளும் முறையிலும், பழகும் விதத்திலும்தான் அமைந்துள்ளது

உங்களின் பொருளாதார நிலையை உடன் பணிபுரிபவரிடம் கூறாதீர்கள். கேட்கும் போது உங்களிடம் அக்கறை உள்ளவர்கள் போல் கேட்பார்கள் பின் அதனை வைத்தே உங்களை எடைபோடும் தன்மை காணப்படும்.சில பெண்கள் நாகரீகமாகத் தென்பட வேண்டும் என்பதற்காக நாகரீகமாக உடை அணிவார்கள். அலுவலகத்திற்கு என்று சில வரைமுறைகள் எமது கலாச்சாரத்தில் உள்ளது. அதனை அனுசரித்தே எம் ஆடைகள் அமையவேண்டும். உடன் பணிபுரியும் ஆண் விமர்சிக்கும் அளவிற்கு உடையணியாதீர்கள். ஆடைகள் விடயத்தில் எந்த இடத்திற்குச் செல்லும்போது எப்படியான ஆடையை அணிய வேண்டும் எனத் தெரிந்து அணிந்துகொள்ள வேண்டும்.

சில அலுவலகங்களுக்குச்செல்லும் போது பெண்கள்சிலர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், திரைப்படங்கள், ஆடை அணிகலன்கள் என்பன பற்றி வேலை செய்யும் பெண்களுடன் ஒன்றுகூடி விமர்சனம் செய்வார்கள், இதனால் உங்களுக்கு மட்டுமல்ல அலுவலகத்திற்கும் இழுக்காகும். அலுவலகம் என்பது பணிபுரிய மட்டுமே. உங்களது தனிபட்ட விருப்பங்களுக்கும் குடும்ப பிரச்சினைகளுக்கும் ஏற்ற இடம் அது அல்ல என்பதை நீங்கள் முதலில் உணரவேண்டும்.

பெண்களே! குடும்ப விடயங்களுக்கு உடன் வேலை பார்க்கும் ஆண்களிடம் கருத்துக்களைக் கேட்காதீர்கள். முக்கியமாக உடன் வேலை பார்க்கும் ஆண்களிடம் நம்முடைய தனிப்பட்ட விடயங்களைப் பங்கு போடாதீர்கள். அங்கேதான் ஆரம்பிக்கிறது பல பிரச்சினைகள. உங்கள் திறமையைப் பாராட்டும்போது அதனை அதிக விமர்சனத்துடன் ஏற்றுக்கொள்ளாதீர்கள். அந்த விடயத்தை சிறிய நன்றியுடன் முடித்துக்கொள்ளுங்கள. உங்கள் ஆடை உருவத்தோற்றம் பற்றி ஆண்கள் பாராட்டுவதை சிறு எச்சரிக்கையுடன் தவிருங்கள் ஆபாசமான வார்த்தைகளில் உங்களிடம் உரையாட அல்லது பழக ஆரம்பிக்க இதுவே காரணமாகின்றது.

ஆண் நண்பர்களிடம் தவிர்க்க முடியாத சநதர்ப்பங்களில் கை குலுக்குவது தவறல்ல. அதற்காக எல்லாவற்றுக்கும் கைகொடுப்பது, தொட்டுப் பேசுவது கூடாது தேநீர் பருகுதல், வெளியிடங்களுக்குச் செல்லுதல், வாகனத்தில் செல்லுதல். இவையெல்லாம் இன்றைய சூழலுக்கு சாதாரணமாக இருந்தாலும் வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு உங்கள் மீது தவறான எண்ணத்தை உருவாக்கும் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்!. ஒரு ஆண், தன்னுடன் வேலை செய்யும் பெண்களை வேலை செய்யும் மற்ற ஆண் பணியாளர்களைப் போல எப்போது நினைக்கிறானோ அப்போதுதான் அவனோடு பணிபுரியும் பெண்கள் பாதுகாப்பாக இருப்பார்கள். அலுவலகத்தில் நட்பு ரீதியாகப் புன்னகைக்கலாம். குறிப்பாக, எந்தவொரு ஆணுடனும் இரகசியக் குரலில் பேசாதீர்கள். அலுவலகத்தில் சக பணியாளர்களுடன் பெரிய குரலில் பேசுதல், சிரித்தல் போன்றவற்றைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். இவை கேட்பவர்களுக்கும், பார்ப்பவர்களுக்கும் தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும்.

பெண்கள் தம் உடைகள் எதிரிலிருப்பவரின் உணர்வுகளைத் தூண்டாதவாறு உடுத்திக்கொள்ள வேண்டும். அதனால்தான் ஆள் பாதி ஆடைபாதி என்றார்கள். நாகரீகமாக உடுத்தினாலும்கூட, நேர்த்தியாக உடுத்துங்கள். பெண்கள் தனிப்பட்ட தொலைபேசி இலக்கங்களை நம்பிக்கைக்குரிய நபர்களா என இனங்கண்டு அதனை கொடுங்கள்.

சில நேரங்களில் உயர் அதிகாரிகளே தவறான எண்ணத்தில் கீழ் பணிபுரியும் பெண்களை அணுகுகின்றார்கள். அப் பிரச்சினைகள் தவிர்க்கும் வகையினை மிகக் கவனமாகக் கையாளுங்கள்.

உயர் அதிகாரிகளுக்கு ஒத்துழைக்கவில்லை என்றால் அவர்களின் பழிவாங்கும் சுபாவம் உங்கள் வேலைகளில் குறை கண்டுபிடிப்பதில் ஆரம்பிக்கும். அதனால் முடிந்தவரை உங்கள் வேலைகளில் தவறு நேராத வண்ணம் கவனமாக இருங்கள். உங்கள்நடை உடை பழக்கத்தில் நேர்தியுடன்காணப்படுவீர்களாயின் பார்பவர்களுக்கு உங்கள் மீதும் நீங்கள் செய்யும் தொழிலின் மீதும் நல்லதொரு அபிப்பிராயம் தானகவே தோன்றிவிடும்.

வெ.அபர்னா (நெல்லியடி)

## வலைபாயுதே



[யாழ்ப்பாணம் - ஜீவன்]

தெரியாததை தெரியாது என்று
ஒப்புக்கொள்பவன்.. புதிதாய்
ஒன்றைக் கற்றுக்கொள்கிறான்.
எல்லாம் தெரிந்தது போல் நடிப்பவன்
எல்லோர் முன்னிலையிலும் அவமானப்பட
தன்னைத் தயார்படுத்திக் கொள்கிறான்.

அப்பா... இந்த அம்மாவை
என்னால சமாளிக்க முடியல...



[கொழும்பு - சுஜா]

வீட்டுக்கு வரும்போது வேற
நல்ல அம்மா வாங்கிட்டு
வாங்கப்பா....

குனிந்த தலை நிமிராமல் இருக்கும் பெண்கள் அடக்கமானவர்கள் மட்டுமல்ல....
சிமாட் போன் வைத்திருக்கும் பெண்களாகக் கூட இருக்கலாம்..



[கல்முனை- மஹ்ர்வ்றா]

முதுகு கூனினாலும் மனம் கூனாத
பாட்டியை போற்றிப்
பாராட்டுவோம்.



[வவுனியா- வசந்]

அம்மா சீரியல் பாக்கிறா...
அப்பா வந்தா யாரு சோறு போடுறது?
அதுதான் நான் களத்தில இறங்கிட்டன்....
ஆ.... சுடுதே....



[ஹட்டன் - நிசாந்]

வாசகர்களே! உங்கள் Facebook பதிவுகளை oliarazi33@gmail.com என்ற E.mail இற்கு அல்லது Facebook இற்கு உங்கள் பெயர் முகவரியுடன் அனுப்பிவையுங்கள் அவற்றில் தரமானவை இந்த வலைப்பக்கத்தில் பிரசுரிக்கப்படும்.

உயர்தர கலைப்பிரிவு மாணவர்களுக்கும், பல்கலைக்கழக கலை முதல் தேர்வு மாணவர்களுக்கும், நேரடியாகப் பரீட்சைக்கு உதவக்கூடிய பாடம் சார்ந்த வினாக்களும் விடைகளும் 62,63,64 ஆம் பக்கங்களில் வெளிவந்துள்ளன.

கலைப்பிரிவு மாணவர்களே! எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர்தரப்பரீட்சையை கருத்தில் கொண்டு பல்வேறுபட்ட மாவட்டங்களைச் சேர்ந்த சிறப்புத்தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களிடம் இருந்து எதிர்பார்க்கை வினாக்களைப் பெற்று இப் பகுதியில் விடைகளுடன் பிரசுரித்து வருகின்றோம். தொடர்ந்து ஒளிஅரசியுடன் இணைந்திருந்து ஒளிஅரசியில் உள்ள அனைத்து ஆக்கங்களையும் வாசிப்பதன் மூலம் உங்கள் ஆளுமையை வளர்த்து பரீட்சையிலும் சிறந்த அடைவினைப் பெற்றுக்கொள்ள ஒளிஅரசியின் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

# தமிழ் / சமயம்

திருமதி. ஜெ.குகநேசன் (சிரேஷ்ட ஆசிரியர், கொழும்பு விவேகானந்தா கல்லூரி)

## 1. ஒல்லாந்தர் காலத்தில் இந்து சமய வளர்ச்சி எவ்வாறு காணப்பட்டது? விளக்குக.

கி. பி. 1658 - 1796 வரை 138 ஆண்டுகள் ஒல்லாந்தர் காலப்பகுதியாக இருந்தது. இலக்கியங்கள் சமயப் பிரசார வாகனமாக அமைந்துள்ளன. மதச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம் என்பவற்றால் இந்து மதப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. இக்காலத்தின் முன் ஆலயங்கள் அழிக்கப்பட்டமையால் இந்து மக்கள் சமயக் கருத்துகளையும், தத்துவக் கருத்துகளையும் தெரிந்துகொள்ளும் முகமாக இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. சமயப் பொதுமை பேணப்பட்டமை இக்காலத்தில் சிறப்பம்சமாகும்.

அந்தவகையில்,

### 1. புராணம் - சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம்.

### சிவராத்திரி புராணம்

சிவராத்திரி விரதத்தின் தோற்றம், நோற்கும் வகை, பலாபலன் அடைந்தவர் கதை கொண்டு காப்பு -1, கடவுள் வாழ்த்து - 20, பாயிரம் - 3, சுருக்கம் - 9, 691 பாடல் கொண்டு வரத பண்டிரதரால் பாடப்பட்டது.

### ஏகாதசி புராணம்

திருமால் விரதங்களுள் சிறந்தது. விரத நிர்ணயம், அனுஷ்டித்தோர் சரிதம், காப்பு - 1 சுருக்கம் - 3, 258 விருத்தப் பாடல் உடையது வரத பண்டிதர் பாடினார்.

### 2. கதை - பிள்ளையார் கதை

பிள்ளையார் பிறந்த வரலாறு அவன் கயமுகாசுரனை அழித்து மூஷிகத்தை வாகனமாக்கியதும் ஆவணிச் சதுர்த்தி விரதச் சிறப்பும், மார்கழி விநாயக சஷ்டி விரத மகிமை கூறுவது பிள்ளையார் கதை. அது அகவில் பாவினால் ஆக்கப்பட்டது.

### 3. காதல் - வெருகல் சித்திர வேலாயுதர் காதல்

சித்திரவேலாயுதர் சுவாமி மீது உலாவரும்போது காதல் கொண்டு பாடப்பட்டது. 421 கண்ணி, அருளியவர் தம்பலகாமம் வீரக்கோன் முதலியார் ஆவார்.

## 4. விளக்கநூல் - காசியாத்திரை விளக்கம்

மாதகல் மயில்வாகனம் புலவரால் இயற்றப்பட்டது.

## 5. அந்தாதி - கல்வளை

சண்டிலிப்பாயில் உள்ள கல்வளைப் பகுதியில் எழுந்தருளியுள்ள விநாயகர் மீது பாடப்பட்டது. நல்லூர் சின்னத்தம்பி புலவரால் பாடப்பட்டது. கட்டளை கலித்துறை யாப்பினால் ஆனது. 100 செய்யுள் உடையது.

மறைகசையந்தாதி - நல்லூர் சின்னத்தம்பி புலவரால் வேதராணியத்தில் உள்ள சிவன் மீது பாடியது.

புலியூர் அந்தாதி - சிதம்பரம் சிவனை போற்றிப் பாடியது. 100 கட்டளை கலித்துறைச் செய்யுள் யகக அந்தாதி.

## 6. பள்ளு - பறாளை விநாயகர் பள்ளு

சுழிபுரம் பறாளை என்னும் தலத்தில் எழுந்தருளிய விநாயகரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு சிந்து, விருத்தம், கலிப்பாகையில் 130 பாடல் கொண்டது. நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பாடினார்.

## 7. பதிகம் - இணுவில் சிவகாமி அம்மைப் பதிப்பகம்

இணுவைச் சின்னத்தம்பி புலவரால் பாடப்பட்டது. 12 சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தால் ஆன 10 செய்யுட்களை உடையது.

## 8. ஊஞ்சல் - வட்டுக்கோட்டை பத்திரகாளி அம்மை ஊஞ்சல்

பத்திரகாளி அம்மனுக்கு உரிய நிவேதனப் பொருட்களைப் பற்றிக் கூறுகிறது. எண்சீர்விருத்தப்பா 10 செய்யுள் - கணபதி ஐயரால் பாடப்பட்டது. இவ்வாறு ஒல்லாந்தர் கால இந்துசமய வளர்ச்சி மேம்பட்டுக் காணப்பட்டது.

# தமிழ்



முதன்மை தமிழ் ஆசிரியர் (பொத்துவில்) : எம்.ஏ.தாஜகான் B.A(Hon) PGDE (Merit) M.A.(Tamil) M.Ed.

## 01. சங்கமருவிய கால இலக்கியப்பண்புக்கும் பல்லவர் கால இலக்கியப்பண்புக்கும் இடையிலான ஒற்றுமை

- ★ சங்கமருவிய கால பக்தி பல்லவர் காலத்தில் பேரெழுச்சி பெறுகின்றன.
- ★ புராண இதிகாச கதைகள் பயன்படுத்தப்பட்டன.
- ★ சங்கமருவிய காலத்தில் அறிமுகமான விருத்தப்பா பல்லவர் காலத்தில் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன.
- ★ சங்கமருவிய காலத்தில் பயன்படுத்தப்பட்ட பதிக வடிவம் பல்லவர் காலத்தில் அதிகம் பயன்படுத்தப்பட்டன.
- ★ சங்கமருவிய காலத்தில் உரைநடை செய்யுள்கள், தொடர்நிலைச் செய்யுள்கள் பல்லவர் கால இலக்கியத்தில் காணக்கூடியதாகவுள்ளது.
- ★ சங்கமருவிய காலத்தில் தோன்றிய அகத்திணை மரபு பல்லவர் காலத்தில் பக்தி பாடல்களில் பேணப்பட்டமை.
- ★ சங்கமருவிய கால இறுதியில் தோன்றிய பக்தி இலக்கியம் பல்லவர் காலத்தில் விருட்சமாய் வளர்தல்.

## 02. சங்ககால பல்லவர்கால இலக்கியப் பண்புக்குமிடையலான வேறுபாடுகள்

| சங்ககாலம் | பல்லவர் காலம் |
|---|---|
| ★ இயற்கை நெறிக் காலம் என அழைப்பர். | ★ பக்தி நெறிக் காலம் என அழைப்பர். |
| ★ உலகியல் முக்கியத்துவம் பெற்றது. | ★ இறையியல் முக்கியத்துவம் பெற்றது. |
| ★ தலைவன், தலைவி காதல்கொள்ளும் வழக்கு காட்டப்பட்டுள்ளது. | ★ ஆன்மா, இறைவன் ஆகியோருக்கிடையிலான பக்தி கூறப்படுகின்றது. |
| ★ அரசனது வீரம், கொடை தோற்றப்பொழிவு கூறப்படுகின்றது. | ★ இறைவனின் அழகு, வீரம் அற்புதங்கள் பற்றி கூறப்படுகின்றது. |
| ★ காதலுக்குப் பின்னணியாக முதல், கரு, உரி காணப்படுதல். | ★ பக்திக்கு பின்னணியாக கோயிலைச் சூழ்ந்த இடம் காணப்படுதல். |
| ★ இயற்கை சூழல் கொண்டு பாடப்பட்டன. | ★ இயற்கை வர்ணனைகள் கொண்டு பாடப்பட்டன. |
| ★ தூயதமிழ்ச் சொல் பயன்படுத்தப்பட்டன. | ★ வடமொழிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டன. |
| ★ கற்றவருக்காக பாடப்பட்ட பாடல். | ★ தெய்வீக காதல் பற்றி கூறப்படுகின்றது. |
| ★ கற்றவர், கல்லாதார் ஆகியோருக்காக பாடப்பட்ட பாடல். | ★ நாயன்மார், ஆழ்வார்கள் முக்கியத்துவம் பெற்றனர். |
| ★ உலகியல் காதல் பற்றி கூறப்படுகின்றது. | ★ தொடர் நிலை செய்யுள்கள், பதிக முறையில் பாடப்பட்டிருத்தல். |
| ★ புலவர்கள் முக்கியத்துவம் பெற்றனர். | ★ பருவமடையாத ஆன்மாக்கள் பருவமடைந்த இறைவனை பற்றி பாடுதல். |
| ★ தனி நிலை செய்யுள்கள். | |
| ★ பெருந்திணை கைக்கொள்ளப்பட்டமை பருவமடைந்த ஆண், பருவமடைந்த பெண். | |

## 3. சங்கமருவிய கால, பல்லவர் கால இலக்கிய பண்புகளுக்கிடையிலான வேறுபாடுகள்.

| சங்கமருவிய காலம் | பல்லவர் காலம் |
|---|---|
| ★ அறம் பிரதான பாடு பொருள் ஆகும். | ★ பக்தி பிரதான பாடு பொருளாகும். |
| ★ வெண்பா யாப்பு பெருமளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. | ★ விருத்தப்பா யாப்பு பெருமளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. |
| ★ அகத்தினை மானுட காதல் காணப்பட்டது. | ★ அகத்திணை தெய்வீக காதல் காணப்பட்டது. |
| ★ அறிவுபூர்வமான செய்யுள். | ★ உணர்வுபூர்வமான செய்யுள். |
| ★ வடமொழிச் செல்வாக்கு காணப்பட்டது. | ★ அதிக புராண செல்வாக்கு காணப்பட்டது. |
| ★ தொடர்நிலைச் செய்யுள் காணப்பட்டது. | ★ பதிக அமைப்பு பெருவழக்காக காணப்படல். |

**44 ஆம் பக்க நகைச்சுவைக்கான விடை** எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போனதால் செத்துப் போகலாம் என்று தீர்மானித்து நஞ்சு வாங்கி வந்து சாராயத்துடன் கலந்து வைத்திருந்தேன். அதையும் நீ மண்டிவிட்டாய். நான் இந்த நேரத்தில் போய் எந்தக் கடையில் இன்னொரு போத்தல் நஞ்சை வாங்க முடியும்? என்று சொல்லிவிட்டு மீண்டும் அழுகையைத் தொடர்ந்தார் அந்த ஒல்லி ஆசாமி.



வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவன 8ஆவது அணி - வட்டுக்கோட்டை பயிலுநர் களின் ஆக்கக் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றபோது பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் மனைவி திருமதி சரவணபவனும் பயிற்சியை பூர்த்தி செய்த பயிலுநர்களுக்கு சான்றிதழை வழங்கி வைத்தனர். இதன் போது சான்றிதழ் பெற்ற பயிலுநர் அணியையும் உதய வாழ்வின் சமுகநோக்கம் கொண்ட ஆதரவாளர்களையும் படங்களில் காணலாம். இந் நிகழ்வில் இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் கௌரவ மாவை சேனாதிராஜா பிரதம விருந் தினராகக் கலந்து சிறப்பு சிறப்பித்தார்.













HOTEL PRINCESS ROSE
Hotel
Princess Rose
தரமான, சுவையான உணவுகள்
நியாயமான விலையில் எம்மிடம்.
Rooms
Restaurant
Wedding hall
Meeting hall
Kids playground
Open shawer
Phone : +94 24 2228000
Mobile : +94 77 3955551
Address : No.15, 4th Lane, Kurumankadu, Vavuniya, Srilanka.
Email : hotelprincessrose@aol.com
Facebook : Hotel Princess Rose - vavuniya srilanka

ஏப்ரல் 2016

OLIARAZI

மகளிர் மாத சஞ்சிகை

# ஒளி அரசி

இல்லத்தரசிகளின் தோழி

நல்லதொரு குடும்பம்

இதழ் 05
ஒளி 03

பக்கங்கள் : 84 (68 + VIII + VIII)

ரூபா 75

அன்பு + அறிவு + அழகு + திறன் + முயற்சி + வெற்றி + பொழுதுபோக்கு

இலங்கையிலிருந்து ஓர் அற்புதப்படைப்பு

கலைப்பிரிவின் பொக்கிஷம்
திருத்தற் சேவையுடன் தரம் 5 வினாத்தாள்

7 திறன் போட்டிகள்



மகிழ்வுதரும் சேவை



அரங்கமே அதிர்ந்த குட்டிக்கதை



நாயகிக்கு அகவை 54



வரலாற்றில் தடம்பதித்த அரங்கேற்றம்




என்ன தவம் செய்தாயோ!



அஹிம்சை நாயகி

ஆ/பெ ண் முந்தினால் வீரம் ???


PRO
DIGITAL PRINTING
All Your Printing Needs
high Quality printing service
Digital Offset Printing
Graphic Designing
Personalized Gifts
Plastic Identity Cards
Digital Banner
Large format Digital Printing
indoor & outdoor good quality banner printing for you
A 50/54, Jampettah Street, Colombo - 13.
T 0112 447 399
E prodigitalprinting@ymail.com

**மாதம் ஒரு முறை தேசிய ரீதியான திருத்தற் சேவையுடன் உங்கள் பிள்ளைகளின் (2016 ஒகஸ்ட்) பரீட்சைப் பெறுபேற்று அடைவினை அறிந்துகொள்வதற்கு ஒளியரசி வழங்கும் தனித்துவச் செயற்றிட்டம்.**

01. இவ் வினாத்தாளை நேரம் கணித்து சுயமாக எழுதச் செய்து எமது 4ஆம் பக்கத்தில் உள்ள கொழும்பு முகவரிக்கு அனுப்பினால் எமது பரீட்சைக் குழுவினரால் அவ் வினாத்தாள் திருத்தப்பட்டு புள்ளியிடப்பட்டு மீண்டும் உங்கள் முகவரிக்கு தபால் இடப்படும்.

02. ஒவ்வொரு மாதமும் 25ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தால் தேசிய ரீதியில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களின் பெயர் விபரங்கள் ஒளியரசி சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டும் உதயன், சுடர்ஒளியில் பாராட்டி வாழ்த்தப்படும்.

03. வகுப்பறையில் சாதாரணமாக உங்கள் பிள்ளைக்கு இருக்கும் போட்டியைவிட பரந்த மாணவர்களுக்கிடையிலான போட்டியாக இது அமையும். அத்துடன் முகமறியாத மூன்றாம் நபர் ஒருவர் திருத்தும் ஒரு நடுநிலையான புள்ளி மதிப்பீடாக இருக்கும்.

04. இவ் வினாத்தாள் வடமாகாணம், கிழக்கு மாகாணம், மலையகம், மேல்மாகாணம் ஆகிய பிரதேசங்களின் முன்னணி இளம் ஆசிரியர்களினால் புதிதாக ஒளியரசிக்காக தயாரிக்கப்பட்டதாகும். (37ஆம் பக்கத்தில் உள்ள போட்டிக்கான கூப்பனை பயன்படுத்துவது அவசியமாகும். அக் கூப்பனில் போட்டிக்கான தலைப்பு எனும் வெற்றிடத்தில் தரம் 5 பரீட்சைத் தொடர் என எழுதவும்.)

**தொடர்புகளுக்கு : - 0716850005 / 0714273035**

**குறிப்பு :** - (VII) ஆம் பக்கத்தில் உள்ள பொது அறிவு, விவேக போட்டியிலும் பங்கு பற்றி ஒரே தபாலில் பரிசிலை பெற முடியும். உங்கள் தம்பி, தங்கையரும் வர்ணம் தீட்டும் போட்டியிலும் பங்குபற்ற சந்தர்ப்பத்தைக் கொடுங்கள்.

**( I தொடக்கம் VIII வரை வந்துள்ள வினாத்தாளைப் பிரித்தெடுக்கவும் )**

நல்லதொரு குடும்பம்

# ஒளிஅரசி பரீட்சைத் தொடர் – 02

**தரம் 5**

**மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2016**

**வினாத்தாள் – I** **நேரம் : 45 நிமிடங்கள்**

முழுப்பெயர்: - ..........................................................................................

பாடசாலை: - ..........................................................................................

## புள்ளித்திட்டம்

| பக்க இலக்கம் | புள்ளிகள் |
|---|---|
| II | |
| III | |
| IV | |
| V | |
| VI | |

## மொத்தப்புள்ளிகள்

## உமக்குரிய அறிவுறுத்தல்

- ★ மேலுள்ள அடைப்பில் உமது பெயர், பாடசாலையின் பெயர் என்பவற்றை உரிய புள்ளிக்கோட்டில் எழுதுக.
- ★ எல்லா வினாக்களுக்குரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுத வேண்டும்.
- ★ அறிவுறுத்தல்களைப் பின்பற்றி விடைகள் எழுதப்பட வேண்டியது கட்டாயமானதாகும்.
- ★ நீலப்பேனாவை மாத்திரம் பயன்படுத்தி விடையினை எழுதவும்.
- ★ செய்கைக்கு வேறு தாளைப் பயன்படுத்தவும்

..............................
மேற்பார்வையாளர்

..............................
பொறுப்பாசிரியர்

தரம் 5


# விசேட மாதிரி வினாத்தாள் 2016

வினாத்தாள் I


நேரம் : 45 நிமிடங்கள்

★ **அனைத்து வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்கவும். 1ஆம் 2ஆம் வினாக்களில் மூன்று படங்களில் ஒன்று வேறுபடுகின்றது. அப் படத்தின் கீழ் கோடிடுக.**


01.



1.




2.




3.

02.



1.



2.




3.

03. பின்வருவனவற்றில் பூ ஒன்றுக்கு உவமானமாக அமையாதது,
1. பஞ்சுபோல மென்மையானது 2. இரத்தம்போல செம்மையானது
3. முதியவரின் உள்ளம் போன்றது

04. கம்பீரமான தோற்றத்திற்கு உகந்த உவமானம்.
1. பூனைபோல உஷாரானது 2. சிங்கம்போல வீரமானது
3. ஒட்டகம்போல உயரமானது

★ **தரப்பட்ட இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் உருவத் தைத் தெரிவு செய்க.**


05.




X



Y



1.



2.




3.

06.



A



B



1.



2.



3.


★ **தரப்பட்ட கவிதையைக் கொண்டு விடை எழுதுக.**

புன்னகை செய்யும்
பூக்கள் போதாது
புண்ணியம் செய்யும்
பூமி வேண்டும்

சிலையான கற்கள் போதாது
சுவையான கல்வி வேண்டும்
சுட்டெரிக்கும் சூரியன் போதாது
சுகமான நிலவு வேண்டும்


07. சுகமான நிலவு வேண்டும் என்பது.
1. நோய்நொடியற்ற நிலவுவேண்டும் 2. எமக்கு இன்பம் தரவல்ல நிலவுவேண்டும்
3. சூடான நிலவுவேண்டும்

08. கீழே நீர் உள்ள பாத்திரங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான உருவத்தைத் தெரிவு செய்க.




1. 2. 3. 4.

09. சமன்பாட்டை பார்த்து அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.




...........




1. 2. 3.

★ அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.

10.




...................




1. 2. 3.

11.




....................



1. 2. 3.

★ பின்வரும் எண்கோலத்தைப் பூரணப்படுத்துக.

12.





1. 4

2. 6

3. 12

13.





1. 8

2. 6

3. 12

★ **கீழே உள்ள படங்களைப் பார்த்து வினாக்களுக்கு விடை தருக.**



ரூ. 62/=　　ரூ. 74/=　　ரூ. 82/=

14. நான்கு அன்னாசிப் பழங்களினதும் 8 மாம்பழங்களினதும் விலை யாது?
 1. ரூ 248.00　　2. ரூ 296.00　　3. ரூ 328.00

15. ஒரு அன்னாசிப் பழத்தின் விலை யாது?
 1. ரூ 40.00　　2. ரூ 50.00　　3. ரூ 60.00

16. ஒரு மாம்பழத்தின் விலை யாது?
 1. ரூ 12.00　　2. ரூ 10.00　　3. ரூ 11.00

17. ஒரு அப்பிள்பழத்தின் விலை யாது?
 1. ரூ 20.00　　2. ரூ 18.00　　3. ரூ 22.00

★ **கீழே உள்ள தரவுகளைக் கொண்டு இதன் கீழ் உள்ள பிரசினங்களைத் தீருங்கள்.**


□ + □ = 12　　□ - △ = 4

□ + △ = ○

18. ○ இன் பெறுமானம் யாது?　　1. 8　　2. 4　　3. 6

19. □ + △ + ○ இவற்றின் பெறுமானம் யாது?　　1. 24　　2. 16　　3. 18


20. முதல் மூன்று மணிக்கூடுகளையும் பார்த்து நான்காவதாக வரக்கூடிய மணிக்கூடு யாது எனக் கூறுக.




..................

1.　　2.　　3.


21. ஒரு சதுரக்கடதாசியை நான்காக மடித்து படத்தில் உள்ளவாறு துளையிட்டபின் விரித்துப் பார்த்த போது எவ்வாறு காணப்படும் என்பதைத் தெரிவு செய்க.







1.　　2.　　3.

22. உருவில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.





1.　　2.　　3.


23. 


காணியைச் சுற்றி 2m இடைவெளிக்கொரு கம்பிக் கட்டை நடுவதாயின் மொத்தமாக எத்தனை கம்பிக் கட்டைகள் தேவை?

1. 10  2. 20  3. 24

24. நேற்றைக்கு முதல்நாள் புதன்கிழமை 19ஆம் திகதியாகும். நாளை மறுநாள் என்ன கிழமை?

1. ஞாயிறு  2. சனி  3. திங்கள்

25. 

கோலத்தில் அடுத்ததாக வரக்கூடிய புள்ளிகள் எத்தனை?

1. 15  2. 12  3. 16

26.


| | | |
|---|---|---|
| 5 | 6 | 7 |
| 4 | 1 | 8 |
| 3 | 2 | 9 |

| | | |
|---|---|---|
| 10 | 12 | 14 |
| 8 | 2 | 16 |
| 6 | 4 | 18 |

| | | |
|---|---|---|
| 15 | 18 | 21 |
| 12 | 3 | 24 |
| 9 | .... | 27 |


வெற்றிடத்தில் வரவேண்டிய பொருத்தமான இலக்கம் யாது?

1. 6  2. 10  3. 18

27. 


இவ்வுருவில் எத்தனை சதுரங்கள் காணப்படுகின்றன?

1. 7  2. 6  3. 8

28. 



இத் தாயக்கட்டையில் Z இற்கு எதிர்ப்பக்கம் உள்ள எழுத்து யாது?

1. R  2. S  3. Y

29. 


B தகரத்தைப் போன்று A தகரத்தில் எத்தனை வெட்டலாம்?

1. 20  2. 25  3. 15


30. 


B பாத்திரத்தைப் போல் எத்தனை மடங்கு A பாத்திரத்தில் பால் உள்ளது?


1. 4  2. 8  3. 10

31. வீதியின் நீளம் 50m அதில் 5m இடைவெளிக்கொரு மின்கம்பம் பொருத்துவதாயின் மொத்தமாக எத்தனை விளக்குகள் தேவை?


1. 9  2. 10  3. 11


32. 




இவ் வெற்றிடத்திற்கு வர வேண்டிய உரு,

1.   2.   3. 



33. A யில் உள்ள உருக்களை அவதானித்து B யில் இரு பக்கமும் சமனாக இருக்க வட்டத்திற்கு மேல் வைக்க வேண்டிய உரு யாது?










1.   2.   3. 

34. சரியான விடையின் கீழ் கோடிடுக.


 =  போல்  = ................

1.  2.  3. 

35.  புள்ளிக்கோடிடப்பட்ட பகுதியை வெட்டும் போது தோன்றும் வெட்டு முகம் யாது?


1. முக்கோணி 2. சதுரம் 3. செவ்வகம்


36. கீழே உருவில் உள்ளக விளையாட்டு, வெளியக விளையாட்டு, சதுரங்கம் ஆகிய மூன்றும் ஆங்கில எழுத்துகளால் குறிக்கப்பட்டுள்ளன. இதில் Q இனால் குறிக்கப்படுவது.






1. உள்ளக விளையாட்டு
2. சதுரங்கம்
3. வெளியக விளையாட்டு


37. இங்கு உள்ள சதுரமுகியை ஆக்க பயன்படுத்தப்பட்ட அட்டை எது?





1.


2.


3.

38.  இவ்வுருவில் நிறந்தீட்டப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது. இதில் ஒரு கட்டம் $1\ cm^2$


1. $4\ cm^2$ 2. $5\ cm^2$ 3. $6\ cm^2$


39. 



? இதற்குப் பொருத்தமான எண் யாது?


1. 3 2. 4 3. 2


40. இதைச் சேர்க்கும்போது வரக்கூடிய உரு யாது?




1.


2.


3.



ஒலிஅரசி

# பொது அறிவு விவேக போட்டித் தொடர் - 14


01. வாழ்நாளில் நீரே அருந்தாத மிருகம் எது?
02. வானளாவிய நகரம்?
03. திருக்குறளில் எந்த அதிகாரம் இரண்டு முறை வருகிறது?
04. சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் கடலுக்குள் கண்ணாடி மாளிகை அமைத்த நாடு?
05. இவ் வருடம் (2016) நடைபெற்ற T20 கிரிக்கெட் போட்டித் தொடரின் முதலாவது ஆட்டம் எந்த மைதானத்தில் இடம் பெற்றது?

**கீழ்வரும் உருக்களில் இலக்கங்கள் எழுதப்பட்டிருக்கும் போக்கினை அவதானித்து இடைவெளிக்குப் பொருத்தமான இலக்கத்தை உரிய இடத்தில் எழுதுக.**

06.


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | 8 | 7 | 14 | 6 | 8 | 13 | 4 | .......... |
| | 15 | | | 2 | | | 3 | |

07.




08. ஒரு குடும்பத்தில் நான்கு பேர் வசித்து வந்தனர். தாயின் வயதையும் அதன் 1/4 பங்கையும் கூட்டினால் தந்தையின் வயது வரும். தந்தையின் வயதில் இருந்து 15 வயதைக் குறைத்தால் மகளின் வயது வரும். மகளின் வயதில் இருந்து நான்கைக்கழித்தால் கடைசி மகளின் வயது பெறப்படும். தாயின் வயது 28 ஆயின். கடைசி மகளின் வயது யாது?

09.




கூட்டினுள் இடவேண்டிய எண் யாது?

10. A, B, C, D, இல் எத்தனை எழுத்துகள் உள்ளன?

**பொதுப் போட்டிப் பரீட்சைக்கும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கும் உதவக் கூடியது.**

இங்கு தரப்படுகின்ற பொது அறிவு, விவேகம் சம்பந்தமான கேள்விகளுக்கு தபால் அட்டையில் சரியாக விடை எழுதி (20.04.2016) இக்கு முன்னர் 4ஆம் பக்க முகவரிக்கு அனுப்பும் வாசகர்களில் முதல் மூன்று அதிஷ்டசாலிகள் தெரிவுசெய்யப்பட்டு முறையே ரூபா 300, ரூபா 250 மற்றும் ரூபா 200 பெறுமதியான பணப்பரிசில்கள் வழங்கப்படும்.

அனுசரணை

**SAIFI TRADING COMPANY**

**IMPORTERS OF PAPER & BOARD**

**No. 96, New Moor Street, Colombo - 12.**

**பொது அறிவுத் தொடர் - 13 இல் வெற்றியீட்டியவர்களும் அவற்றிற்கான விடைகளும்**


01 ஆம் பரிசு : எஸ். வானதி (புதுக்குடியிருப்பு)
02 ஆம் பரிசு : பி. கிசானி (கிளிநொச்சி)
03 ஆம் பரிசு : பா. மதுசன் (வவுனியா)

01. நாக்கு ரேகைகளும் 02. சுவீடனில் 03. லியானார் டா வின்சி 04. uncopyrightable 05. 200 டிகிரி 06. வைட்டமின் கே 07. இருபத்தொன்பது 08. 3 ஆண்டுகள் 09. உளுந்து 10. லிதியம்

# முன் பள்ளி மாணவர்களுக்கான வர்ணம் தீட்டும் போட்டி

முன்பள்ளி மாணவர்களின் வர்ணம் தீட்டும் ஆற்றலை மேம்படுத்தி அவர்களது திறமைகளை ஒளிஅரசி மூலம் சான்றுப்படுத்துவதற்காக இப் போட்டி இம் மாதம் முதல் பலரது வேண்டுகோளிற்கிணங்க மீண்டும் ஆரம்பிக்கப்படுகிறது.

இதன்படி கீழ் உள்ள ஓவியத்திற்கு வர்ணக்கட்டிமூலம் அழகாக வர்ணம் தீட்டி அனுப்பும் முதல் 50 பேருக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படும். உங்கள் ஓவியங்களை 30.04.2016 இற்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு 4ஆம் பக்கத்தில் உள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.



COW

முன்பள்ளி ஆசிரியரின் ஒப்பம்.

.......................................

முன்பள்ளியின் பெயர்

.......................................

## போட்டிக்கான கூப்பன்

முழுப்பெயர் : ..........................................

..........................................

முகவரி : ..........................................

..........................................

..........................................

தொலைபேசி இல.: ..........................................

பெற்றோர் ஒப்பம் : ..........................................

..........................................